[1979 அக்டோபர் 27

நேற்றையதினம் அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவின் படி. பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானம் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை கொண்டு வர பேரவை அனுமதி அளிக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

''தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குழுறல் ஏற்படவும், அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது.''

அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களைத் தம் இருக்கையில் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(24-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்.)

தீர்மானத்தை முன்மொழிய பேரவை அனுமதி அளிக்கிறது. தீர்மானத்தை பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த பின், யாராவது ஒரு உறுப்பினர் வழிமொழிய வேண்டும். பின்னர் இன்று விவாதம் தொடரும்.

திரு. சி. ஆறுமுகம் : நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன், அதைப்பற்றி தாங்கள் ஒன்றும் குறிப்பிடவில்லையே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி என்னுடைய அறையில் வந்து கேளுங்கள்.

திரு. சி. ஆறுமுகம் : என்ன காரணத்திற்காக நீங்கள் அதை வாசிக்கவில்லை என்பதையாவது சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி என் அறைக்கு வந்து கேட்டால் சொல்லுகிறேன். பேராசிரியர் திரு. க.அன்பழகன் அவர்கள்.....

5. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குழுறல் ஏற்படவும், அவர்கள்

1979 அக்டோபர் 27]

கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்பு தெரிவிக்கிறது.''

என்ற இந்த கண்டனத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதை நான் வழிமொழி கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுவதற்கு முன் அவைக்கு ஓர் அறிவிப்பு.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

உ பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

20—10—1979 அன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்:—

27—10—1979.. (சனிக்கிழமை)	1 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கையை அளித்தல்.
	2 மற்ற அலுவல்கள்—அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்.
28—10—1979.. (ஞாயிறு)	விடுமுறை.
29—10—1979.. (திங்கள்)	காலையும் மாலையும் பேரவை கூடும். அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம்-மேலும் விவாதம்.
30—10—1979.. (செவ்வாய்)	1. கேள்வி நேரம் இல்லை.
	2. அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம்—29 ஆம் தேதி விவாதம் முடிவுறாவிட்டால்
	3. 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும்.
	4. மேற்படி நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல்.

31—10—1979.. (புதன்)	1. 1979-80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதமும் வாக் கெடுப்பும்—30 ஆம் தேதி விவாதம் முடிவுறாவிட்டால். 2. மேற்படி நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு. 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.
1—11—1979 .. (வியாழன்)	பக்ரீத்—விடுமுறை.
2—11—1979 .. (வெள்ளி)	1. நிதிஒதுக்க சட்ட முன்வடிவு—31 ஆம் தேதி நிறைவேற்றப்படாவிட்டால். 2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.
3—11—1979 .. (சனி)	அரசினர் சட்ட முன்வடிவுகள்.
4—11—1979 .. (ஞாயிறு)	விடுமுறை.
5—11—1979 .. (திங்கள்)	அரசினர் சட்ட முன்வடிவுகள்.
6—11—1979 .. (செவ்வாய்)	அரசினர் சட்ட முன்வடிவுகள்.

தேவையிருப்பின், பின்வரும் நாட்களுக்கான அலுவல்கள் குறித்துப் பிறகு முடிவு செய்யப்படும்.

பேரவை, வழக்கம்போல் காலை 9 மணி முதல் கூடும்.

(5) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

* திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மீது கண்டனம் தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழிந்து பேசுகிற இந்த வாய்ப்பு கிடைத்த நேரத்தில் பல்வேறு கண்டனத் தீர்மானங்கள் வெவ்வேறு கட்சிகளின் சார்பில் இந்த மன்றத்தில் தரப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்தக் கண்டனத் தீர்மானங்களை படித்த போது அந்தக் கண்டனத் தீர்மானங்களில் வருகிற கருத்துக்களின் சாரமாகத்தான் என்னுடைய கண்டனத் தீர்மானம் முன்மொழியப்பட்டிருக்கிறது என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

கண்டனம் என்பது ஒரு அரசாங்கத்தை நடத்துகிறவர்கள், செய்யத் தவறிய காரியங்களைச் சுட்டுவதற்கும், செய்யவேண்டிய காரியங்களை முறைப்படியே செய்யாமல் மாறுபட்ட முறையில் நடந்து கொள்வதையும், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைச் செயல்படுத்தாமல், சொன்ன கருத்துக்களை மாற்றிக் கொள்கின்ற ஒரு சூழ்நிலையில் அரசு நடைபெற்றுவருவதின் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற மக்களுடைய உணர்ச்சியைப் பிரதிபலிப்பதாகவே இந்தத் தீர்மானம் அமையும்.

[முற்பகல் 10-20.]

[பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

ஒருவேளை நம்பிக்கையில்லாத் தீர்மானமாக இந்தக் கருத்துக்களை வழங்கியிருக்கலாமே என்று யாரேனும் கருதக்கூடும். நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்ற அடிப்படையிலே பேசுவதைவிட, அரசாங்கத்தின் கருத்துக்களுக்கு அந்தந்த அடிப்படையிலே மறுப்புகளையும், புகார்களையும் எடுத்துக்காட்டுகிறபோது, அரசாங்கம் இந்த தீர்மான கருத்துக்களில் கொஞ்சம் நம்பிக்கை வைத்து, பரிசீலனை செய்யும் மனப்பான்மை பெறவேண்டும் என்ற காரணத்தினால், அவர்கள் அதை ஆராய்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இதனை ஒரு கண்டனத் தீர்மானமாக நான் கொண்டு வந்திருக்கிறேன்.

அரசாங்க நிர்வாக இயந்திரத்தை இயக்குவது என்பது ஒரு எளிதான, சாமான்யமான காரியமல்ல. ஆட்சியிலே இருந்தவர்களுக்கும், ஆட்சியிலே இருந்தவர்களை அணுகிக் கண்டவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும். அந்த இயந்திரம் ஒவ்வொரு நாளும் ஒழுங்காக இயங்கினால் தவிர, பொது மக்களுடைய நலனை பாதிக்கின்ற வகையில், மக்களின் குறைகள் கவனிக்கப்படாமல் எதுவும் முற்றுப்பெறாத நிலையில் அமைந்துவிடும் என்பது ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும். மக்களுடைய நிலைமைகளைக் கூர்ந்து கவனித்து, தெளிவாக ஆராய்ந்து சரியான முறையில் திட்டமிட்டு, அதை விவரமாகப் புரிந்துகொண்டு, நிறைவேற்றத் தக்கவர்களைக் கொண்டு, உரியவர்களைக் கொண்டு, ஆட்சிப்பொறுப்பிலே உள்ளவர்கள் தங்கள் கடமையை ஆற்றவேண்டும். காரணம், அப்படி இயங்காதபோது ஏராளமான மக்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில், அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில் 4—1/2 கோடி மக்கள் வாழ்கின்றார்கள் என்பதால் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற ஆற்றல் அரசுக்கு இல்லாமல் போய்விடும் என்பதை நான் பொதுப்படையாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

இன்று அரசு இயங்குகிறதா என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. அதனுடைய இயக்கத்தின் வேகம் குறைந்திருக்கிறது. என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசினுடைய பல்வேறு உறுப்புக்கள், பல்வேறு அங்கங்கள் ஆகியவற்றில் குறை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட சோர்வடைந்திருக்கிறார்கள். பல இடங்களிலே அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்ய முடியவில்லை என்று தெரிவித் திருக்கின்றார்கள் என்பதையும் நான் நினைவூட்ட வேண்டியது அவசியமாகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சோர்வு ஏற்படுமானால், அவர்கள் மூலமாக ஒவ்வொரு மாவட்ட நிருவாகமும் இயங்கவேண்டிய அளவுக்கு இயங்க முடியாமல் பல்வேறு துறைகளில் குறைகள் ஏற்படும். இந்தக் குறைபாட்டை மறைப்பதற்காக, மக்களிடையே பேசுகின்றபோது, எதிர்க் கட்சியிலே இருந்தவர்கள் 4 ஆண்டு காலத்திற்கு முன்னர் சரியாக ஆட்சி நடத்தாததினால் குறை ஏற்பட்டிருக்கிறது என்று பேசிக் கொண்டிருப்பது, நாம் உணவு பரிமாறும்போது, ஒழுங்காக பரிமாறாத காரணத்தினால், உண்பவர் குறை சொன்னால் நேற்று முன்னாள் சோறு போட்டவர் ஒழுங்காகப் போடவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நிலையை ஒக்கும். இந்தக் கதை கவைக்கு உதவாது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் மீது காழ்ப்புணர்ச்சியினாலே இந்தக் கருத்துக் களைச் சொல்வதாக அருள் கூர்ந்து அமைச்சர் பெருமக்கள் கருதத் தேவையில்லை. மக்களிடத்திலே கொண்டிருக்கின்ற கடமை உணர்ச்சியினாலே, அவர்களுக்கு ஆற்றவேண்டிய பணியின் காரணத்தினால் தான் இந்தக் கருத்துக்களைச் சொல்லவேண்டிய நிலைமை எழுகிறதே தவிர, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரண மாகவே இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்ல வேண்டு மென்று எங்களைத் தூண்டுவதாகக் கருதவேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் ஆற்றவேண்டிய கடமைகளை முறைப்படி ஆற்றாததன் காரணமாக, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாததன் காரணமாக இப்படிப்பட்ட குறைகள் ஏற்பட் டிருக்கின்றன.

கோப்புகளைப் பற்றி நாளும் பேசுவதாக இருக்கிறதே தவிர, கோப்புகள் அதிகமாக நகருவதில்லை. கோப்புகளைப் பார்ப்பதே முடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. நான் அமைச்சர் களைத் தனிப்பட்ட முறையில் குறை சொல்வதற்கில்லை. சில அமைச்சர்கள் மக்களை நெருங்குவதே இல்லை; சில அமைச்சர்கள் மக்களைச் சந்திப்பதே இல்லை; சில அமைச்சர்கள் தங்களைச் சந்திக்க வருகின்றவர்களைக் கண்டு அவர்களுடன் முறையாகப் பேசுவதில்லை; சில அமைச்சர்கள் தங்கள் துறையிலே ஏற்படுகின்ற குறைகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இந்தக் குறைகளுக்கு காரணமாக இருப்பவர்களைக் கண்டிப்பதும்

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

இல்லை. ஒரு எதிர்ப்பு உணர்ச்சி, ஒரு கசப்பு உணர்ச்சி, ஒரு அலுப்பு உணர்ச்சி, ஒரு சோர்வு உணர்ச்சி, ஒரு தூக்க உணர்ச்சி இந்த அமைச்சர் அவையை வாட்டிக்கொண்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வேளை யாருக்காவது உடல்நலக் குறைவு இருக்குமானால், அவர்களிடம் உள்ளபடியே நான் அனுதாபப்படுவேனே தவிர, அவர்களைக் கண்டிக்க மாட்டேன். உடல்நலக் குறைவு எல்லோருக்கும் வருகின்ற ஒன்றுதான். உடல்நலக் குறைவால் செயல்படாத நிலைமை வருமானால், நான் கண்டிக்க வில்லை.

மொத்தமாக இந்த அமைச்சரவை இயங்குகின்ற ஆற்றல் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நான் தெரிவிக்கும்போது முன்னவர் அவர்கள் அந்த இயங்குகின்ற ஆற்றல் இருந்தால் எவ்வளவோ பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று என்னைப் போன்றே கருதுவார்கள் என்று நம்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு சட்டம், ஒழுங்கு, அமைதி அடியோடு குலைந்து விட்டது என்று நான் சொல்லவில்லை, சீர் குலைந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். சட்டம் மக்களிடத்திலே ஒரு அழுத்தமான நம்பிக்கையை உருவாக்காவிட்டாலும் கூட, சட்டம் இயங்குகிறது என்ற தோற்றமாவது மக்களுக்கு இருக்க வேண்டும். சட்டம் அழுத்தமாக நம்பிக்கையைத் தரக்கூடியது. மக்களுக்கு ஒரு வேளை அச்சத்தின் காரணமாக சட்டத்தைக் கண்டு பயப்படக்கூடிய நிலைமை ஏற்படக்கூடும். அதை நான் கருதவில்லை. சட்டம் இயங்குகிறது. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், மக்களிடத்தில் தவறு செய்கிறவர்கள், அக்கிரமம் செய்கிறவர்கள், இடையூறு செய்கிறவர்கள், சமுதாயத்தை அரித்துக் கொண்டிருப்பவர்கள், சமுதாயக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை இன்றைக்கு மக்களுக்கு இல்லை. மக்களுக்கு அந்த நம்பிக்கை இல்லாததன் காரணமாக அவர்கள் மனதில் அமைதி இல்லை. பத்திரிகைகளில் எழுதுகிற கட்டுரைகளைப் படித்துப் பார்த்தால் கல்கத்தா பெரு நகரத்தில் ஏற்பட்ட பல்வேறு சமூக சிக்கல்கள் இன்றைக்குச் சென்னை நகரத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலும் பரவலாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அண்மையில் சேத்துப்பட்டில் ஒருபயங்கரமான கொலை நடைபெற்றிருக்கிறது. இன்னும் துப்புத் துலக்குவதற்கான வாய்ப்புக் கிடைத்ததாகக் கூட அறியக் கூடிய வாய்ப்பு எங்களைப் போன்றவர்களுக்கு இல்லை. இரண்டாண்டுகளுக்கு முன் அடையாற்றில் ஒரு அம்மையார் கொலை செய்யப்பட்டார். இது வரை துப்புத் துலக்கப்படவில்லை. துப்புத் துலக்குகின்ற நாய்களுக்கு அந்த ஆற்றல் போய்விட்டதோ என்னவோ தெரியவில்லை. காலம் கடந்த காரணத்தால் அந்த நாய்கள் இருந்தும் துப்பு கண்டுபிடிக்கப்படவில்லை. கொலை நிகழ்ச்சிகள் நடை

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

பெற்றுக்கொண்டிருக்கின்றன. திருவள்ளூர் பகுதியில் நடைபெற்ற தொலை நிகழ்ச்சி பற்றி இங்கே பேசப்பட்டது. அதுபற்றி எந்த ஒரு வழக்கும் இருப்பதாக தெரியவில்லை. வேறுபல நிகழ்ச்சிகளிலும், இந்தக் கொலை சம்பந்தமான வழக்குகளிலும் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டனர் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படாததன் காரணமாக பலாத்கார உணர்வு, வன்செயல் ஏன்னம் பரவலாக ஏற்படக்கூடிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படுகிறோம், நாட்டிலே அரசியல்வாதிகளுக்கு இடையே இருக்கிற கருத்து மாறுபாடுகள் எல்லாம் மிகச் சாதாரணமாக ஆகிற அளவுக்கு மிகச் சாதாரணமாக தமது வன்முறை செயல் அடிப்படையில் சமுதாயத்தில் சிலபேர் தலை தூக்கமுடியும், மற்றவர்களை அடக்கி வைக்க முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதைச் செய்வது யார்? நக்சலைட்டுகள் என்று சிலர் சொல்லுகிறார்கள். யார் செய்வது என்று தெரியாத அளவுக்கு இவ்வளவு பயங்கரமான நிகழ்ச்சிகள், வெட்டிக் கொல்லப்படுகிற நிலைமைகள், துண்டு நோட்டீஸ் வீசப்படுகிற முறையோடு பாதையில் செல்லுபவர்கள் படுகொலைக்கு ஆளாகிறார்கள். இந்தச் சூழ்நிலை தமிழ்நாட்டில் வளர்ந்து வருவதன் காரணமாக சட்டம், ஒழுங்கு அமைதி காப்பாற்றப்படாததன் காரணமாக மக்களுடைய உள்ளத்தில் அமைதி இருக்க முடியாத அளவுக்கு, நிம்மதி இருக்கமுடியாத சூழ்நிலை உருவாகியிருக்கிறது, இந்தச் சூழ்நிலை வராமல்தடுக்க காவல்துறை பொறுப்பிலுள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்? அங்கே பலதுறையாக இலாக்காக்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றது. புதிய ஐ.ஜீக்கள் பலபேர் நியமிக்கப்பட்டிருந்தாலும் தகுதிகள் உயர்த்தப்பட்டாலும், தரம் உயர்த்தப்பட்டவில்லை என்ற காரணத்தால் காவல் துறையின் தரமும் குறைந்து போகிறதோ என்று சந்தேகப்படுகிற அளவுக்கு, கடமையுணர்ச்சி காவல்துறையிலுள்ள சிலபேரிடத்தில் மங்குகிறதோ என்று கருதக்கூடிய அளவுக்கு, தமிழ்நாட்டு காவல் துறையின் இறமை ஏற்கனவே இருந்த அளவுக்கு இன்றைக்கு காப்பாற்றப்படவில்லை. கடமைகளை நிறைவேற்றாவிட்டால் தங்களது தகுதி போய்விடும் என்று எண்ணக்கூடிய நிலைமை இல்லை. எனவே, தமிழ்நாட்டில் சட்டம் சரியாக்கச் செயல்படவில்லை, ஒழுங்கு காப்பாற்றப்படவில்லை, மக்களிடையே அமைதி நிலவ வாய்ப்பு இல்லை. இந்தப் பொதுவான சூழ்நிலைகளில் தனிப்பட்ட பல்வேறு பிரிவினராக வாழ்கிற மக்களுடைய குறைகளை அரசு கூர்ந்து கவனித்துச் செயல்படுகிறதா என்று கேட்டால் அதுவும் இல்லை.

கடந்த ஆறு மாதத்திற்கு முன்னர் முகவை மாவட்டத்தில் காரைக்குடியில், ஊஞ்சலூர் வட்டாரத்தில் வகுப்பு அடிப்படையில் தோன்றிய கலவர உணர்ச்சி இன்றைக்குக்கூடத் தலைகாட்டுகிறது என்று பத்திரிகையில் வருகிற செய்தியைப் பார்த்து வேதனைப்படுகிறேன். வகுப்புக் கலவரம் நடைபெறுகிறது, தந்தை பெரியார் பிறந்த நாட்டில், பேரறிஞர் அண்ணாவின் பகுத்தறிவுக் கருத்துக்கள் உலவிய இந்த நாட்டில், திராவிட

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

முன்னேற்றக் கழகம், பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று கட்சிகள் பிரித்து வளர்ந்த பின்னரும் வகுப்புக் கலவரம் — அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடக்கிற இந்தக் காலத்தில்— ஜாதி அடிப்படையில், தீண்டாமை அடிப்படையில், மத அடிப்படையில் இப்படிப்பட்ட கலவரம் வளர்ந்து அந்த வட்டாரத்தில் வாழ்கிற மக்கள் எல்லாம், அச்சத்திற்கும் பீதிக்கும் ஆளாகியிருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளர்களுக்கு நினைவூட்டுகிறேன்.

[முற்பகல் 10-30]

யார் செய்வது அக்கிரமம் என்பதை அரசுத் துறையிலே உள்ள வர்கள் கவனித்துத் தடுக்கக் கூடிய முற்றல் இருந்திருக்குமானால் இந்த நிலைமை ஏற்படாது. ஏதாவது ஒரு சாரார் அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்கு முக்கியமல்ல— அவர்கள் தமிழ்நாட்டுக் குடிமக்கள்— அந்தக் குடிமக்கள் தாங்கள் வாழ வேண்டுமா இல்லையா, பெண்கள் வீட்டிலே இருக்க வேண்டுமா, கூடாதா, வீட்டிலே பண்டம் பாத்திரங்கள் இருக்க வேண்டுமா, கூடாதா என்று கருதக்கூடிய நிலைமை உருவாகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு சாரார் இன்னொரு சாரார் வீட்டிலே புகுந்து ஏறத்தாழ 8,10 லட்சம் ரூபாய் அளவிற்கு நகைகளைக் கொள்ளை அடித்துக் கொண்டு போகக்கூடிய நிலைமையும் வகுப்பு கலவரம் என்ற அடிப்படையில், ஜாதி வெறியில் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. கொள்ளை அடிக்கிறவர்கள், இந்த காரணங்களைப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளை அடிக்கிறார்கள். பலாத்காரவாதிகள் இந்த ஒரு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தக் கூடும். அவர்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய பேராற்றல் படைத்திருக்க வேண்டிய காவல் துறை ஏன் இயங்க முடியாத ஒரு கட்டத்திலே இருக்கிறது என்பதையும்—இன்றைக்கு நடைபெறுகிற காவல்துறை வேலை நிறுத்தத்தை வைத்து நான் சொல்லவில்லை —வேலை நிறுத்தம் இல்லாமல் இருந்தாலும் கூட, காவல் துறையின் முக்கியமான பொறுப்பிலே உள்ளவர்கள் மூலமாக ஆற்றப்பட வேண்டிய கடமையை இந்த அரசாங்கம் ஆற்றியிருக்கிறதா என்பதையும் நான் கேட்க விரும்புகிறேன்.

நான் குற்றஞ்சாட்டுவதற்காகச் சொல்லவில்லை. குறைகள் களையப் படுவதற்கும் இப்படிப்பட்ட குறைகள் இனியாவது ஏற்படக்கூடாது என்பதற்கே. தர்மபுரி மாவட்டத்திலே நடை பெற்ற கலவரத்தின் விளைவாக அந்த வட்டாரத்து மக்களின் உள்ளத்திலே இன்றைக்குக்கூட பெருங்கவலை ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையோர் பாதுகாப்பு பற்றிப் பேசினால் பெரும் பான்மையோர் சமுதாயத்தில் உள்ள சிலருக்கு ஆத்திரம் வரக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. நியாயத்தைப் பேசினால்கூட ஜாதி உணர்வு என்று ஆத்திரப்படு கிறார்கள். கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஒரு பிரிவும் இன்னொரு பிரிவும் மோதிக் கொள்கிற நிலைமை பேரணாம்

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

பட்டிலே ஏற்பட்டிருக்கிறது, தர்மபுரி வட்டாரத்திலே வந்திருக்கிறது, முகவையிலே ஒரு கோடியிலே வந்திருக்கிறது, இன்னும் சில இடங்களிலே ஏதோ ஒரு வடிவிலே புகுந்துக் கொண்டிருக்கிறது. இவைகளை களைவதற்குக் யாராலே முடியும்? யார் இவைகளைத் தடுப்பது? இந்த அரசாங்கம் அவைகளை தடுப்பதற்கு அந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அளவிற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளாத காரணத்தால், அவைகளைக் கண்டித்துப் பேசக்கூட அமைச்சர்கள் முன்வராத காரணத்தால் மக்களைப் பாதுகாப்பதற்கு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த அரசு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிற போதுகூட பெரியார் அவர்கள் அழுத்தமான எண்ணங்களை, கொள்கைகளை, அந்த வட்டாரத்து மக்களிடையே ஏற்படுத்தும் முயற்சியில் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம், கொள்கை எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இருக்க வில்லை. இன்னும் ஒரு படி மேலே செல்ல விரும்புகிறேன். ஆளுங்கட்சியின் செல்வாக்குப் பெற்ற சிலர், நான் எம். எல். ஏ. க்கள் என்று சொல்லவில்லை, எம். பி.க்கள் என்று சொல்லவில்லை, யார் என்று அரசாங்கம் அவர்களுக்கு வந்த குறிப்புகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். எங்களால் தெரிந்து கொள்ள முடிகிறபோது அவர்களுக்கு அது தெரியவில்லை என்று அவர்கள் சொல்லமாட்டார்கள். ஆளுங்கட்சியின் செல்வாக்குப் பெற்ற சிலர் அதற்குக் காரணமாக இருப்பார்களானால் அந்த முறை ஆளுங்கட்சிக்கேகூட எவ்வளவு கேடானது என்பதை அவர்களிடம் உணர்த்துவதற்கோ, அவர்களை ஆளுங்கட்சியிலிருந்து அகற்றுவதற்கோ ஆளுங்கட்சி ஏன் நடவடிக்கையை எடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் எங்கே போய் முடியும்? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ அல்லது காங்கிரஸ் கட்சிக்கோ இது ஒரு இழப்பு என்று நான் கருதிப் பேசவில்லை. தமிழ்நாட்டிற்கு பொது மக்களுக்கு ஏற்படும் மாபெரும் இழப்பு என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்துச் சொல்லவிரும்புகிறேன். இந்த அரசு ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்டு செயல்படுகிறது என்று நடைமுறையில் நடத்திக் காட்ட வேண்டும். ஜனநாயகம் என்பது சட்டமன்றம் கூடுகிறபோது ஏதோ எதிர்க்கட்சிகளும், ஆளுங்கட்சியும் பேசுகிற பேச்சிலே மட்டும் உருவாகிவிடுவதில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானால் ஜனநாயக மனப்பான்மை மக்களிடத்திலே இடம் பெற வேண்டும். ஜனநாயகத்தில் தமது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளும் மனநிலை மக்களிடத்திலே

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

ஏற்படவும் சமுதாயக் கூட்டு உணர்வு பெற்று தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும், மாற்றுக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் உரிமையை தாராளமாக வழங்கவும் முன் வரும் மனப்பான்மை மக்களிடத்தில் இடம் பெற்றாக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வெற்றிபெறும் என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் ஜனநாயகத்தின் அடிப்படையிலே ஆட்சிக்கு வந்த அரசாங்கம். ஜனநாயகம் முறைப்படி ஆட்சிக்கு வந்தாலும் ஜனநாயகத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிற பல அமைப்புகளைப் பற்றி அது கவலைப்படவில்லை. பாராளுமன்றத்திற்குத் தேர்தல் நடத்தப்பட்டு, ஆட்சிக்கு வருகிறவர்களாலே சட்டமன்றத்திற்குத் தேர்தலே நடத்தப்படாமல் விட்டு விடப்படுமானால் எப்படிப்பட்ட நிலைமைக்கு நாம் ஆளாவோமோ அதைப்போல் சட்டமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்று வந்திருக்கின்ற நாம் சென்னை மாநகராட்சிக்கான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டை இவ்வளவு காலமாகச் செய்யவில்லை. இப்பொழுது இடையிலே நாடாளுமன்றத் தேர்தல் வருகிற நிலைமையிலே இன்னும் இரண்டு மாத கால அவகாசம் கிடைக்கிறது. அது வேறு, ஆனால் மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்திய அந்த நேரத்திலேயே சென்னை மாநகராட்சிக்கும் தேர்தல் நடத்துவதற்கு நீங்கள் முன்வரவில்லை.

ஊராட்சி மன்ற ஒன்றியங்கள் என்ற பெரிய அமைப்பு, மாவட்ட அமைப்புக்கு அடுத்த நிலையிலே மக்களுக்காக செயல்பட்டு கொண்டிருந்த அந்த அமைப்பு இப்பொழுது செயல்படவில்லை. அவைகளும் கலைக்கப்பட்டு விட்டன.

அடிமட்டத்திலே இருக்கும் கிராமங்களில் ஏற்படுகின்ற சிறு சிறு குறைகளை நீக்க, அதிலும் குறிப்பாக சாலை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் நேரத்தில் அதைப்பற்றிச் சொல்வதற்கு வாய்ப்பாக இருந்த சாதாரண பஞ்சாயத்துக்கள்கூட இந்த ஆட்சியிலே கலைக்கப்பட்டிருக்கின்றன என்றால், அதுவும் அவசரச் சட்டம் கொண்டு வந்து செய்யப்பட்டிருக்கிறது என்றால், அதைப்பற்றிக் கேட்டால் ஒரு பெரியவர் சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். கிராமங்களில் பல்புகள் இல்லை என்று சொல்கிறார்கள், ஆகவே பஞ்சாயத்து அமைப்பை கலைத்து விட்டதாகச் சொல்கிறார்கள். பல்புகள் இல்லை என்பதற்காகப் பஞ்சாயத்துக்களைக் கலைக்கிற நேரத்தில், சட்டசபையிலே ஒரு நாளைக்கு விளக்குகள் எரியவில்லை என்றால் சபாநாயகருக்கு இனி வேலை கிடையாது, சட்டமன்றம் கிடையாது என்று தீர்மானிக்கும் நிலைமையை ஒத்ததாகும். ஒரு வேளை பாராளுமன்றத்தில் விளக்குகள் எரியவில்லை என்றால் உடனே பாராளுமன்றத்தைக் கலைப்பது நல்லது என்று எண்ணும் நிலைமை ஏற்படும். எனவே அப்படிப்பட்ட ஒரு நியாயத்தை தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

பஞ்சாயத்துக்களைக் கலைத்த பிறகு இப்பொழுதும் விளக்கு எரியவில்லை ; பல்புகள் இல்லை. பல்புகள் இல்லாததற்கு என்ன காரணம் என்று அந்த இலாக்காவைக் கேட்டால்

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்வார்கள். ஒரே கம்பெனியிலே வாங்க வேண்டுமென்று சொல்வதால் அப்படி வாங்க இயலவில்லை என்று சொல்வார்கள். இதனால் யார் இலாபம் பெறுகிறார்கள் என்று தவறாகக் கருதவில்லை. நல்லெண்ணத்திலே கூட ஒரே கம்பெனியைச் சொல்லியிருக்கலாம்; அவர்கள் மிக நல்லவர்களாக இருக்கலாம். எனவே, அதன் காரணமாகப் பல்புகள் வாங்க வில்லை என்ற பிரச்சினை வருகிறது. அல்லது வேறு சில நிர்வாகக் குறைபாடுகள் இருக்கலாம். அதற்காக பஞ்சாயத்துக் களைக் கலைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்திற்கு என்ன அவசியம் வந்தது? அப்படிப்பட்ட அவசியம் வந்ததற்கும் பல்புகள் அல்ல காரணம். உணவுக்கு வேலை, உணவுக்குப் பணி என்று பஞ்சாயத்து மூலம் நிறைவேற்றும் ஒரு திட்டம் இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர் இருந்தால் ஓரளவுக்கு அவர் மக்களுக்குப் பொறுப்பாக இருந்து முறையாகப்பங்கிட்டு வேலை வாங்க வேண்டிய நிலைமை இருந்திருக்கும். இந்த உணவுப் பங்கிடுவதில் ஒரு கதை உண்டு. நரி அல்லது பூனை பங்கிட்ட கதை என்று சொல்வார்கள். (குறுக்கீடு) குரங்கு, பூனை, அப்பம் என்று அவர்கள் அந்த கதையைச் சொல்கிறார்கள். திரு. சோமு அவர்களுக்கு இது நன்றாகத் தெரிகிறது. இப்படி அப்பம் பங்கிட்ட கதையைப்போல் ஒரு சிலர் பங்கிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றார்கள் ; மூட்டை மூட்டையாகக் கொண்டு போனார்கள் என்ற செய்தி பத்திரிகையிலே வருகிறது. இது தாம்பரம் பக்கத்திலே நடந்திருக்கிறது சென்னைக்குப் பக்கத்திலே 22-வது மைலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கதை திருநெல்வேலி, பாளையங்கோட்டை வரையிலே இருக்கக் கூடும். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் பொழுது பஞ்சாயத்துத் தலைவர் இருந்திருந்தால் திருட்டுப் போன செய்தியையாவது சொல்வார்கள். அப்படிப்பட்ட பஞ்சாயத்துத் தலைவரை எடுத்து விட்டதால் இப்படிப்பட்ட திருட்டுகள் நடைபெறுவதைப்பற்றி எந்தவிதமான உண்மை விளக்கமும் வெளியிலே வரக்கூடாது, இந்த அரசாங்கம் எப்படி உணவைப் பங்கிடுகிறது. இதைப்பற்றிக் கண்காணிக்கும் பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட யாருக்கும் இருக்கக் கூடாது என்பதற்காகப் பஞ்சாயத்து நிர்வாகத்தைக் கலைத்திருக்கிறது என்று குற்றஞ் சாட்டுகிறேன். பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு இந்தப் பஞ்சாயத்துக்களைக் கலைத்திருந்தால்கூட அதை வரவேற்றிருக்கலாம். அப்படித் தேர்தலை அறிவிப்பதற்கான வாய்ப்பும் இன்று இல்லை. பஞ்சாயத்து யூனியன்களில் செயல்பட மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்களுக்கு வாய்ப்பு இல்லை. இப்படிப்பட்ட நிலையிலே ஜனநாயகத்தின் அடித் தட்டையே கலைத்திருக்கி றீர்கள், அதற்கு என்ன அவசியம் வந்தது ? என்ன அவ்வளவு பெரிய நெருக்கடி ஏற்பட்டு விட்டது? ஏன் அவசரப்பட்டு கலைத் தீர்கள்? இந்த ஆட்சியில் கிராமங்களைக் கவனிப்பதில் நிர்வாக அதிகாரிகள் திறமையாக வேலை செய்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா ? காட்டிலாக்காவில் வேண்டுமானால் அக்கறை செலுத்துபவர்கள் இருக்கலாம், மரம் வெட்டும் இடத்தில் வேண்டு

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

மானால் அக்கறை செலுத்துபவர்கள் இருக்கலாம். மற்றபடி சாதாரணமான ரோடு போடும் இடத்தில் அந்த அக்கறையைக் காணோம். இலட்சக் கணக்கான ரூபாய் செலவாகும் திட்டங்களில் அதிகாரிகளுக்குத் தனி அக்கறை வருகிறது. ஆனால், ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகும் திட்டத்தில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை. இப்படிப்பட்ட அதிகாரிகளிடம் அமைச்சர்கள் என்ன கருதுகிறார்களோ தெரியவில்லை, நாங்கள் ஏன் இந்தச் சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்று சொல்லும் மனப்பான்மை இருக்கிறது. ஆகவே, ஜனநாயக அடிப்படையினை காப்பாற்ற வேண்டிய நீங்கள் அவ்வாறு காப்பாற்றவில்லை, அப்படிப்பட்ட ஒரு கொள்கையில் நீங்கள் செயல்படவில்லை, தவறான நோக்கத்திற்காக, காரணங்களுக்காக இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தவறான அடிப்படையிலே இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அது உங்கள் அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட கொள்கை அல்ல, ஆளுங்கட்சி ஏற்றுக்கொண்ட கொள்கை அல்ல. உங்கள் வசதிக்காக அவைகள் கலைக்கப் பட்டன. மத்திய அரசு நியமித்த பஞ்சாயத்து ராஜ் கமிட்டி ஜனநாயக அமைப்பில் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று அசோக்மேத்தா தலைமையிலே உள்ள அந்தக்கமிட்டியில் தெரிவித்தது. அதில் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு உறுப்பினர். எம். ஜி. ஆர். உறுப்பினராக இருந்த அந்தக் கமிட்டி அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்தது. தலை மயிர் அதிகமாக வளர வேண்டுமானால் முதலில் மொட்டை அடித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்வார்கள். திருப்பதிக்குப் போய் வருபவர்கள், நன்றாக வளரும் என்று சொல்வார்கள். இப்பொழுது முதல் காரியத்தை இந்த அரசு முடித்திருக்கிறது. இரண்டாவது காரியம் எப்பொழுது நடக்கும் என்று தெரியவில்லை.

[முற்பகல் 10—40]

பொதுவாக இன்றைக்கு ஜனநாயக அமைப்பிலே பல்வேறு பகுதிகளிலே மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக இருந்த கமிட்டிகள் பல இன்றைக்குச் செயலற்றுப் போய்விட்டன. அவைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளே கிடையாது. நீங்கள் விரும்புகிற பிரதிநிதிகளையாவது போட்டுக் கொள்ளுங்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாவது 10 பேர்கள் இருந்தால் அவர்களுக்கு 4 பேர் பல்வேறு கட்சிகளிலே நண்பர்களாக உள்ளவர்கள் அந்தக் குறைகளை அவர்களிடத்திலே சொல்வார்கள். நீங்கள் ஆளுங் கட்சிக்காரர்களைப் போடுவதிலே கூட எனக்கு வருத்தம் இல்லை. யாரையாவது மனிதர்களை நியமியுங்கள். அப்படிப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத நிலையில் தாலுகா வாரியாக உள்ள கூட்டுறவு நிலவளவங்கிகள் கலைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பிரதிநிதிகள் கிடையாது. தமிழகத்திலே உள்ள பல கோயில்களுக்கு இன்

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

னும் அறங்காவலர்களே நியமிக்கப்படவில்லை. அறம் எப்படியோ காப்பாற்றப்படுகிறது. அது வேறு. அறங்காவலர்களை நியமிப்பது ஓரளவு முறையாக காரியங்கள் நடக்கத் துணை செய்யும். பல கோயில்களிலே அறங்காவலர்கள் இல்லாமல் இருப்பது, அரசாங்கத்திற்கு தான் குறைகளின்றி கவனிக்கக் கூடிய ஒரு வாய்ப்பு. உண்மைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு அறவே இல்லாமல் செய்துவிடும்.

மாவட்ட மத்திய கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்குச் செயல்படவில்லை. மாவட்டத் தாழ்த்தப்பட்டோர் நலக்குழு நடப்பதே கிடையாது. மக்கள் பிரதிநிதிகள் அதில் இடம் பெறவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் மாதந்தோறும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடக்க வேண்டியது. அதுவும் மாதந்தோறும் நடப்பதில்லை. பொதுவாக, எல்லாக்கூட்டுறவு அமைப்புகளும் 3 ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதிகளைப் பெற்றிருக்கவில்லை. அதிலே இரண்டு ஆண்டுக்குத்தான் நாங்கள் பொறுப்பு என்று சொல்லக்கூடும். அந்த அளவுக்கு ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்குமானால், அதே நிலையில் பஞ்சாயத்து யூனியனும் இல்லை, பஞ்சாயத்தும் இல்லை, சட்டமன்றம் ஒன்றுதான் இருக்கிறது. இந்தச் சட்டமன்ற மாவது நிலைத்திருக்க வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். ஏனென்றால், நான் பிரதிநிதி. ஆகவே, அந்த அளவுக்கு ஒரு நிலைமை வளரலாமா என்பதை உள்ளபடியே, ஜனநாயகத்தில் ஆர்வமுடையவர்கள் எண்ணிட வேண்டும். (குறுக்கீடு) நான் இருப்பேன் என்பதற்கு நிச்சயமான நம்பிக்கை இருக்கிறது என்று மனோகரன் அவர்கள் சொல்கிறார்கள். ஒருவேளை இடம் மாறி வரலாம். நான் சார்ந்திருக்கிற கட்சியே இடம் மாறி அமரும் காலம் வரும். ஆகவே, அப்பொழுது அப்படி இடம் மாறி இருக்க வேண்டிய நிலைமை வருமானாலும் நான் இருப்பேன் என்றுதான் நண்பர் மனோகரன் அவர்கள் சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், தெளிவாக ஒன்றை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு இந்த அரசாங்கம் பஞ்சாயத்துக்களே இல்லாமல் பஞ்சாயத்து ஒன்றியமும் இல்லாமல், அந்தச் சூழ்நிலையில் மக்களுடைய குறைகளை அறிந்து மாற்றக்கூடிய வாய்ப்பு பெறாமல் இருக்கிறது. ஆனால், நம்முடைய முதலமைச்சரவர்கள் அண்மையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு நிகழ்ச்சியிலே பேசுகிறபொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே பட்டாக்கள் வழங்கியது என்பது, அதுவும் உழுவடை செய்வதற்கான நிலப்பட்டாக்கள் வழங்கியது என்பது முழுவதும் உண்மை அல்ல, அல்லது பெரும்பான்மையானது உண்மை அல்ல என்ற கருத்துப்பட பேசியிருக்கிறார்கள். அவருடைய கருத்தைப் புரிந்து கொள்ள நான் முயற்சித்தேன். உழுவடை நிலங்கள் அளிக்கப்படுவது என்பதும் குடியிருப்பு பட்டா மனுக்கள் அளிக்கப்பட்டது என்பதும் ஒன்று, இலட்சக்கணக்கில் இருந்தால், ஒன்று ஆயிரக் கணக்கிலே வரும். இரண்டும் வெவ்வேறு. குடியிருப்புப் பட்

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

டாக்கள் உரிமையாக்கப்படுவதைப் போல் உழுவடை நிலங்கள் அல்லது உழவுக்காக நிலங்கள் வழங்குவது என்பது அந்த அளவுக்கு எண்ணிக்கையிலே இராது. ஆனால், அதிலே குறைபாடு இருக்குமானால் ஒவ்வொரு மாவட்டத்திலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத்தான் அது நடைபெற்றது. அன்றைக்கு ஒரு ஆட்சித் தலைவர், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்து வழங்கியதெல்லாம் குறை என்றால், இந்த அரசாங்கம் விசாரிக்க வேண்டும். ஒரு அமைச்சரோ, முதலமைச்சரோ அல்லது இன்னொரு துறை அமைச்சரோ அல்லது நிலவரித் துறை அமைச்சரோ நேரடியாக வழங்குவதல்ல. ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எந்தெந்த நிலம் உச்ச வரம்புக்கு மேற்பட்டுள்ள நிலம் என்பதைக் கண்டுபிடித்து, அதை வழங்குகிற ஒரு முறை இருக்கிறது. அந்த முறைப்படி வழங்கப்படாவிட்டால் அதை விசாரிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வழங்கப்பட்ட பட்டா நிலத்தில் உழப்போனால் நிலம் வேறு யாருக்கோ சொந்தம் என்று தெரிகிறது—என்ற கருத்துப்பட கூறியுள்ளார். வேறு யாருக்கோ சொந்தமாக இருந்த நிலத்தை எடுத்துத்தான் உழவனுக்கு அந்த நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. ஒரு வேளை வசதி படைத்தவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் யாராவது தவறாக நடப்பார்களானால் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கம். அரசாங்கத்திற்கு அதற்குத் தகுதி இல்லையென்று சொன்னால், நிறமை இல்லையென்று சொன்னால் 3 ஆண்டுக்கு முன்னாலே, 4 ஆண்டுக்கு முன்னாலே, வழங்கப்பட்டதைப்பற்றி குறை மட்டும் பேசினால், குறை பேசுகிற ஒரு முதலமைச்சர் அதில் நிறைவு எப்படி செய்வது என்பதைக் காண வேண்டாமா? எனவே, அப்படி பல்வேறு குறைகள் ஏற்பட்டதை, இன்றைக்கு இந்த அரசு மாற்றாமல் இருப்பது அப்படி குறைகள் ஏற்பட்டிருந்தால், முறைப்படி விசாரிக்காமல் சரியான நடவடிக்கை எடுக்காமல், மக்களுடைய பிரச்னையைத் தீர்த்து வைக்காமல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசுத் தொழிலாளர்களுடைய உரிமையைப் பற்றி ஒரு நல்ல கொள்கை அடிப்படையிலே அணுகுவது இல்லை என்பதை இன்றைக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். இதற்கு முன்னாலே பல்வேறு கட்சித் தலைவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் உமாநாத் அவர்கள் கடந்த ஆண்டு இங்கே பேசுகிறபொழுது மிகத் தெளிவாக, திட்டவட்டமாகப் பேசினார். இந்த அரசு ஒன்றிரண்டு காரியங்களில் கொஞ்சம் முறையோடு நடப்பதற்கு முயற்சித்துப் பார்த்தது. அதற்குப் பின்னர் அந்த முறையோடு நடக்கிற அந்த வழிமுறையைக் கைவிட்டு விட்டு தவறான பாதையிலே செல்கிறது என்ற கருத்தை மிக விரிவாக விளக்கினார்கள். இன்றைக்கும் நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வது என்பது ஆசைக் காக செய்கிற ஒரு காரியம் அல்ல. ஒரு தொழிற் சங்கத் தலைவர் வேண்டுகிற காரணத்தாலேயே மட்டும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிற காரியத்தில் ஈடுபடமாட்டார்கள். பிரச்னை கள் வளர்கிறபோது, அவை தீர்க்கப்படாதபோது, ஊதிய உயர்வோ அல்லது வேலை அளவு முறைகளோ இவைகளெல்லாம் முறையோடு பேசித் தீர்க்கப்படாத காரணத்தால், கடைசிக் கட்டத்தில் தான் வேலை நிறுத்தத்திற்கு முற்படுகிறார்கள்.

அரசாங்கத்திலே ஒரு அவசரச் சட்டம் போடுவதன் மூலமே வேலை நிறுத்தம் செய்கிறவர்களை, தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிற உரிமை தடுக்கப்படுவதற்கான ஒரு காரியத்தை நீங்கள் செய்து கொண்டு இருக்கிறீர்கள். வேலை நிறுத்தங்கள் நடைபெறாமல் இருக்க 1979 ஜூலை 13 ஆம் நாள் இன்றி யமையா பணிகள் பராமரிப்புக்கு ஒரு அவசரச் சட்டமும், 1979 ஆகஸ்ட் 22 ஆம் நாள் பிறப்பிக்கப்பட்ட தொழில் தகராறு அவசரச் சட்டமும், ஆகிய 2 சட்டங்களும் உண்மையிலேயே அவசரச் சட்டங்கள். அவசரம் என்பது சட்ட மன்றம் கூட முடியாத காரணத்தால் அவசரமாகப் போடப்பட்ட சட்டம் என்று பொருள் பட்டா லும்கூட தெளிவில்லாத காரணத்தால் அவசரமாகப் போடப்பட்ட சட்டம். அவைமுன்னவர் அவர் களை ஒன்று கேட்க விரும்புகிறேன்.

கடந்த முறை இதைப் போன்று ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அந்தச் சட்டம் தவறானது, முறையற்றது, நீதி தராதது, தொழிலாளர் உரிமையைப் பறிப்பது என்று அத்தனை எதிர்க்கட்சித் தலைவர்களும் இந்த சட்டமன்றத்திலே எடுத்துப் பேசி அந்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலே கொண்டு வந்துங்கூட நிறைவேற்றாமல் நாங்கள் இந்த அவசரச் சட்டத்தை லேப்ஸ் ஆக விடுகிறோம் என்று உறுதி மொழி கொடுத்தீர்கள். அந்த உறுதிமொழி ஒரு ஆண்டுக்குத்தானா அடுத்த ஆண்டுக்குக் கிடையாதா? அதே முறையில் இந்த அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன் வருவதானால் அவை முன்னவருக்கு இந்த அவையிலே என்ன மரி யாதை? முன்னவர் சொன்ன வார்த்தைக்கு என்ன மரியாதை— இது என்னிடம் கேட்க வேண்டிய கேள்வி—முன்னவர் அங்கே சொல்கிற போது லேப்ஸ் ஆக விட்டு விடுகிறோம் என்று சொல் கிற போது மாரலாக (moral) தார்மீக முறையில் ஒரு அரசாங்கம் செய்யக் கூடிய காரியமா இது? முன்னவர் சொல்கிறபோது, தொழிலாளர்களை நாங்கள் விரோதப்படுத்திக் கொள்ள விரும்ப வில்லை? ஆகவே கைவிட்டு விடுகிறோம்; அவர்களுடைய உரிமையைப் பறிப்பதற்கு நாங்கள் துணை நிற்க மாட்டோம் என்று இவ்வளவு பொருள்கள் இல்லையா? மார்ச், ஏப்ரல் மாதத்திலே கைவிட்டு விடுகிறோம் என்று ஒப்புக் கொண்டுவிட்டு மறுபடியும் ஜூலை, ஆகஸ்ட் மாதத்திலே—சில பேருக்கு வெயில் காலத்தில் ஏதோ கோளாறு வரும் என்று சொல்வார்களே அதுபோல—மார்ச், ஏப்ரலில் வராத கோளாறு ஜூலை, ஆகஸ்ட் டில் வந்துவிடுகிறது. எதற்காக இப்படி ஒரு அவசரச் சட்டம்?

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

அவசரச் சட்டம் போட்டு வேலை நிறுத்தம் செய்வதை உங்களால் நிறுத்த முடியுமா ? உங்களால் அல்ல, கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தாலும் முடியுமா ? வேறு யாராவது இன்னும் ஆற்றல் பெற்ற முதலமைச்சராக இருந்தாலும் முடியுமா ? அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தால் இப்படி ஒரு சட்டம் வருமா ?அறிஞர் அண்ணா பேரைச் சொல்லிக் கொண்டிருக்கிற நாம் தொழிலாளர் உரிமையை அடியோடு நசுக்குவதற்கான ஒரு சட்டத்தை தம்முடைய வாயால் பிரகடனப்படுத்துகிற போது வெட்கப்பட வேண்டாமா ? நான் தொழிலாளர்கள் சொல்கிற எல்லாக் குறைகளையும் நியாயமான குறைகள் என்று ஒப்புக் கொள்கிறவன் அல்ல. அரசாங்கத் துறையிலே உள்ளவர்கள் வேண்டிக் கொள்கிற எல்லாவற்றையும் நிறைவேற்றியவன் அல்ல. ஆனால் இப்படி ஒரு சட்டத்தை நீங்கள் வெளியிட்ட உடன் இதைக் கண்டித்து எல்லா தொழிற்சங்கத் தலைவர்களும் கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள். தொழிற்சங்கங்களின் பணிகளை அறவே ஒடுக்கும் நோக்கம் கொண்டதாக இருக்கிறது என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். முதலாளித்துவ சக்திகளின் கொள்ளை இலாப விருப்பத்தை நிறைவு செய்யும் அக்கிரமப் போக்கிற்கு உறு துணையாக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். தொழிலாளர்களின் கூட்டுபேர உரிமையைக் காக்கும் வல்லமையை அழித்து நசுக்கிவிடும் தன்மை உடையதாக இருக்கிறது என்று தெரிவித்து இருக்கிறார்கள். கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் இது நியாயம் இல்லை என்று. ஆளும் கட்சி என்ன செய்யப் போகிறது என்று கேட்கிறார்கள்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்பது பொதுவான ஒரு கொள்கை. நம்முடைய நாட்டிலே, ஜனநாயகத்திலே எப்படி 2 கட்சிகள் இருந்தால் போதும், 3 கட்சிகள் இருந்தால் போதும் என்று சொன்னாலும் இங்கே 10 கட்சிகள் இருக்கிறோமே அதே போல ஒவ்வொரு தொழிற்சாலையிலேயும் பல அமைப்புகளை உருவாக்கிட வேண்டிய நிலைமை உருவாகிவிடுகிறது. நாட்டு நிலைமையைப் பிரதிபலிப்பதாகத்தான் தொழிற் சங்கங்களும் இருக்க முடியும். ஒரு சங்கத்தை உடைப்பதற்காக இன்னொரு புதிய தொழிற்சங்கத்தை உருவாக்க வேண்டுமென்பது இந்த அரசினுடைய நடைமுறையாக ஆகியுள்ளது.

(முற்பகல் 10—50)

பெரும்பான்மையோர் இடம் பெற்று இருக்கும் தொழிற் சங்கத்தை எடுத்துவிட்டு, சிறுபான்மை சங்கத்தினரை அழைத்து, முறை தவறாக அவர்களை அங்கீகரிக்கிறேன் என்று சொல்லி, நிர்வாகம் சொல்கிற அடிப்படையில் ஒப்பந்தம் போடுகிற அந்த முறையை ஏற்பது வருந்தத்தக்கது.

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

நான் மேலும் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக 12 (3) செட்டில்மென்ட் பயன்படுத்தப்படுகிறது. தொழில் துறை அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் முன்பு தொழிலாளர்களுக்காக வாதாடி வந்தார்கள். இப்போது அந்த பாவத்தைக் கழிக்க முதலாளிகளுக்கு வாதாடிக் கொண்டு இருக்கிறார். அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு 12 (3) செட்டில்மென்ட் என்பது நிர்வாகத்தின் நோக்கத்தை நிறைவேற்ற உடந்தையாக இருக்கும் அரசுக்குச் சாதகமாக கையாளப்படுகிறது. அந்த நிலைமை வருத்தத் தக்கது.

சிம்கோ மீட்டர் தகராறில், அந்தப் போராட்டத்தை ஒடுக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் அனைவருக்கும் தெரியும். திரு. உமாநாத் அவர்கள் அந்தத் தொழிலாளர்களுக்காக எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்கள். ஆனால் அரசாங்கம் அந்தப் போராட்டத்தை ஒடுக்கப் பார்த்தது. அதனால் தொழிலாளர்கள்தான் கஷ்டப்பட்டார்கள் என்பது உண்மைதான். உங்களுக்கு ஒன்றும் கஷ்டம் வரவில்லை. தொழிலாளர்கள் கஷ்டப்பட்டாலும், அவர்கள் கேட்டதை கடைசியில் ஒப்புக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது அல்லவா? இன்று சேஷசாயி பேப்பர் மில்லில் ஒரு போராட்டம். எந்த அடிப்படையில் அந்தப் போராட்டம் நடக்கிறது? பெரும்பான்மையான தொழிலாளர்கள் இடம் பெற்று இருக்கும் சங்கத்தினர் நியாயமான கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்தினார்கள். ஒரு செட்டில்மென்ட் செய்து, 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தம் செய்ய வேண்டும் என்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. பேச்சு வார்த்தை இடையில் நின்று போய், மீண்டும் பேச வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது? இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களை அந்தத் தொழிற் சாலையைச் சேர்ந்தவர்கள் வந்து சந்தித்தனர். அவரும் போராட்டத்தை ஒரு நாளைக்கு நிறுத்துங்கள், பேச்சு வார்த்தை மூலம் நியாயமான உடன்பாட்டிற்கு வாருங்கள் என்று தெரிவித்தார். நியாயமான உடன்பாட்டிற்கு வருவதற்கு மாறாக இரவு 2 மணிக்கு அந்தத் தொழிற் சாலையில் இருக்கும் மைனாரிட்டி தொழிற்சங்கத்தை அழைத்து —இன்னும் சொல்லப்போனால் போகஸ் தொழிற்சங்கத்தை வைத்துக் கொண்டு 12 (3) செட்டில்மென்ட் இந்த நிருவாகம் போட்டு இருக்கிறது. இது நியாயம்தானா? அங்கே திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தைச் சார்ந்தவர்கள் 1,200 பேர் இருக்கிறார்கள். அந்தக் கட்சிக்கு என்று நான் இங்கே வாதாடவில்லை. அங்கே சி.ஐ.டி.யு. இருக்கிறது, ஏ.ஐ.டி.யு.சி. இருக்கிறது, ஐ.என்.டி.யு.சி. இருக்கிறது. அந்தத் தொழிற்சங்கங்களை எல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, சிறுபான்மையினராக இருக்கும் சங்கத்துடன் ஒப்பந்தம் போட்டு இருக்கிறார்கள். இதை அவர்கள் கேட்டபோது, முதலமைச்சர் சொல்கிறார், நான் அட்வகேட் ஜெனரல் அவர்களைக் கேட்டு, இந்தப் பிரச்சினையில் தீர்வுகாண வழி இருக்கிறதா, 12 (3) செட்டில்மென்டை கைவிட

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கிறேன், என்று சொல்லியிருக்கிறார்கள். 12 (3) செட்டில்மென்ட் மாற்றுவதற்கு அந்த முதலாளியும், நிர்வாகமும், ஒப்புக் கொண்டால் போதாதா ? ஒப்புக் கொள்ளச் செய்ய முடியாதா? ஆலோசனை பெற வேண்டுமா? கேட்டால் வழக்குப் போட்டு இருக்கிறது என்று காரணம் சொல்கிறார்கள். நீதிமன்றத்தில் வழக்கு வந்துவிட்டால், இந்த அரசாங்கம் ஒரு நடைமுறையை தற்போது கையாண்டு வருகிறது. யாராவது ஒரு மாணவர் இடம் கிடைக்காதவர் ரிட் பெட்டிஷன் கொடுத்தால், கல்லூரியில் அவனுக்கு இடம் கொடுக்கிறேன் என்று ஒப்புக் கொண்டு, உடனே சமாதான முடிவு என்று சொல்கிறார்கள். இது நல்ல முறையா? அரசாங்கம் செய்யும் காரியம் இப்படி இருக்கலாமா? அரசாங்கம் செய்த காரியம் முறையோடு இருந்தால், சரியாக இருந்தால், ரிட் பெட்டிஷன் போட்டால் அப்போது உண்மை நிலைமையை எடுத்து வைக்க முடியும். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது ரிட் பெட்டிஷன் வரவில்லையா ? எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டோமா ? அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எந்தக் காரியங்களிலும் குறை காணும் விமர்சனத்திற்கு ஆளாகாமல் இருக்கிற வகையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். அந்த முறையில் இருந்தால்தான் அரசாங்கத்தின் கொள்கைகளை முறைப்படி நிறைவேற்ற முடியும். இந்த ஆட்சி அண்ணா அவர்கள் பெயரால் இருந்து வருகிற அரசாங்கம். பெரும்பான்மையினரை ஒதுக்கி விட்டுவிட்டு, சிறுபான்மையினரை முறை தவறாக ஊக்குவிப்பது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சர் அவர்களை ஈரோட்டில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அப்படி சந்தித்துப் பேசிய பிறகும், ஒரு முடிவு காணாமல், அந்தப் போராட்டம் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது. 200—300 தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதுதான் அரசுக்குப் பெருமையா ? நான் உங்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். அரசாங்கத்தின் கொள்கையைப் பிரதிபலிக்கும் வகையில் காரியங்களைச் செய்யுங்கள். தொழிலாளர் உரிமை குறித்து உங்களுடைய மனப்பான்மையைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் காரியங்களைச் செய்யுங்கள். நீங்கள் வெளியிட்ட உங்களுடைய கொள்கைக்கு எதிரான வகையில், காரியங்களைச் செய்யாதீர்கள். அதனால் உங்களுக்கு எந்தவிதமான லாபமும் வரப் போவது இல்லை. அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தொழிற்சங்கத்தில் இருக்கின்றனர். அங்கே சி.ஐ.டி.யு., ஐ.என்.டி.யு.சி. என்று தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அவர்கள் எந்த அளவு நசுக்கப்பட்டாலும், அல்லது ஒருவேளை அவர்கள் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அதில்தான் இருப்பார்கள். நீங்கள் சலுகை காட்டுகிறீர்களே என்பதற்காக உங்கள் கட்சிக்கு வர மாட்டார்கள். நீங்கள் எதைச்

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 10

செய்தாலும், அதற்காக அஞ்சி, ஒடுங்கி, நடுங்கி தமது கட்சியை விட்டுவிட மாட்டார்கள். ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஒரு திட்டவட்டமான அரசியல் கருத்து இருக்கும். இருக்கக் கூடாது என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இங்கேயுள்ள சிலர்கூட தொழிலாளியாக இருந்து சட்டமன்றத்திற்கு வந்தவர்கள்தான். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த அரசாங்கம் தவறான எண்ணம் கொண்டு இருக்கிறது. அதிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதாக ஒரு கருத்து வந்து இருக்கிறது. எந்தத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் நடைபெற்றாலும், அங்கே தொடர்ந்து பணியாற்ற புதிதாக படித்த, இளைஞர்களுக்கும் படிக்காத இளைஞர்களுக்கும் வேலை கொடுக்கப்படும். மாண்புமிகு முன்னவர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஐ. எல். ஓ. தீர்மானம் கருங்காலிகளை வளர்க்கும் முறையைக் கண்டிக்கிறது. ஆனால் முதலமைச்சர் என்ன சொல்கிறார். படித்தவனையும் கருங்காலி ஆக்குவேன், படிக்காதவனையும் கருங்காலி ஆக்குவேன், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பேன் என்று தெரிவித்து இருக்கிறார். நீங்கள் அவர்கட்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியும். ஆனால் வேலை நிறுத்தம் வாபஸ் ஆன மறுநாள் அவர்கள் ஊருக்குத் திரும்பிப் போகவேண்டாமா? வேலைநிறுத்தம் ஏற்படுகிறபோது சில கசப்பு உணர்ச்சிகள் ஏற்படுவது இயற்கை. அதைத் தீர்ப்பது அரசாங்கத்திற்குப் பெருமை. அதற்கு மாறாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், கசப்பு உணர்ச்சி வளராதா? ஒரு 10 ஆண்டு காலத்திற்கு முன்பு 3 ரூபாய் சம்பளத்திற்கு வேலைக்கு வந்தவன், சில ஆண்டுகள் கழித்து நாலு ரூபாய் பெற்று, 5 ரூபாய் வேண்டும் என்று இன்று கேட்டு போராடினால், அவனை ஒழித்து விட்டு 4 ரூபாய் கூலிக்கு வேறு ஆட்களை வைக்கிறேன் என்றால் அது ஜனநாயகமா? அல்லது மனிதத் தன்மைதானா? இது தொழிலாளர்கள் உரிமையை பாதிக்காதா? இன்னும்கூட கேள்விப்படுகிறேன். இராஜாஜி மண்டபத்தில் ஒரு குரல் எழுந்தது. இப்போது அங்கே பெரியார் குரல் எழுந்து கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். அங்கே தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசும்போது ஒருவர் சொன்னாராம். ''தொழிலாளர்கள் இப்போதெல்லாம் அடிக்கடி போராட்டம் நடத்தி தொல்லை கொடுக்கிறார்கள். தொழிலாளர்கள் போராட்டத்தை அடக்குவதிலே இந்த அரசுக்கு அக்கரை உண்டு என்று.'' முதல் முதலாக இப்படிப்பட்ட ஒரு கருத்தை அங்கே சொல்லியிருக்கிறார். உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள், பாட்டாளிகளே ஒன்று சேருங்கள், உரிமையைப் பாதுகாக்க அனைவரும் ஒன்று படுவோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள், முற்போக்குக் கொள்கையினர். சமதர்மத்தை நோக்கி இந்த நாடு செல்கிறது என்றால் அது கூலி உயர்விலிருந்துதான் ஆரம்பிக்கிறது. கூலி உயர்வுக்குத் தொழிலாளர்கள் போராடுவோம் என்று சொல்லுகின்ற நேரத்தில் தொழிலதிபர்கள் கூட்டத்திலே தொழிலாளர்

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

களை அடக்கிவைத்திட முடியும் என்று சொல்கிறார் ஒருவர். அது யார் வாயிலிருந்து வரக்கூடாதோ அவர் வாயிலிருந்து வந்திருக்கிறது. அவை முன்னவர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்து இருப்பது தவறா என்று கேட்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். கேட்பதாக இருந்தால் அது அவர் கஞ்சுடைய நிலை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தொழிலாளர்கள் கடலைப்போல, கடல் அலையைப்போல, முதலாளிகளை அதில் மிதக்கிற தோணிகள் போல என்று கூறினார்கள். கடல் குமுறினால் தோணி ஓட்டம் நடைபெறுமோ என்று கேட்டார் புரட்சிக் கவிஞர். தோணிகள் போல இருக்கிற முதலாளிகளைக் கொண்ட கூட்டத்தில் அவர்கள் ஒன்று சேர்ந்தால் தொழிலாளர்களை அடக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். கடலில் மிதக்கும் தோணிகள் ஒன்று சேர்ந்தால் ஏராளமான மீனைப் பிடிக்க பயன்படலாம். ஆனால் கடல் குமுற ஆரம்பித்தால் தோணி ஓட்டம் நடக்காது. இந்த உண்மை தெரிந்தும் தொழிலாளர்களை ஒடுக்கிவிடலாம் முதலாளிகள் ஒன்று சேர்ந்தால் என்கிறார். 500 முதலாளிகள் ஒன்று சேர்ந்தாலும் உரிமை கேட்கும் தொழிலாளர்களை அடக்கிவிட முடியுமா? அப்படி வரும்போது வேறுபல பிரச்சனைகள் வராதா? கிளர்ச்சி வராதா? போராட்டம் வலுக்காதா?

அதைப்போல அண்மையில் காவல் துறையினர் வேலை நிறுத்தம் செய்து, வருந்தத்தக்க நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காவல் துறை எவ்வளவு பெரிய துறை? எவ்வளவு பொறுப்பான துறை? அதில் குறைபாடு இருக்கலாம். அதைச் சீர்செய்ய முயற்சி செய்ய வேண்டும். காவல் துறை அரசுக்குக் கண்ணைப்போன்றது என்பார்கள். நீங்கள் காண்கிறீர்களோ, கண்ணை மூடிக்கொள்கிறீர்களோ என்பது எனக்குத் தெரியாது. சமுதாயப் பாதுகாப்பிற்கு காவல்துறை மூக்கியமானது. தங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய நேரடி நடவடிக்கை இல்லாவிட்டாலும், காவல் துறையினர் சங்கம் வைக்கிற உரிமையைக் கேட்டார்கள்; பல்லாண்டு காலமாக கேட்டார்கள், அனுமதிக்கவில்லை.

அவர்கள் சங்கம் வைக்கின்ற உரிமை கேட்டபோது முதலமைச்சர் முதலிலே அது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்றார். உமாநாத் அவர்கள் அதை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று இங்கே கேட்டார்கள். திரிபுரா, மேற்கு வங்கம் போல் இங்கும் ஏன் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டார்கள். அப்போது அந்த உரிமையை மறுத்த முதலமைச்சர் பின்னர் பேசியதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. சங்கம் வைப்பதை அனுமதிப்பதாக செய்தி வந்தது. டில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டுக்கு போவதற்கு முன்னரேயே அனுமதித்து விட்டுத்தான் புறப்பட்டார் என்று செய்தி இருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

இப்படிச் சங்கம் வைப்பதை அனுமதிக்கும்போது, இன்ன வடிவத்திலே அதை உருவாக்க வேண்டுமென்று அவர்களுடன் பேசி முடிவு எடுத்து, அதற்குப் பின்னால் அறிவித்திருந்தால் அதிகமான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. சங்கம் வைக்க அனுமதித்த பின்னால், காவல் துறையிலே இருக்கிற 'சபார்டிநேட்ஸ்' அவர்களிலே ஒருவர் தலைமையில் சங்கம் வைப்பதை தடுத்தால் அதில் என்ன பொருள் இருக்கிறது? அதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது? சங்கம் வைக்க அனுமதிக்கலாமா கூடாதா என்பது வேறு. அனுமதித்த பின்னால் அதைத் தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவது, இன்னின்னாரை சேர்க்கக் கூடாது, இன்னார் அதில் இருக்கக் கூடாது என்று தடுப்பது மிகப்பெரிய குறையாகும். ஏற்கெனவே ஒருவர் தலைமையில் சங்கம் அமைக்கப்பட்டு, அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டு, பின்னால் சஸ்பென்ஷன் கைவிடப்பட்டு, அதற்குப் பின்னால் அவர் பின்னணியிலிருந்து சங்கமாக ஒரு அமைப்பை ஏற்படுத்தியபோது, அவரை ஐ.ஜி. தரத்திலே உள்ள ஒருவர் பேச்சு வார்த்தைக்கு வரச்சொல்லி, பின்னால் பேச அழைத்தவர் பேச்சுவார்த்தை நடத்த முடியாது என்று சொல்லி, பேசத் தயாராக இல்லாததால் சங்கத்தை அங்கீகரிக்கும் நோக்கம் இல்லை என்பதை உணர்ந்து அவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது. அதற்குப் பின்னாலே அவர்கள் சார்பாக ஒரு நோட்டீஸ் வெளியிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்த நோட்டீசுக்கும் சங்கத்திற்கும் எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதிகாரிகளே இப்படிப்பட்ட ஒரு நோட்டீசை வெளியிட்டு, அதன்மூலம் ஒரு பேராட்டத்தை உருவாக்கி விட்டு, எங்களைச் சிக்கலில் தள்ளிவிட அவர்கள் செய்த சூழ்ச்சி அது என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆக, அதிகாரிகளே, இப்படிப்பட்ட ஒரு நோட்டீசை வெளியிட்டு, அதன் மூலம் போராட்டம் நடைபெற்று, இன்றைக்கு இவ்வளவு பெரிய அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்தத் தலைவர் சிறையில் இருக்கிறார். அவர் பெயரால் ஒரு அறிக்கை வருகிறது. அவர் வெளியிட்டது என்றுதான் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

[முற்பகல் 11—00]

காவல் துறையில் உள்ள ஐயாயிரம், பத்தாயிரம் பேர்கள் அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவரைத் தலைவராகக் கொண்ட அந்தச் சங்கத்தில் சேர்ந்திருக்கிறபோது, அவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறபோது, தாங்கள் வன்முறையில் ஈடுபடுவதில்லை என்று தெளிவாக அறிவித்திருக்கிறபோது, எங்கேயாவது உட்கார்ந்துகொண்டு மறியல் நடத்துகிறபோது தங்களிடமுள்ள ஆயுதங்களையெல்லாம் ஒப்படைத்து விட்டு உண்ணாவிரதப் போராட்டம் பண்போடு நடத்து

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

கிறபோது போராட்டம் வேண்டாம் என்று வேணடுமானால் ஆலோசனை சொல்லலாம். அது வேறு. அவர்களை அழைத்துப் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசின் பொறுப்பில் உள்ளவர்கள் ஏன் முயற்சிக்கவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். காவல் துறைக்குப் பரிந்து பேசுவதாகத் தயவுசெய்து கருத வேண்டாம். காவல் துறையினரை எப்போதாவது குறைகள் தோன்றுகிறபோது நாங்கள் குறை சொல்லிப் பழக்கப் பட்டவர்கள்தான். ஆனால் அந்தத்துறை இன்றையதினம் செயலற்றுப்போனது மட்டுமல்ல, அந்தப் போராட்ட நிலைமை பற்றி இன்று காலைப் பத்திரிகைகளில் கூட நேற்று மதுரை கோயம்புத்தூரில் எப்படி போராட்டம் நடைபெற்றன என்று அங்குள்ளவர்கள் மூலம் செய்தி வந்திருக்கிறது. எங்கள் சங்கத் தலைவராக இருக்கிறவர் போராட்டம் வேணடாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிற அந்த அறிக்கையை நாங்கள் நம்பவில்லை, போராட்டத்தை நிறுத்தமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். போராட்டத்தை ஒடுக்குவது எனபது அரசாங்கத்தின் ஒரு முறை. ஆனால் ஒரு கையைக் கொண்டு இன்னொரு கையை ஒடிப்பது என்பது நல்ல முறையல்ல. ஒரு கை கணணைக் குத்தி விட்டது என்றால் இன்னொரு கையைக் கொண்டு அந்தக் கையை ஒடித்து முறித்துவிடுவது என்பது நல்ல முறை அல்ல. காவல் துறையில் உள்ள மேல் அதிகாரிகளை வைத்து கீழ் அதிகாரிகளை, அலுவலர்களை ஒடுக்குவது என்பது நல்லதல்ல, முறை அல்ல, விரும்பத்தக்கதுமல்ல. காவல் துறையில் உள்ளவர்கள்தான் நமக்குப் பாதுகாப்பு தரவேணடும். முதல் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் தனக்குப் பாதுகாப்பு வேண்டாம் என்று சொல்லிவிட்டால் பெரிய அதிகாரிகளின் பாதுகாப்பை வைத்துக்கொண்டு அவர்கள் போகலாம். ஆனால் அமைச்சர்களுக்குக்கூட அந்தப் பாதுகாப்பு இருக்காது. பாதுகாப்பு தரவேண்டியவர்கள் அரசாங்கத்திடம் முட்டி மோதி அவர்கள் பிரச்னை தீராமல் மேலும் மேலும் குழப்பங்கள். அதிகமானால் இந்தஅரசின் முதல்அமைச்சராக உள்ளவர் தெரிவித்த கருத்துக்கள் அடிப்படையில் தான் அது ஏற்பட்டு விட்டது என்று கருத இடம் இருக்கிறது. சங்கம் வைக்க அனுமதித்தார்கள். அந்தச் சங்கத்தில் ஏதாவது முறையாக இல்லை என்று சொன்னால் மாற்றுங்கள். ஆனால் தலைவர் ஒருவரைப் பிடித்து சிறையில் அடைப்பது, இன்னொருவர் மீது வழக்கு போடுவதற்காக அவரை தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது 500, 600 பேர்கள் மீது வழக்கு போட்டு சிறையில் வைத்திருக்கிறீர்கள் என்பது, காவல் துறையினரைக் கைது செய்திருக்கிறார்கள் என்பதுடன் அவர்களைக் கைது செய்யும்போது அவர்களது குடும்பப் பெண்களையும் கைது செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது நல்லதல்ல.

இன்னும் பல விவகாரங்கள் உள்ளன அவற்றிற்குள் நான் செல்ல விரும்பவில்லை. இந்த நிலை நீடிக்கக்

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

காரணம், அவர்களைத் தொழிற்சங்க வாதிகள் என நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அரசாங்க அலுவலர்கள் என்ற முறையில் என். ஜி. ஓ. சங்கம் போன்று சங்கம் வைத்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை இருக்கிறது, இருபது முப்பது ஆண்டுகளாக என். ஜி. ஓ. க்கள் சங்கம் செயல்பட்டு வருகிறது. அதை உடைக்க வேறுபல அமைப்புகளை உருவாக்கினாலும் அது ஒரு பெரிய அமைப்பாகத்தான் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. வேறு ஒரு சங்கம் அமைக்கப்படும்போது ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு போராடாமல் ஒய்ந்து விட மாட்டார்கள். ஆசிரியர்கள் சங்கத்தில் கூட இரண்டு சங்கங்கள் உள்ளன. ஒன்று மன்றம், இன்னொன்று கூட்டணி என்று இரண்டு இருக்கின்றன. ஒருவர் போராட வேண்டாம் என்றால் இன்னொருவர் போராடுகிறார். இன்று அவர் போராட்டம் வேண்டாம் என்றால் இவர் போராடுகிறார், இவர் போராட வேண்டாம் என்றால் அவர் போராடுகிறார். ஒருவர் மறியல் போராட்டம் நடத்துகிறார், இன்னொருவர் உண்ணாவிரதம் இருக்கிறார். ஒருவர் ஊர்வலம் போகிறார், இன்னொருவர் கூட்டம் போடுகிறார்; இட் இஸ் சப்ளிமென்டிங் ஒன்றொடொன்று சேர்ந்து போராட்ட மனப்பான்மைக்கு ஆதரவு தருவது என்ற வகையில் இயற்கையான போராட்டங்கள் உருவாகின்றனவே தவிர அவற்றைத் தடுக்கமுடியவில்லை.

எனவே, இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை அடிப்படையில், நடைமுறை அடிப்படையில் காவல் துறையினர் இந்த அளவுக்குக் கடினமான சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது விரும்பத்தக்கதாக இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதிலே கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதோ வெளியிலே பேசினார் என்று சொல்கிறார்கள், அது உண்மையாக இருக்காது என்று நம்புகிறேன். அப்படிப் பேசும்போது காவல் துறையினரை நோக்கி நீங்கள் 47,000 பேர்கள் இருக்கிறீர்கள், ஆனால் எங்கள் கட்சியில் 23 லட்சம் தொண்டர்கள் இருக்கிறார்கள், இந்த 23 லட்சம் தொண்டர்களை வைத்து உங்களைச் சமாளிக்க முடியும் என்ற வகையில் பேசியிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பேசியிருக்க மாட்டார்கள்; பேசியிருந்தாலும் இப்படிப்பட்ட கருத்தை வைத்து பேசியிருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இப்படி போய்க்கொண்டேயிருந்தால், போலீசை வைத்து அதிகாரிகளை சமாளிப்பது, அதிகாரிகளை வைத்து போலீசைச் சமாளிப்பது ஆசிரியர்களை வைத்து மாணவர்களைச் சமாளிப்பது, மாணவர்களை வைத்து ஆசிரியர்களைச் சமாளிப்பது என்ற விரும்பத்தகாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

அடுத்து என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்—ஒரு உயர்ந்த கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 'கரப்ஷன் இப்போது ஆடியோடு இல்லை'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

இதில் என்ன அர்த்தம் என்றால், உயர் மட்டம் வரையில் அந்த அந்த கரப்ஷன் நெடி அடிக்கிற வகையில் அது புரையோடியிருக் கிறது என்பதுதான். கொள்கை ஒன்றும் தவறானது அல்ல, அதை நடைமுறைப் படுத்தும் முறையில்தான் குறைபாடுகள் இருக்கின்றன. அதற்கு உதாரணம் இந்த மதுவிலக்கு சட்டம். இந்த மதுவிலக்குச் சட்டத்தைக்கடுமையாக ஆக்கியிருக்கக்கூடாது நண்பர் மாரிமுத்து அவர்கள் கூட குறிப்பிட்டார். 3 ரூபாய் கொடுத்தவர்கள் இதற்காக 300, 400 கொடுக்க வேண்டியிருக் கிறது, ஏழை மக்கள் இதனால் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார். நான் அவர் சொன்னார் என்பதற்காகப் பேச வில்லை. அவரை விட சாதுவான ஒரு உறுப்பினர் இருக்க முடி யாது. அவரே சொல்கிறபோது அரசாங்கத்தின் குறைபாடு விளக்கமாக தெரிகிறது. கொள்கை நல்ல கொள்கையாக இருக்கலாம். நடைமுறைத் திட்டம் சரியில்லை. சட்டத்தின் மூலமாக தண்டனை கொடுக்கக்கூடிய முறையை மேற்கொள்வது சரியில்லை; கடுமையான தண்டனை கொடுத்து பிரச்னையை தீர்ப் பது என்பது, அதற்கு மாறான முடிவைக் கூட கொடுத்து விடும். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் டாக்ஸியை கூப்பிட்டு ஏற்றிக் கொண்டு போகிறார்கள். டாக்சி டிரைவர் வர மறுத்தால் 4 பேர்களாக சேர்ந்துக்கொண்டு உதைக்கிறார்கள்.

அரசாங்க பஸ் ஒன்று அதற்குரிய டிரைவர் இல்லாமல் இண்டி வனம் வரை போயிருக்கிறது. டிரைவர் இல்லாமல் போனதினா லேயே ஆக்ஸிடெண்ட் இல்லாமல் போயிருக்கிறது. அந்த அளவுக்கு சட்டங்களும் இலாக்காக்களும் செயல்படுகின்றன. இந்தக் குறை பாடுகளுக்கு நாம் பேசுகிற பேச்சு, செயல்படுகிற முறை தான் காரணம். நான் இதற்காக நிறைய குறள்களை எழுதிக் கொண்டு வந்தேன், ஆனால் நேரம் இல்லாத காரணத்தால் சொல்ல முடியவில்லை.

''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமையானும் கெடும்''

என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர். செய்ய வேண்டியதை செய்யாமல் விட்டாலும் கெட்டுவிடும், செய்யக்கூடாததை செய் தாலும் கெட்டுவிடும். தீர ஆலோசனை செய்யாமல் சட்டம் கொண்டு வருவது, அதற்குப் பின்னர், அந்தச் சட்டத்திற்கு ஓட்டை உடைசல்களை எல்லாம் இருப்பதை நீங்களே சொல்லிக் கொள்வது என்னும் நிலைமை ஆகிவிட்டது இப்போது.

கலை உலக விழா ஒன்றில் இந்தச் சட்டத்தைப்பற்றி முதல் வர் குறிப்பிட்டிருக்கிறார். ''இந்தச் சட்டத்தின்படி உங்களில் 100க்கு 90 பேர் சிறைவாசம் அனுபவிக்க வேண்டி வரும். ஆனால் நான்தான் உங்களையெல்லாம் பாதுகாத்துக் கொண்டிருக் கிறேன்'' என்று சொல்லியிருக்கிறார். பாதுகாக்க வேண்டியது தான்— நல்ல வேலை. ஆனால் கடுமையான சட்டத்தைப் போட்டு விட்டு இப்படி தனித் தனியாகப் பாதுகாப்புச் செய்வது

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

என்ன நியாயம்? கலைத் துறையில் உள்ளவர்களை நீங்களே பாதுகாக்கிறீர்கள்? ஆனால் கிராமத்தில் உள்ள ஏழை உழைப்பாளி மக்களை யார் பாதுகாப்பது? தோட்டி, தொண்டன், அண்டர் கிரவுண்ட் டிரைனேஜ் வேலை செய்கிறார்களே, அந்த நாற்றத்தை மறப்பதற்கு, வேறு ஏதோ நாற்றத்தை தேடிக் கொண்டு போகிறானே அவனை யார் காப்பாற்றுவது? ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வழக்குகள் தீர்வு பெறாமல் போலீஸ் ஸ்டேஷனில் தேங்கிக் கிடக்கின்றன என்று சொல்கிறார்கள். இந்தச் சாராய கேஸ்களால் போலீஸ் ஸ்டேஷனே சாராயக்கடை போல் இருக்கிறது என்று பத்திரிகைகளில் செய்தி போடுகிறார்கள். நான் பார்த்தது இல்லை, போலீஸ் ஸ்டேஷனுக்கும் போய் பார்க்கவில்லை, சாராயக் கடையையும் பார்த்ததில்லை. பத்திரிக்கை செய்திதான் இது. இந்த அளவுக்குச் சட்டத்தை செயல்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்று சொல்கிறபோது, அந்தச் சட்டம் அமுலில் இருக்கத்தான் வேண்டுமா? சட்டத்தை சரியாகச் செயல்படுத்த முடியாத நிலையில், ஏழை எளியவர்கள் பாதிக்கிற நிலைமையில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அம்பிகாபதி சொன்னது போல மதுவிலக்கு கொள்கை தோற்றுவிட்டது என்று சொல்ல முடியாது. மதுவிலக்கு கொள்கை இருக்கிறது. மதுவிலக்குச் சட்டம் தான் தோற்று விட்டது. மதுவிலக்கு தீவிரமாக அமுல்படுத்தப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது தோற்றுப்போய்விட்டது என்று சொல்கிறேன்.

அர்பன் லேண்ட் சீலிங் சட்டம் கொண்டு வரப்பட்டபோது எவ்வளவு அடிப்படையில்லாத, அநியாயமான, அறிவில்லாமல் கொண்டு வரப்பட்ட சட்டம், இதை தீ வைத்து கொளுத்த வேண்டும் என்று சொன்னேனோ, அதேபோன்று இதையும் சொல்கிறேன், ஆந்தமதுவிலக்குச் சட்டமும் அடிப்படையில்லாமல், தீர ஆலோசிக்காமல் கொண்டு வரப்பட்டச் சட்டம்தான். ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கு அல்ல— மற்றவர்களுக்கு பாதிப்பு தரக்கூடிய சட்டம். ஏறத்தாழ 1,50,000 பேர்கள் விடுதலை என்று முதல்வர் அறிவித்து விட்டார். ஆனால் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அப்படி எங்களுக்கு இன்னும் எந்த உத்தரவும் வரவில்லை என்று சொல்கிறார்கள். யாரும் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை முதலமைச்சர் ஒரு அறிவிப்பு வெளியிட்டார் என்றால், இரண்டொரு நாட்களில் அது சட்டமாக அல்லது உத்தரவாக வெளிவர வேண்டாமா? அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றுதானே பொது மக்களும் நாமும் எதிர்பார்க்க முடியும்?

[முற்பகல் 11-10]

அவரது பேச்சை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ள வில்லையென்றால் முதல் அமைச்சர் பேச்சுக்கு என்ன பொருள்? முதலமைச்சர் எங்களைப் பற்றி பேசிய பேச்சு ஒன்றுதான் இருக்கிறதே தவிர, அரசாங்கத்தின் நடைமுறைகள் பற்றி பேசிய

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

பேச்சுக்கு எந்தவித பலனும் இல்லையே.

இவைகள் எல்லா வற்றையும் விட இறுதியாக நான் குறிப்பிட விரும்புவது—பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த நாட்டில் ஒரு உரிமையை ஒரு சாசனத்தைப் போன்று பெற்றிருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட சமுதாயம் மற்ற சமுதாயத்தினரை அடக்கி ஆள்கிறது என்று ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு — அதைச் சார்ந்த மக்களுக்கு அப்போது தேசிய கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி உட்பட, அப்போது இருந்த எதிர்கட்சிகள் உட்பட, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் உட்பட, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் எழுப்பிய குரலினை ஏற்று பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று இப்படிப்பட்ட உரிமையை ரிசர்வேஷன் ஃபார் பேக்வர்டு கிளாஸ் பெற்றுத் தந்தார்கள். அந்த சாசனத்தை பெற்றுத் தருவதற்கான பேராட்டக் குரலுக்கு ஆதரவு தந்து பிற்படுத்தப்பட்ட மக்கள் அந்த உரிமையை—அந்த சாசனத்தை பெற்றார்கள். அப்போதும் இந்த உரிமை ஜாதியின் அடிப்படையில் அமைந்த பிற்பட்ட நிலைமைக்குத் தான் பெறப்பட்டதே தவிர, வருமான அடிப்படையில் பெற வில்லை. வருமான அடிப்படை என்பது அடிஷனல் க்வாலிஃபிக்கேஷனாக ஏன் இருக்கக்கூடாது என்று கேட்பவர்களுக்கு நான் கூற விரும்புவது, ஜாதி அடிப்படையில் முன்னேறினால்தான் பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேறிய வகுப்பினரோடு போட்டியிடக்கூடிய ஆற்றலைப் பெற முடியும். தற்போது பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேறிய வகுப்பினரோடு போட்டியிடக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்க வில்லை. இந்த நிலையில் தற்போது நீங்கள் இந்த ஆற்றலையே அழிக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில் நான் பிற்படுத்தப்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவன் அல்ல. நான் தீண்டப்படாதவனும் அல்ல. பிற்படுத்தப்பட்டவனும் அல்ல. அதே நேரத்தில் தீண்டாமையை ஒழிப்பதில் தந்தை பெரியாரோடு சேர்ந்து பயிற்சிபெற்றதால் எப்படிப்பட்ட ஒரு அழுத்தமான கொள்கையை கொண்டிருக்கிறேனோ அதேபோன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு என்று இருக்கும் உரிமையின் மீது கைவைக்க யாருக்கும் உரிமை கிடையாது, என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறவன் நான். யாரோ சில அதிகாரிகள் சொல்லுகிற ஆலோசனையைக் கேட்டு, சிலமேல் தட்டினர் சொல்லுகின்ற ஆலோசனையைக் கேட்டு, 9,000 ரூபாய் என்று உச்சவரம்பு நிர்ணயித்துவிட்டதால். 9,001 ரூபாய் என்று வருமானம் வந்துவிட்டால், அவன் முன்னேறியவன் ஆகிவிடுவானா? ஆகவே அவை பிள்ளைக்கு இடம் கிடையாதா? பிற்படுத்தப்பட்டவன் அல்லாதவனாகி விடுவானா?

இன்னும் தெளிவாகச் சொல்லுகிறேன். ஜனதாக் கட்சியைச் சேர்ந்த ரமணிபாய் அவர்கள் சொன்னார்கள். அவருடைய மகள் டாக்டர், மாதம் 650 ரூபாய்க்கு மேல் வருமானம் உண்டாயிற்று, அவன் மகனுக்கு அந்த அளவுக்கு வருமானம் இல்லை, 650 ரூபாய் என்ற அளவுக்குத்தான் இருக்

[திரு. க. அன்பழகன்] [1979 அக்டோபர் 27

கிறது. மகளுடைய பிள்ளைக்கு இடம் கிடைக்கவில்லை, வருமானம் 850 ரூபாய்க்கு மேல் வருவதால் பேக்வார்டு இல்லை. மகனுடைய பிள்ளைக்கு இடம் கிடைக்கிறது, வருமானம் 750க்கு மேல் இல்லை. இப்படி மகள் பேக்வார்டு இல்லை பார்வார்டு, என்னுடைய மகன் பேக்வார்டு, என்னுடைய பொஷிஷன் 'ஆக்வார்டு' என்று மிகவும் வேதனையோடு அந்த மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர் சொன்னார். மீனவர் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் மாத வருமானம் வருகிறது என்பதற்காக முன்னேறியவர்களாக ஆகிவிடுவார்களா? அரசாங்க அலுவலர்களை எடுத்துக்கொண்டால், ஆண்டுக்கு 9,000 ரூபாய் வருமானம் வருகிறது என்பதால்முன்னேறியவர்கள் என்று ஆகிவிடுவார்களா? அதுமட்டுமல்ல. 9,000 ரூபாய்வருமானம் வருகின்ற தகப்பன், தகப்பன் என்று கூட இருக்க வேண்டும் என்பதில்லை. கார்டியனாக இருந்தாலும், அந்தப் பிள்ளைக்கு இடம் கிடைக்காது. ஜாதியின் அடிப்படையில் தான் கார்டியன் இருக்கவேண்டும் என்பதில்லை, பேக்வார்டைச் சேராத என்னைப் போன்றவர்கள் கார்டியனாக இருந்தாலும் சரி, பேக்வார்டை சேர்ந்தவர்கள் கார்டியனாக இருந்தாலும் சரி, அந்த கார்டியனுக்கு ரூ. 9,000க்கு மேற்பட்டு வருமானம் இருந்தால் படிக்கின்ற பிள்ளைக்கு பேக்வார்டுகம்யூனிட்டி என்கின்ற உரிமை போய்விடும்.

என்.ஜ்.ஒ.-க்களை எடுத்துக்கொண்டால், இந்த ஆண்டு 8,900 ரூபாய் வருமானம், அடுத்த ஆண்டு 9,000 ரூபாய் வருமானம் என்றால், இடையில் ஒராண்டில் 100 ரூபாய் கூடுதலாக வந்தது என்ற காரணத்தினால் அவர் பேக்வார்டு இல்லையா? இன்னும் கூறுவதாக இருந்தால், சிலருக்கு நிவர்ஷன் ஏற்படக்கூடும். முதலில் 9,100 ரூபாய் வருமானம் இருந்திருக்கலாம், மேலாள் பிரமோஷனுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால் கீழ்நிலைக்கு நிவர்ஷனாக வருகிறார் என்றால் பேக்வார்டு என்பது வந்துவிடுகிறது. வருமானம் உயருகிறது என்றால் பேக்வார்டு என்கின்ற உரிமை போய்விடலாம். நிலையில்லாத வருமானத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு இப்படிப்பட்ட உரிமையை எடுத்துவிடுவது சரியா? விவசாய வருமானத்தை எடுத்துக்கொண்டால் நிலைமை என்ன? மழை சரியாக இருந்தால் 12,000 ரூபாய் வருமானம் வருகிறது என்றால் பேக்வார்டு இல்லை. மழை இல்லையென்றால், 6,000 ரூபாய் வருமானம், அப்போது பேக்வார்டு, அதுவும் கணக்கு சரியாக காண்பித்தால் தான் விவசாய வருமானத்தைக் கணக்கிட முடியும். இல்லையென்றால், அதுவும் இல்லை. ஆகவே இவைகளை எல்லாம் நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம் வருமான வரம்படையாக வைத்துக்கொண்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்த நாட்டில் இருந்த ஒரு உரிமையை, சாசனத்தை நீங்கள் அழிக்கிறீர்கள். இப்போது நிலைமை என்ன? 9,000 ரூபாய் வருமானம் என்பது குறைவாக இருக்கிறது. இதனால் அதிகமான பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த வருமான வரம்பை உயர்த்தலாமா என்று யோசிக்கிறோம் என்று மூதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள்.

1979 அக்டோபர் 27] [திரு. க. அன்பழகன்]

மறுபடியும் அந்த இடத்திலே, அந்தப் பிரச்சினை வரலாகாது நான் மிக திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். வருமான வரம்பு என்பது படிப்பு உதவித்தொகை அளிப்பதற்காக, கட்டணம் செலுத்தாமல் படிப்பதற்காக, ஆகிய வசதிகளை செய்து கொடுப்பதற்காக இருக்க வேண்டுமே தவிர, அட்மிஷன் விஷயத்தில் உண்மையான உரிமையைபிற்படுத்தப்பட்டவகுப்பினருக்கு வகுப்பு அடிப்படையில் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு உரிய அவர்களுடைய உரிமைகளைப் பறிக்கக்கூடாது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த விதிமுறையைப் பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, அரசு அலுவலர்கள், அரசாங்கத்திலே பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு விண்ணப்பம் செய்கின்றபோது இந்த 9,000 ரூபாய் வருமானம் என்பது எப்படி பாதிக்கின்றது என்பதை எண்ண வேண்டும். மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் வருடத்தில் 12,000 ரூபாய் பெறுகின்றவர்கள் பலர் தற்காலிகமாக 10—A1 வேலைகளில் இருக்கின்றார்கள், அதாவது டெம்பரரி. தற்காலிகமாக இப்படி மாதம் 1,000 ரூபாய் சம்பாதிக்கக்கூடியவர்கள் விண்ணப்பிக்கின்றபோது, அவர்களுடைய வேலை நிரந்தரமில்லை. ஆனால் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களாக விண்ணப்பிக்க முடியாது. இது நியாயம்தானா ? இப்படிப்பட்ட நிலைகளில் மாதம் 850 ரூபாய் சம்பாதிக்கக்கூடியவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ளவர்கள், அவர்கள் பிள்ளை டாக்டராக வரக்கூடாதா ? என்ஜினியராக வரக்கூடாதா? இந்த சம்பளத்தை வாங்கக்கூடிய எம்.ஜி.ஓ.-க்கள் பிள்ளைகளுக்கு அந்த அட்மிஷன்கள் கொடுக்கக்கூடாதா ? லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கக்கூடிய தொழையைச் சார்ந்த முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஓராயிரம், இரண்டாயிரம் விஷயத்தில் விளையாடுவது நல்லதல்ல. சமுதாயத்தில் மிகப் பெரிய அளவில் உள்ளபின்தங்கிய நிலையிலேவாழ்கின்ற சாதாரண நடுத்தரமக்கள் இன்றைக்குப் பெரிதும் வேதனைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சமுதாயதில் வறுமை இருக்கிறது. வாட்டம் இருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. நிம்மதியற்றத் தன்மை இருக்கிறது. எல்.ஜி.ஒ.க்கள் போராட்டம்; ஆசிரியர்கள் குறை, கிராம உத்தியோகஸ்தர்களுடைய குறை எல்லாம் அப்படியே இருக்கிறது. விவசாயிகளுடைய போராட்டம், அரசியல் கட்சிகள் சம்பந்தமில்லாமலேயே உருவெடுத்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்களிடையே குறை இருக்கிறது. காவல் துறை குறைபடுகிறது; மாணவர்கள் கல்லூரிகளுக்கு 6 மாதங்கள் மட்டும் செல்லும் நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் சேர்ந்திருக்கின்ற இந்த அரசாங்கத்தின்மீது, அவர்கள் கொள்கைகள் நல்லமுறையிலே அமைத்திருக்கவில்லை என்ற காரணத்திற்காக, இந்தக் கண்டனத் தீர்மானத்தை இந்த அரசின்மீது முன்மொழிந்து, நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1979 அக்டோபர் 27

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் முன் மொழிந்து பேசிய கண்டனத் தீர்மானத்தை, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வழிமொழிந்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையிலே, கடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் மற்ற எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த கண்டன தீர்மானத்திலே எங்கள் கட்சித் தலைவர், மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் தன் கருத்துக்களைத் தெரிவிக்கின்றபோது, இந்த அரசு ஏற்பட்ட ஆரம்ப காலத்திலே எல்லா எதிர்க் கட்சிகளும், தி.மு.க. வைத் தவிர உங்கள் பக்கம் இருந்தது. ஆனால், உங்களுடைய தவறான கொள்கைகளின் காரணமாக பல்வேறு கட்சிகள் உங்களுக்கு உண்மையிலேயே எதிர்க் கட்சிகளாக அமையக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது என்று தன்னுடைய வருத்தத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இப்போது காங்கிரஸ் கட்சி கொண்டிருக்கக்கூடிய நிலை ஏதோ அரசியல் மாற்றம் ஏற்பட்டு, அதற்காக கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்ற நிலைமையில் இல்லை. முன்பு நடந்த கூட்டத் தொடரிலேயே, கண்டனத் தீர்மானத்தின் போது, காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தின் மீது எடுக்கப்பட்ட ஓட்டெடுப்பின்போது பங்கெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குரிய அடிப்படைக் காரணம் இந்த அரசாங்கத்தின் பல்வேறு துறைகளில் கொண்டுள்ள கொள்கைகளில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை என்பதுதான் அதனுடைய பொருள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்போது ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை அரசியல் அடிப்படையில் ஏற்பட்டதில்லை. எங்களுக்கு ஏற்கனவே ஏற்பட்ட நிலை— லாஜிகல் கான்சிகுவென்சஸ்—அந்த அடிப்படையிலே ஏற்பட்ட நிலையே தவிர, அரசியல் அடிப்படையில், அரசியல் மாற்றம் ஏற்பட்டதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு ஏற்பட்ட உடனே, ஆளுநர் அவர்கள் முதன் முதலாக உரை நிகழ்த்தினார்கள்.

(முற்பகல் 11-20)

அவர்களுடைய உரையிலே ஒரு முக்கியமான அம்சத்தை கொள்கை விளக்கத்தை இந்த அரசு கொடுத்திருந்தது. இந்த அரசு அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றப் போவதாக ஆளுநர் அவர்களுடைய உரையில் தெளிவாகச் சொல்லியிருந்தார்கள். ஆனால், கடந்த இரண்டரை ஆண்டுகளாக எல்லாத் துறைகளிலும் ஏற்பட்ட குழப்பங்களுக்கும், ஏற்பட்ட குறைபாடுகளுக்கும் காரணத்தை நாம் அலசிப் பார்த்தால் அதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன வென்று சிந்தனை செய்து பார்த்தால் உண்மையிலேயே இந்த

1979 அக்டோபர் 27] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

அரசு ஆளுநர் உரையில் கூறிய அறிஞர் அண்ணா அவர்கள் கொள்கையைப் பின்பற்றுவதாகச் சொன்ன உறுதிமொழியிலிருந்து விலகி வெகுதூரம் சென்று விட்டார்கள் என்ற நிலைமைதான் இன்று ஏற்பட்டிருக்கிறது. அதை இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, ஓரிடத்தில் பேசியதாகப் பத்திரிகையில் கூடப் பார்த்தேன். இந்த அரசு எந்த அடிப்படையில், எந்தக் கொள்கையின் அடிப்படையில் செயல்படுகிறது என்றால் — மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் — நாடோடி மன்னனில் நான் பேசிய வசனத்தின் அடிப்படையில்தான். அந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் இந்த அரசு செயல்படுகிறது என்று சொன்னார்கள். ஆகவே, ஆளுநர் உரையில் அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையின் அடிப்படையில் இந்த அரசு செயல்படும் என்று சொன்ன கொள்கையிலிருந்து அரசு வெகுதூரம் விலகிச் சென்றுவிட்டது என்று பார்க்கிறபோது, இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற குழப்பங்களும் கொள்கை மாறுபாடுகளும், பிற்போக்கான நிலையற்ற கொள்கைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கிறது. நாடோடி மன்னன் திரைப்படத்தில் இருக்கிற வசனங்கள் என்னவென்று எனக்குத் தெரியாது. அறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, கருத்துக்களை, தத்துவங்களை அவர்களுடைய புத்தகங்களில் இருந்து படித்து தெரிந்திருக்கிறேன். இன்று இவர்கள் எந்த அடிப்படையில் செயல்படுகிறார்கள் என்று பார்த்தால் கொள்கை இல்லாத அடிப்படையில்தான் இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நாங்கள் ஆதரித்துப் பேச வேண்டிய நிலைமை, வழிமொழிந்து பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி நல்ல தொரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். 'மக்களை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆள்வதும், ஆள்பவர்களுக்கே ஆட்சி என்று சொல்லாமல் நாட்டு மக்கள் நன்மைக்காக திட்டங்கள் தீட்டப்படுவதும், தீட்டிய திட்டங்கள் ஏட்டளவோடு இல்லாமல் நாட்டுக்கு நன்மை செய்யக்கூடிய அளவுக்கு எவ்வித சிறு உரிமையும் மறுக்கப்படாது இருப்பதும் தான் ஜனநாயகம் என்று சொன்னார். தீட்டிய திட்டங்கள் ஏட்டளவில் இன்று இருக்கிறதே தவிர, நாட்டிலே ஏதாவது நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லையென்று சொல்லக்கூடிய அளவில்தான் இன்றைக்கு நாம் இருக்கிறோம். ஆகவே அந்த அடிப்படையில் நாட்டிலே தீட்டிய திட்டங்களைச் செயல்படுத்தக்கூடியவர்கள், அரசு அதிகாரிகள். அரசு அலுவலர்கள் இன்று குழப்பமான நிலைமையில் எதுவும் செய்ய முடியாத நிலைமையில் பேராசிரியர் சொன்னதுபோல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்

[திரு. ஒ. சோ. வேலுச்சாமி] [1979 அக்டோபர் 27

உதாரணமாகச் சொல்லுகிறேன் — ஒட்டைப் பிடாரத்தில் கடந்த ஆண்டு பட்டப்பகலில் வ.உ. சிதம்பரனார் சிலைக்கு முன் கொலை நடந்தது. அங்கே முதலாவது எதிரியாக இருக்கக் கூடியவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். சட்டமன்றத் தொகுதியில் ஆளும் கட்சி சார்பில் போட்டியிட்டவர். எப்.ஐ.ஆர்.-ல் அவர்தான முதலாவது குற்றவாளியாக இருக்கிறார். மற்றும் இரண்டு பேர் இருக்கிறார்கள், கொடூரமான கொலை, பட்டப் பகலில் நடந்த கொலை, கடைக்காரர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒராண்டுக்கு அதிகம் ஆகியும் கூட இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. புலன் விசாரணை நடைபெற முடியாத அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் நிர்வாகம் நடக்கிறதா என்று சந்தேகப் படக்கூடிய அளவுக்கு நாம் இருந்துகொண்டிருக்கிறோம். உலக மகாயுத்தம் நடந்தபோது உலகத் தலைவர்கள் சொன்னார்கள். அமைதி ஏற்பட்டுவிட்டது. அமைதியை ஏற்படுத்திவிட்டோம் என்று சொன்னார்கள். அப்போது உலகத் தலைவர் ஹெரால்டு லாஸ்கி சொன்னார்— you make a desert and call it please நீங்கள் ஒரு பாலதானத்தை உண்டுபண்ணிவிட்டீர்கள். இதை நீங்கள் அமைதி என்று அழைக்கிறீர்கள் என்று சொன்னார் ஹெரால்டு லாஸ்கி. இப்போது தமிழகத்தில் இருந்தால் இங்கிருக்கக்கூடிய ஆளும் கட்சியைப் பார்த்துக் கேட்டிருப்பார்கள். you make a confusion and call it administration. 'நீங்கள் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதை நிர்வாகம் என்று சொல்லுகிறீர்கள்' என்று அவர்களுக்கே உரிய மொழியில் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த நிலைமைக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்றால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரை இருக்கக் கூடிய அதிகாரிகளானாலும் சரி, அலுவலர்களானாலும் சரி, மற்ற மாநிலங்களிலே உள்ள அதிகாரிகள், அலுவலர்களை விட திறமையிலும் நேர்மையிலும் எந்த விதத்திலேயும் குறைந்தவர்கள் அல்ல. ஆனால், தெளிவான கொள்கையை ஏற்படுத்திக் கொடுத்தால் தான் நிர்வாகத்திலே அவர்கள் திறமையாக செயல்பட முடியும். ஆனால் தெளிவான கொள்கை இல்லையென்று சொன்னால் அவர்களால் எப்படி நிர்வாகத்தைத் திறமையாகச் செய்ய முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிர்வாகச் சீர்கேட்டைத் தடுப்பதற்காக தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பாதுகாப்பு அவசரச் சட்டம் என்று ஜூலை மாதம் 13 ஆம் தேதியன்று கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். அரசியலமைப்புச் சட்டத்திலே கொடுக்கப் பட்டுள்ள இரண்டாவது ஷெட்யூலிலே என்ன என்ன இருக்கிறதோ அத்தனை துறைகளுக்கும் இது பொருந்தும் என்று சொல்லக்கூடிய அளவிலே இந்தச் சட்டம் இருக்கிறது. ஆகவே அத்தியாவசியப் பணிகள் என்பதற்கு மட்டும் தான் இந்தச்

1979 அக்டோபர் 27] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

சட்டம் பொருந்துமென்று சொன்னால் ஓரளவுக்குப் புரிந்து கொள்ளலாம். ஆனால் அரசு மேற்கொண்டிருக்கின்ற எல்லாத் துறைகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொல்கிற போது, உண்மையாகவே நான் சொல்கிறேன், இதைவிட ஒரு கறுப்புச் சட்டம் வேறு இருக்க முடியாது. மேலும் அதனுடைய பீனல் இளாஸிலே பார்த்தால், தண்டனை மிகக் கொடூரமாக அளிக்கப்பட்டிருக்கிறது. நீர்வாகம் இன்றைக்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு அதிகாரிகள் பொறுப்பு அல்ல, அலுவலர்கள் பொறுப்பு அல்ல. தெளிவான கொள்கை இல்லை என்பதைத்தான் நான் இப்போது உதாரண மாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நிர்வாகம் சரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கை எடுத்துக்கொண்டால் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தபோது மதுவிலக்குச் சட்டத்தை இயற்றி னார்கள். அதிலே காங்கிரஸ் கட்சிக்கு அக்கறை உண்டு. அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த நேரத்திலே மதுவிலக்கு என்பதைச் சமுதாயச் சீர்திருத்தமாகக் கருதி, அதிகமான தண்டனை எங்கே கொடுக்க வேண்டுமோ அங்கே கொடுத்தார்கள் 4(1)பி, என்பதில் சாராய வடிப்பு, சாராயம் காய்ச்சுதல் இந்தக் குற்றங்களுக்கு அதிகமான தண்டனையைக் கொடுத் தார்கள். சிறைத் தண்டனை கட்டாயமாக்கப்பட்டது. குற்றம் செய்தவர்கள் உடனடியாக ஜாமீனிலே போகக் கூடிய நிலை மையை ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால் குடிப்பதைப் பொறுத்த வரையில் 4(1)ஜே என்ற பிரிவிலே அபராதம் போட்டு மாஜிஸ்திரேட் தீர்ப்புக் கொடுக்கலாம் என்ற முறையிலே அந்த அளவிற்கு சமூகச் சீர்திருத்தம் என்ற காரணத்தினாலே அப் பிரிவிலே குற்றம் செய்தவர்களுக்கு தண்டனையின் தன்மையைக் குறைத்து, சமூகக் கண் கொண்டு அந்தப் பிரச்னையைப் பார்த்து, மக்களின் நன்மையைக் கருதி அப்போது அப்படிச் செய்துவைத் திருந்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரிய வில்லை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, பல போலீஸ் அதிகாரிகள் கூடச் சொன்னார் கள், திடீரென்று 4(1)ஜே பிரிவிலே, குடித்ததால் குற்றம் என்று போடப்பட்ட வழக்கிலேகூட, இனிமேல் குடித்தால் வழக் குப் போடவேண்டாம் என்று சுற்றறிக்கையை அனுப்பினார்கள். அதற்கென்று சட்டம் ஒன்று இருக்கும்பொழுது, குடித்தவர்களை கைது செய்யக் கூடாது. வழக்கு அவர்கள் மீது போடப்படக் கூடாது என்று சுற்றறிக்கை ஏன் அனுப்பினார்கள் என்று தெரிய வில்லை. அப்படி சுற்றறிக்கை அனுப்பப்பட்டதாக பல போலீஸ் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எந்த சுற்றறிக்கையை அரசு அனுப்பினாலும், அரசு எந்த உத்திரவைப் போட்டாலும் அந்தச் சுற்றறிக்கையும் உத்திரவும் அப்போது இருக்கின்ற அரசாங்கத்தின் சட்டத்திற்கு முரண்பட்டவையாக இருக்கக் கூடாது. அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கை 4(1)ஜே என்ற பிரி விற்கு முரண்பட்டதாக இருக்கிறது. 4(1)ஜே யை மாற்றியதால்

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1979 அக்டோபர் 27

சமூகத்திலே மக்களிடத்திலே பெரிய ஒரு அதிருப்தி இருந்தது என்பதை அரசு அறிந்திருந்தது. அதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றால், முன்னாலே எப்படி இருந்ததோ அதைக் கொண்டு வரவேண்டுமே தவிர திடீரென்று, 4 (1)ஜே பிரிவின் கீழே கேஸ்கள் போடப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அவர்கள் மீது உள்ள வழக்குகள் வாபஸ் ஆக வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் மதுவை வைத்துக் கொண்டிருந்தவர்கள் மீது வழக்குகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அவர்கள் சிறைத் தண்டனையிலே இருக்கிறார்கள். அவர்கள் நிலைமை என்ன? ஒரு சட்டத்தைச் செய்தால் அது எல்லா மக்களுக்கும் ஒன்றாக இருக்கவேண்டும். அது தான் ரூல் ஆப் லா, சட்டத்தின் ஆட்சி என்று சொல்வார்கள். ஆனால் இது உண்மையிலேயே சட்டத்தின் ஆட்சிக்கு முரண் பட்டது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(மூற்பகல் 11—30)

அடுத்தபடியாக, காவல் துறையைப் பொறுத்தவரையில் கோவில்பட்டியிலும், நெல்லை மாவட்டத்தின் பல இடங்களிலும் பெண்களைக் கூட—இரவு நேரங்களிலே சென்று, பெரிய அதிகாரிகள் அவர்களுடைய வீடுகளைத் தட்டி பெண்களைக்கூட இழுத்துக்கொண்டு வந்து அவர்கள் மீது வழக்குகள் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கூட காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு இருக்கிறார்கள் என்றால் இதைவிடக் கேவலமான நிலைமையை நாம் எங்கும் பார்த்தது இல்லை.

காவல் துறையினரின் போராட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் சிந்தனைசெய்து பார்த்தால், வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் சுதந்திரப் போராட்டக் காலத்திலே நடந்த சிப்பாய்க் கலகத்தை, ஞாபகப்படுத்துகிறது. சுதந்திரப் போராட்டக் காலத்திலே சிப்பாய்கள் சர்வாதிகாரத்தை எதிர்த்து அவர்கள் ஆயுதம் தாங்கி புரட்சி செய்தார்கள். இப்போழுது இருக்கும் காவலர்கள் தங்களுடைய மனிதாபிமான உரிமைகளுக்காக ஆயுதங்கள் இல்லாமல், இன்னும் சொல்லப்போனால் அகிம்சை முறையிலே, காந்தீய முறையிலே போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, அத்தகைய காவலர்களின் பிரச்சினையிலே எத்தகைய ஒரு அணுகுமுறை இருக்கவேண்டும்? அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியதைப் பற்றி ஏற்கனவே நான் சுட்டிக் காட்டினேன். எந்தவிதமான சிறு உரிமைகூட மறுக்கப்படக்கூடாது. சட்டத்தின் அடிப்படையிலே ஒரு சங்கம் அமைத்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசும், மாநில அரசும் சொன்ன பிறகு அந்தச் சங்கத்தின் தலைவரை ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுத்து அவர்கள் வைத்துக்கொள்வதற்கு, அந்த தலைவர் மூலம், அந்த அமைப்பின் மூலம் தங்கள் மனிதாபிமான உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏன் தடையாக இருக்க வேண்டுமென்று தெரியவில்லை. அவர்களை எப்படியாவது அடக்கி தங்கள் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கொள்கையைக் குறித்து காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவிக்கிறது.

1979 அக்டோபர் 27] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

காவலர்களின் நிலைமைகளைப் பார்த்தால், ஆர்டர்லி ஆக இருக்கிறார்கள். பெரிய அதிகாரிகளிடத்திலே அவர்கள் வேலை செய்யும் பொழுது காய்கறிகள் வாங்க வேண்டியது அந்தக் காவலர்கள் தான், அவர்கள் அங்கே துணிகளைத் துவைத்துப் போட வேண்டும். இன்னும் சொல்லப் போனால் காவலர்கள் தங்களுக்கு ஏதாவது ஒரு சலுகை வேண்டுமென்றாலும் கூட, ஒரு விடுமுறை வேண்டுமென்றாலும் கூட அங்கே இருக்கும் பெரிய போலீஸ் அதிகாரிகளின் அம்மையாரை அணுகி அவர்கள் மூலமாகச் சரிக்கட்ட வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்தக் குறைபாடுகளைக் களைவதற்காக ஒரு சங்கம் வேண்டும், அதற்குத் தகுந்த ஒரு தலைவர் வேண்டுமென்று விரும்புவதை எந்த விதத்திலே நியாயம் என்று சொல்ல முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஊதிய உயர்வு கொடுக்கப் பட்டாலும், அது புரையோடிய புண்ணுக்குப் புனுகு தடவியதைப் போல இருக்குமே தவிர அவர்களின் குறைபாடுகளைக் களைந்ததாக இருக்க முடியாது. ஊதிய உயர்வு என்பது அவர்களின் கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தாலும்கூட, அவர்களின் அடிப்படைக் கோரிக்கை என்னவென்றால் காவலர்கள் தங்கள் அடிப்படை மனிதாபிமான உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளத்தான் பேராடுகிறார்கள். ஆகவே, அந்தப் போராட்டத்தை அணுகும் முறையில் இன்று சட்டமும் ஒழுங்கும் பாழ்பட்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

ஆனால் மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் சொன்னதாகப் பத்திரிகைகளில் பார்த்தோம். இப்பொழுது மக்களிடையே சுயக் கட்டுப்பாடு வளர்ந்து விட்டது என்று சொல்கிறார்கள். எந்த அளவிற்குச் சுயக் கட்டுப்பாடு வளர்ந்திருக்கிறது என்று தெரியவில்லை. ஒரு பக்கத்திலே பத்திரிகையிலே சுயக் கட்டுப்பாடு என்ற செய்தியையும் பார்க்கிறோம். மறு பக்கத்திலே ஆளுங்கட்சித் தொண்டர்கள் காவலர்களைத் தாக்குகிறார்கள் என்று சொல்லும் அந்தச் செய்தியையும் பார்க்கும்பொழுது இந்தச் சுயக் கட்டுப்பாடு தமிழகத்திலே எந்த அளவிற்கு இருக்கிறது என்று நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

அடுத்தபடியாக, பிற்பட்டோர் துறையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஒரு புதிய கொள்கையைத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இந்தக் கொள்கையைப் பொறுத்த வரையில் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, ஜாதியின் அடிப்படையிலேதான் இந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டதே தவிர வருமானத்தின் அடிப்படையிலே ஏற்படுத்தப் படவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மோஸ்ட் பாக்வார்ட் கிளாஸ், பாக்வார்ட் கிளாஸ், அதற்குள்ளே கூட, ஒருசில அதிகமான சலுகைகளை மோஸ்ட் பாக்வார்ட் கிளாஸிக்கே

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1979 அக்டோபர் 27

கொடுத்துள்ளார்கள். ஆகவே, அதை அப்படியே நிறைவேற்று. வதிலே என்ன சங்கடம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால், இப்பொழுது கொண்டு வந்திருக்கிற ஆண்டுக்கு ரூ. 9,000-க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்கள்தான் பிற்படுத்தப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற சட்டம் உண்மையிலே வெகுவாக மத்திய தர மக்களை, அடித்தள மக்களைப் பாதிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். உதாரணமாக நான் சொல்லுகின்றேன். ஆசிரியர் ஒருவர், அவர் இடைநிலை ஆசிரியராக இருந்தாலும் சரி, 10 ஆண்டு அனுபவம் பெற்றவராக இருந்தால், அவருடைய மனைவியும் ஆசிரியராக இருந்தால், அதாவது கணவனும், மனைவியும் ஆசிரியராக இருந்தால், நிச்சயமாக, அவர்களுடைய வருமானம், ரூ. 9,000-க்கு அதிகமாகவே இருக்கும். ஆகவே, கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக இருப்பதால் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பிற்பட்டவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகை அவர்களுக்குக் கிடைக்கவில்லையென் றால், அவர்களுடைய உள்ளம் எந்த அளவு வேதனைப்படும், என்று இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால் கணவனும் மனைவியும் ஆலையிலே தொழிலாளியாக இருந்தால், அது நூற்பாலையாக இருந்தாலும், பஞ்சாலையாக இருந்தாலும் அவர்களுடைய வருமானம், போனஸ் இவைகளைச் சேர்த்துப் பார்த்தால், நிச்சயமாக ரூ. 9,000க்கு அதிகமாகவே இருக்கும். அவர்கள் பிள்ளைகளை பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்லி சேர்க்க முடியாத அளவுக்கு ஒரு இக்கட்டான அவல நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அத்தகைய கொள்கையை காங்கிரஸ் கட்சி கண்டனம் செய்கிறது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். ஆகவே, அத்தகைய ஒரு அரசு ஆணையை நீக்கி, ஏற்கனவே இருந்த அடிப்படையிலே செயல்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுடைய பிரச்னையைப் பொறுத்த வரையிலே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எங்களுடைய தலைவர் மதிப்பிற்குரிய ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பல்வேறு கட்டங் களிலே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று ரூ. 40 கோடிக்கு நாங்கள் சலுகை அளித்திருக்கிறோம் என்று சொல்லி, சாதாரண வட்டி, அபராத வட்டி ஆகியவை களை குறுகிய கால அளவுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு கால நீடிப்பு எல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். இந்தச் சலுகைகளைப் பொறுத்த வரையிலே சலுகை என்று சொல்ல முடியாது. இது விவசாயிகளுடைய பொருளாதாரப் பிரச்னை என்று பார்த்து, பொருளாதார அடிப்படையிலே

1979 அக்டோபர் 27] [திரு. ஒ. சோ. வேலுச்சாமி]

எவ்வளவு கடன்பட்டிருக்கிறார்கள். எந்த அளவுக்குத் தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிர்ணயித்து, அந்த அடிப்படையிலேதான் தமிழக அரசு நிவாரணம் அளித்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக ரூ. 40 கோடிக்குக் குறுகிய கால வட்டியும், சாதாரண வட்டியும் தள்ளிக் கொடுத்தால், அது உண்மையான நிவாரணம் ஆகாது.

இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நோய் சாதாரண நோய் அல்ல, பொருளாதார நோய், கடுமையான நோய், ஆகவே அந்த நோய்க்கு நீங்கள் சாதாரண மருந்தைக் கொடுத்து, சிறிய மருந்தைக் கொடுத்து, குணப்படுத்தி விடலாம் என்று நீங்கள் நினைத்தால் அது நிச்சயமாக நடக்காத காரியம். தமிழக அரசு நினைக்கிறது. ரூ. 40 கோடிக்குக் கடன் சலுகை கொடுத்திருக்கிறோமே, மீண்டும் ஏன் விவசாயிகள் போராட்டம் செய்யவேண்டும் என்றெல்லாம் நினைக்கிறது. உண்மையிலே இந்த அரசு அவர்களுடைய பிரச்சனைகளை இன்னும் புரிந்து கொள்ளவில்லையென்பதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய கருத்தாகும். விவசாயிகள் பிரச்சனையில் முழுமையாக நிவாரணம் அளிக்கப்படவில்லை, தீர்க்கப்படவில்லை. ஆகவே, அத்தகைய கொள்கையையும் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நாங்கள் கண்டனம் செய்கிறோம்.

அதற்கடுத்தபடியாக, விவசாயிகள் சார்பிலே பல்வேறு விவசாயத் தலைவர்கள், பல்வேறு கால கட்டங்களிலே சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். பருத்தியைப் பொறுத்த வரையிலே அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். ஆனால், விலை நிர்ணயம் செய்கிற அதிகாரமும், பொறுப்பும் மத்திய அரசுக்கு இருந்தாலும்கூட காட்டன் கார்ப்பரேஷன் மூலமாக விவசாயிகளிடம் இருந்து வாங்கக்கூடிய பருத்திக்கு நல்ல விலை கொடுக்க வேண்டுமென்று ரூ. 15 கோடி, ரூ. 16 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். விவசாயிகள் நேரடியாக காட்டன் கார்ப்பரேஷனிடம் வாங்க வேண்டும், அதன் மூலமாக விவசாயிகளுக்கு ஆதாயம் வேண்டுமென்று ரூ. 15,16 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? நெல்லையில் பல பகுதிகளிலே, சங்கரன் கோவில் போன்ற பகுதிகளிலே நான் பார்க்கிறேன். இந்த காட்டன் கார்ப்பரேஷன் அதிகாரிகளின் துணையோடு கமிஷன் கடைக்காரர்கள் குறைந்த விலையிலே விவசாயிகளிடத்திலே பருத்தியை வாங்கி சேர்த்து வைத்துக்கொள்கிறார்கள். கமிஷன் கடைக்காரர்களிடம் உள்ள பருத்தியை காட்டன் கார்ப்பரேஷன் வாங்கிக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11.40)

ஆகவே, விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய ரூ. 15 கோடி, 16 கோடி இடையிலே இருக்கக்கூடிய காட்டன் கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கும் அங்கே இருக்கக்கூடிய கமிஷன் மண்டி வியாபாரி

[திரு. ஒ. சோ. வேலுச்சாமி] [1979 அக்டோபர் 27

களுக்கும் தான் கிடைக்கிறதே தவிர பருத்தி உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. இதைத் தடுப்பதற்கு தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். நடவடிக்கை எதுவும் எடுத்த தாகத் தெரியவில்லை என்ற காரணத்தால் விவசாயிகளின் சார்பாக அரசினுடைய, கொள்கைகளையும், அணுகுமுறையையும், நிர்வாகத்தையும் கண்டனம் செய்கிறேன்.

அடுத்தபடியாக, தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு வேலை நிறுத்தத்தை அடியோடு ஒழிப்பதற்காக இன்று ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். தொழில் தகராறு திருத்தச் சட்டம் (தமிழ்நாடு) ஆகஸ்ட் 22ஆம் தேதி கொண்டு வரப்பட்டது. வேலை நிறுத்தத்தைத் தடை செய்வது மட்டும் அல்லாமல் ''பார்கெய்னிங் பவர்'' பேரம் பேசி அதிகமான கூலியை தொழிலாளர்கள் பெறுவதையும் பெறுகிற ஒரு வாய்ப்பினையும் இந்த சட்டம் எடுத்துக் கொள்கிறது. ஆகவே, உண்மையாகவே பார்த்தால் இந்த சட்டம் ஒரு முதலாளித்துவ சட்டம். முதலாளிகள் ரூ.50 கொடுக்கிறேன் என்று சொன்னால் ரூ. 150 வேண்டுமென்று தொழிலாளிகள் கேட்டுக் கொண்டிருந்தால் முதலாளிகள் ரூ. 10 அதிகம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்து, ரூ. 50-லிருந்து ரூ. 60 ஆக உயர்வு பெறுகிறீர்கள் ஆகவே நீங்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது, கதவடைப்பு செய்யக்கூடாது என்று சொல்கிறது இந்தச்சட்டம், ஆகவே பாதிக்கப்படுவது தொழிலாளர்கள்தான். இந்த சட்டம் பாதிப்பது தொழிலாளர்களைத்தான்.

தண்டனையைப் பொறுத்தவரையில் 29 (ஏ) பிரிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. ''6 மாத சிறை தண்டனை'' என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. குறைந்தது 6 மாத சிறை தண்டனை கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறது. இது தொழிலாளர்களை எந்த அளவுக்கு நசுக்கக்கூடிய சட்டம். ஒரு தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்தால் ஒரு தொழிற் சங்கம் வேலை நிறுத்தம் செய்தால், வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் மட்டுமன்றி தொழிற்சங்கத் தலைவர்களும் கைது செய்யப்படுவார்கள். அந்தத் தலைவர்களுக்கும் குறைந்த பட்சம் 6 மாதம் தண்டனை கொடுக்கக்கூடிய அளவிலே இந்த சட்டம் இருக்கிறது. 'ஆர்' போட்டால் பரவாயில்லை; ஆனால் ''இம்பிரிசென்மெண்ட் அண்ட் பைன்'' என்று போட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இதை கருப்புச் சட்டம் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு மிக முக்கியமான மக்களுடைய பிரச்சனை. இந்த அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

1979 அக்டோபர் 27] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

ஹரிஜனங்களின் நலத்திட்டத்திற்காக நில ஆர்ஜிதம் செய்யும் திட்டம். மத்திய ஆக்ட் படி ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்தால் ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டுவதற்கு, மயானம் போன்றவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதற்கு சென்ட்ரல் ஆக்ட், மத்திய சட்டத்தைப் பயன்படுத்தினால் 2,3 ஆண்டுகள் அல்லது 5,6 ஆண்டுகள் காலதாமதம் ஏற்படுகிறது, ஆகவே, இதைக் குறைப்பதற்காக இந்த சட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று அன்று மாண்புமிகு ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்களும் அதை வரவேற்றோம். அந்தச் சட்டம் செயலற்றுக் கிடக்கிறது. காரணம் ''ரூல்ஸ்'' விதிகள் தயார் செய்து கொடுக்கப்படவில்லை. நாங்கள் கேள்வி கேட்டோம். அந்த பைல் வேறு துறைகளுக்குப் பிரயாணம் செய்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலே இன்றைக்கு என்ன நிலைமை. ஹரிஜனக் குடும்பத்திலே ஒருவன் இறந்துவிட்டால் புதைப்பதற்குக்கூட இடுகாட்டிலோ சுடுகாட்டிலோ இடம் இல்லாமல் இருக்கிறது. தமிழகத்திலே இந்த அவல நிலையைப் பார்க்கிறோம். பல்வேறு விதங்களிலே இந்தச்சட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக ஹரிஜன வீட்டு வசதி வாரியம். சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலேயே எடுத்துக் சொன்னோம். தாட்கோவை சென்னையில் வைத்திருந்தால் அடிக்கடி அதிகாரிகளைச் சந்தித்து பல்வேறு குறைபாடுகளை எடுத்துச் சொல்லலாம். சென்னையில் இல்லாமல் தலைமை அலுவலகத்தை விழுப்புரத்தில் வைத்திருப்பதால் யார் விழுப்புரத்திற்குச் சென்று அதிகாரிகளைப் பார்க்க முடியும். கன்னியாகுமரி நெல்லை, முகவை, மதுரை மாவட்டங்களில் வீடு கட்டிக் கொடுப்பதிலே ஹரிஜனங்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசை அந்த அடிப்படையில் கண்டனம் செய்ய விரும்புகிறேன். ஆகவே இந்த அரசின் கொள்கைகளை — விவசாயக் கொள்கையாக இருந்தாலும் சரி, அல்லது தொழிலாளர்கள் கொள்கையாக இருந்தாலும் சரி, அல்லது அரிசன மக்களின் பிரச்னைகளிலும் சரி, அல்லது பிற்பட்ட மக்களின் பிரச்னைகளிலும் சரி எந்தப் பிரச்னையானாலும் அதிலே ஒரு நல்ல கொள்கையின் அடிப்படையில் இயங்காமல், அன்றாடம் இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப தான்தோன்றித் தனமாக — அந்த வார்த்தையைப்பயன்படுத்த விரும்புகிறேன் — அந்த அளவிற்கு ஒரு நிலையான, தெளிவான கொள்கை இல்லாமல்செயல்படுவதால் தான், இன்றைக்குத் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி பின்நோக்கிச் செல்கிறது. எந்தச் சமுதாயமும்— அது பிற்பட்ட சமுதாயமாக இருந்தாலும் சரி, தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருந்தாலும் சரி, தொழிலாளர்

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1979 அக்டோபர் 27

களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, எந்தப் பகுதி மக்களுக்கும் இன்று மகிழ்ச்சியாக இல்லை. ஆகவே, அரசாங்கத்தின் இந்த போக்கை, இத்தகைய நிலையற்ற கொள்கையை, தெளிவில்லாத கொள்கையை காங்கிரஸ் கட்சியின் சார்பில் கண்டனம் செய்து அமைகிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு மக்கள் பிரச்சனைகள் சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மான வடிவத்தில் பலவற்றை நாங்கள் உங்களிடத்தில் கொடுத்து இருக்கிறோம். ஆனால், கண்டனத் தீர்மானம் விவாதத்திற்கு வருகிறபோது, அந்தப் பிரச்சனைகள் சம்பந்தமாக ஒத்திவைப்புப் பிரேரணைகள் அனுமதிக்கப் படாததன் காரணமாக இந்தப் பிரச்சனைகளைப் பற்றிய எங்களுடைய விமர்சனங்களையும், எங்களுடைய கருத்துக்களையும் இந்த விவாதத்தின் மூலம் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : சார், ஒரு சின்ன கிளாரிபிகேஷன் ஏற்கனவே நாங்கள் கண்டனத் தீர்மானங்களை தெளிவான பல பிரச்சனைகளின் அடிப்படையில் கொடுத்து இருக்கிறோம். அதன்பேரில் விவாதத்திற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் என்பதில், அந்தப் பொருள் குறித்த சூழ்நிலைகளை (சர்க்கம்ஸ்டான்சஸ்) தான் சொல்லமுடியும் பாலிசி ஒன்றும் கிடையாது. அது செகன்டரியகத்தான் வரும். ஆகவே, கண்டனத் தீர்மானம் கொடுத்தவர்களை முதலாவதாக பேச அழைப்பதற்கு பதிலாக, அட்ஜோர்ன்மெண்ட் மோஷன் கொடுத்தவர்களை முதலாவதாக பேச அழைப்பது என்ன நியாயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிசினெஸ் அட்வைசரி கமிட்டியில் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் பேசுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் ஊருக்கும் போவதாகச் சொன்னார்கள். அதனால் தான் முதலில் கூப்பிட்டேன்.

திரு. க. சுப்பு : ஊருக்குப் போகிறேன் என்று சொன்னால் முதலில் கூப்பிட்டு விடவேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒரு அட்ஜஸ்ட்மெண்ட்தான். ரூல் ஒன்றும் இல்லை.

திரு. க. சுப்பு : நானும்தான் ஊருக்குப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னிடத்தில் சொல்லவில்லையே.

1979 அக்டோபர் 27]

திரு. ரா. உமாநாத் ; உழைக்கும் மக்களின் போராட்டங்கள் என்றால், அரசாங்கத்தின் அணுகும் முறை தொடர்ந்து வெறுப்புணர்ச்சி கொண்டதாகவும், ஆலை அதிபர்களுக்கும், முதலாளிகளுக்கும் ஆதரவாகவும் இருக்கிறது என்பது எங்கள் கருத்து. அரசாங்கத்தின் இந்தக் கொள்கையை எதிர்த்து நாங்கள் வயல்களிலும், தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும் தொடர்ந்து போராடிக்கொண்டுதான் இருக்கிறோம். அரசு கொள்கையை மற்றிக்கொள்ளும் என்ற நல்ல நம்பிக்கையுடன் தான் நாங்கள் அந்தப் போராட்டங்களை நாங்கள் நடத்திக்கொண்டு இருக்கிறோம். அதே நம்பிக்கையுடன்தான் இங்கே இன்று சில விஷயங்களைக் கூர்மையாகவும், கராராகவும் நான் பேச விரும்புகிறேன். அதன் விளைவாக அரசு தனது கொள்கைகளில் மாற்றங்கள் எற்படுத்தினால் தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்லது, நம்முடைய நாட்டுக்கும் நல்லது. சர்வாதிகாரத்திற்கு எதிராக, ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான அந்தப் போராட்டத்திற்கும், அந்த ஒற்றுமைக்கும் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர்— தலைமை)

போலீஸ் ஸ்ட்ரைக்கைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். ஏன் அந்த ஸ்ட்ரைக் நடந்தது என்ற பிரச்னை ஒரு பெரிய கேள்வி. I come to the point straight. சுற்றி வளைத்து பேச விரும்பவில்லை. ஸ்ட்ரெயிட்டாக வருகிறேன். எங்களுடைய கருத்து என்னவென்றால், இந்தப் போலிஸ் ஸ்ட்ரைக்கிற்குக் காரணம், சிறுபான்மை சங்கத்தை — கவர்ன்மெண்ட் ஸ்பான்சர்ட் சங்கத்தை— பெரும்பாலான போலீஸ்காரர்கள் மீது திணிப்பதற்காக அரசு எடுத்து இருக்கும் முயற்சிதான் இந்த ஸ்ட்ரைக்கை தோற்றுவித்தது என்பது மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் ஆழமான கருத்து. அந்தத் திணிப்புதான் It has put the police Machinery out of gear. போலீஸ் இயந்திரத்தின் அதனுடைய ஆணிகளை அரசாங்கத்தின் இந்த முயற்சிதான் கழற்றி விட்டு இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். அதைத் தவிர்க்க வழி இருந்ததா, இல்லையா என்று கேட்டால், என்னைக் கேட்டால், இந்தக் கொள்கை இப்படிக் கொண்டு போய்விடும் என்ற முன் எச்சரிக்கை forewarning கவர்ன்மெண்ட்டிற்கு இருந்ததா இல்லையா என்று கேட்டால், இருந்தது என்று நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

[முற்பகல் 11.50]

போலீஸ் மானிய வாதத்தின்போது, கடந்த பட்ஜெட்டில் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசும்போது குறிப்பிட்டேன். அவர்களுக்குச் சங்கம் வைக்க உரிமை வழங்குவதுதான் வழி என்று குறிப்பிட்டேன். அவர்கள் வெளியிட்ட நோட்டீஸ் எச்ஸ்ராக்ட் எச்சரிக்கை காட்டினேன். மேற்கு வங்காளத்தை மேற்கோள் காட்டிப் பேசினேன். சங்கம்

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

வைக்க உரிமை வழங்கவில்லை என்றால், அதனால் வெடிப்பு ஏற்பட்டால், நாங்கள் அவர்கள் பக்கம் நிற்போம் என்று பகிரங்கமாகச் சொன்னேன். அப்படி நான்பேசும்போது தூண்டி விடுறேன் என்று சொன்னார்கள்.

It is now for you to intervene and avoid.

இப்போதும் தலையிட்டு, அதை நிறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னேன். அந்த கோரிக்கை அப்போது முதலமைச்சரால் நிராகரிக்கப்பட்டது. என்னுடைய எச்சரிக்கை அலட்சியம் செய்யப்பட்டது. பிறகு சில காலம் கழித்து, இந்திய நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக சங்கம் வைக்கின்ற உரிமையை அளித்தார். அதன் பிறகு நயினார்தாஸ் தலைமையில் இருக்கிற சங்கத்தைக் கூப்பிட்டு அங்கீகரிக்க வேண்டியதுதானே. அதற்குப் பதிலாக ஒரு தலைப்பட்சமாக மூன்று அமைப்புகளை உருவாக்கி, போலீஸ்காரர்கள் சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்க அரசாங்கம் மறுத்தது. அதற்கு முதலமைச்சர் வாதத்தை கவனித்து பார்த்தேன். அவருடைய வாதம் விசித்திரமாக இருக்கிறது.

அவருடைய வாதங்களிலே ஒன்று, நயினார்தாஸைச் சேர்ந்தவர்கள் மெஜாரிட்டியாக இருந்தால் இந்தச் சங்கத்தில் சேர்ந்து, இதைக் கடைப்பிடிக்க வேண்டியதுதானே என்பது. அதாவது, சர்க்கார் அமைத்த சங்கத்தில் சேரவேண்டியதுதான் என்பது முதலைமச்சர் வாதம்.

"The boot is on the other leg".

ஒரு சங்கமே போலீசுக்கு இல்லை என்றால் இப்போது அங்கீகரித்திருக்கிற சங்கத்தில் சேரச்சொல்வது நியாயம் தான். இங்கேதான் ஏற்கனவே ஒரு சங்கத்தை அமைத்து, போலீஸ்காரர்கள் செயல்பட்டு வருகிறார்களே. அப்படி இருக்கும்போது,

The question must be asked to the Government by Government themselves.

இந்தக் கேள்வியை அரசாங்கமே அரசாங்கத்தைக் கேட்க வேண்டும். ஏற்கனவே இருந்த சங்கத்தில் அனைவரையும் சேரக் சொல்லி, அதை அங்கீகரிப்பதற்குப் பதிலாக ஏன் புதிய சங்கத்தை ஏற்படுத்தினார்கள், எனபதுதான் கேள்வி.

If Sub-Inspectors and Circle Inspectors join this Association, they will become minorities.

இன்னொரு வாதம். சப் இன்ஸ்பெக்டர்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் இந்தச் சங்கத்தில் சேர்வதால் அவர்கள் சிறுபான்மையாவார்கள். கான்ஸ்டபிள்ஸ், ஹெட் கான்ஸ்டபிள்ஸ் பெரும்பான்மை. ஆகவே, அவர்களுடைய நலன்களை இந்தச் சங்கம் கவனிக்காது. இது என்ன வாதம்?

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

ரெவின்யூ அஃபிஷியல்ஸ் அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். அதில் கீழ்த்தர சிப்பந்திகளும் இருக்கிறார்கள்; தாசில்தார்களும் இருக்கிறார்கள். தாசில்தார்கள் மைனாரிட்டிதான் மெஜாரிட்டியாக இருப்பவர்கள் அவர்களுக்கு கீழ் நிலையில் இருக்கும் சிப்பந்திகள்தான். அப்படி இருந்தபோதிலும் தாசில்தார்களுடைய நலன்கள் பாதிக்கப்பட்டதா? இல்லையே. அரசாங்கம் அந்தச் சங்கத்தை அங்கீகரிக்கவில்லையா? தாசில்தார்கள் நலன் பாதிக்கும் என்று சொல்லி அந்த சங்கத்தை அங்கீகாரம் செய்யாமலா விட்டுவிட்டார்கள்? அதை நிராகரிக்கவில்லையே. அதன் பிரசிடென்ட் திரு. சுப்பிரமணியன். அவர் விரைவில் சப் கலெக்டர் ஆகக்கூடியவர். ஆகையால்தான் கீழ்த்தர சிப்பந்திகள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படி ஒரு சங்கத்தை அரசாங்கம் அங்கீகரித்திருக்கும் போது, அதே மாதிரியான ஒரு சங்கத்தை போலீஸ்காரர்கள் அமைத்திருக்கும்போது ஏன் சர்க்கார் அதற்கு அங்கீகாரம் மறுக்க வேண்டும்?

அது போகட்டும். மிகை கார அமைச்சருக்கு ஒன்று தெரியும். எலக்ட்ரிசிட்டி போர்டில் சங்கம் இருக்கிறது. எலக்ட்ரிசிட்டி ஏபடரேஷன் இருக்கிறது. அதில் தொழிலாளர்களும் சேரலாம், ஸ்டாஃப்பும் சேரலாம் என்ற ரூல்ஸ் இருக்கிறது. ஆனால், மினிகார இலாகா ரூல்ஸ் போட்டு சேர்த்தாலும் தொழிலாளர் பிரதிநிதிகளைத்தான அங்கீகரிக்கிறார்கள். அங்கே 'அக்கவுன்டன்ட் ஏபார்டினேட் அசோசியேஷன்' ஒன்று இருக்கிறது. அதில் ஸ்டாஃப்பும் தொழிலாளர்களும் சேரலாம் என்று ரூல்ஸ் இருக்கிறது. ஆனால் ஸ்டாப் பிரதிநிதிகளாக இருப்பவர்களைத்தான் அங்கீகரிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை அங்கே இருக்கிறது.

அதாவது இந்த முறையிலாவது அவர்களோடு கலந்துபேசி ஏதாவது முடிவெடுக்க முயற்சிகள் எடுத்தார்களா? வெஸ்ட் பெங்காலிலே கூட நான்-கெசடட் அசோசியேஷன் கெசடட் அசோசியேஷன் என்று இரண்டு அசோசியேஷன்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. நான்-கெசடட் அசோசியேஷனில் சப்-இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அந்த சங்கத்தை அங்கீகரித்திருப்பதினால் சப்-இன்ஸ்பெக்டர்களின் நலன்கள் ஒன்றும் பாதிக்கப்படவில்லையே, இங்கு மட்டும் பாதிக்கப்படும் என்று சொல்வதற்கு காரணம் என்ன? இதில் எங்களுடைய கருத்து என்னவென்று சொன்னால் அரசாங்கம் உரிமை வழங்குகிறோம் சங்கத்திற்கு என்று சொல்லுகிறபோது மனமில்லா மனத்துடன் போலீஸ் ஸ்டிரைக்கினுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் இந்த சங்கத்துக்கு அங்கீகாரம் அளித்து டிக்ளேர் செய்யப்பட்டதேயாழிய மனப்பூர்வமாக கொடுக்கப்பட்டது அல்ல எவ்வதுதான். ஆகவே கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது என்று சொல்வார்களே அதுபோல் ஆகிவிட்டது. சங்கம் அமைத்தும் பிரயோஜனம் இல்லை என்றுதான் சொல்ல

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

வேண்டும். விளைவை பார்க்கிறபோது அப்படித்தான் தோன்றுகிறது. வெஸ்ட் பெங்காலைப் பார்த்த பிறகாவது அல்லது இந்த ஸ்டிரைக்கின் விளைவைப் பார்த்த பிறகாவது, அரசாங்கம் தன் தவற்றை திருத்தியிருக்கலாம். ஆனால் அதற்குப் பதிலாக சஸ்பென்ஷன், அரெஸ்டுகள் என்றுதான் மேல் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

அதுவும் இல்லாமல் சி.ஆர்.பி.சி. யை விட்டு மாநிலத்துல் அமைதி நிலவச்செய்வது அவ்வளவு சரியல்ல என்றுதான் சொல்வேன். அது மட்டுமல்லாமல் பார்டர் செக்யூரிட்டி ஃபோர்ஸை கொண்டு வந்து, ஊர் ஊராக இறக்கி வைத்து அவர்களுக்கு சிவில் மேட்டர்களில் வாய்ப்பு கொடுப்பதும் சரியல்ல. அது ராணுவத்திற்கு ஒரு டெம்டேஷன் உண்டாக்குவதில் போய்முடியும். ''It is very dangerour trend''

இப்பொழுது செய்தி வந்திருக்கிறது. நாயினார் தாஸ் காலையில் சிறை வைக்கப்பட்ட பிறகு, மதியத்திற்குள் ஸ்டேட் மெண்ட் கொடுத்து ஸ்டிரைக் வாபஸ் வாங்கச் சொல்லிவிட்டார் என்று வந்திருக்கிறது. உண்மை நிலை என்ன என்று தெரியாது ஸ்டிரைக் வாபஸ் வாங்கச் சொல்லப்பட்டது என்ற அறிக்கை அரசு தரப்பிலிருந்து வெளியான பிறகும், ஸ்டிரைக் செய்யும் போலீஸ்காரர்கள் அதை நம்பத் தயாராக இல்லை. வாபஸ் வாங்கப்பட்டது என்பது உண்மையாக இருந்தால், நாயினார் தாஸை உடனடியாக விடுதலை செய்யுங்கள். அவர்களுடைய சங்க கமிட்டியை கூட்டுவதற்கு வாய்ப்பு கொடுங்கள். அந்த சங்கத்தினுடைய கோரிக்கைகளை ஏற்கத் தயார் என்று டிக்ளேர் செய்யுங்கள். அவர்கள் பேரில் இருக்கிற மேல் நடவடிக்கைகளை கேன்சல் செய்யுங்கள். இப்படிச் செய்வது ஒன்றுதான் இன்றைய சூழ்நிலையில் ஸ்டிரைக்கை தவிர்ப்பதற்கும் போலீசார் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பதற்கும் ஒரே வழி. இது நிச்சயமாகப் பலன் தரும். இது எங்கள் அனுபவம். வெஸ்ட் பெங்காலை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே நான்-கெசட் போலீஸ்காரர்கள் சங்கம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. போன வருஷம் 78-ல் என்று நினைக்கிறேன் அவர்களுடைய ஆண்டு விழாவிற்கு திறந்து வைக்க வரவேண்டும் என்று முதலமைச்சர் ஜோதி பாசு அவர்களை அழைத்தார்கள். ஆனால் அவர் அதற்கு, நீங்கள் கோரிக்கைகளை என்னிடம் தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதனால் நான் திறந்து வைக்க முடியாது, அது சரியல்ல எறு சொல்லிவிட்டார். ஆனால், கான்ஃபெரன்ஸ் நடந்த இரண்டு நாட்களும் முழுக்க முழுக்க அவர் அங்கே இருந்து கவனித்தார். கடைசியில் பேசுகிற போது, உடனுக்குடனே ஆன் தி ஸ்பாட் ஆர்டர்ஸ் போட்டு, கோரிக்கைகள் சிலவற்றை டிக்ளேர் பண்ணினார். எந்த கோரிக்கைகளுக்கு மத்திய அரசினுடைய உதவி தேவையோ அவைகளுக்கு மட்டும், மத்திய அரசை அணுகவேண்டுவதற்கான

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

மூயற்சிகள் மேறகொள்ளப்படும் என்று உறுதியளித்தார். இதன் பலன் எனை தெரியுமா ? அவர் பேசி முடித்தவுடனேயே அந்த சங்கத்தில் ஒரு ரெசல்யூஷன் பாஸ் செய்தார்கள். என்னவென்று தெரியுமா? அரசாங்கத்தினுடைய இந்த அணுகு முறையை நீங்கள் கடைப்பிடிக்கும் வரைக்கும், நாங்கள் வேலை நிறுத்தம் எதுவும் செய்யமாட்டோம், இந்த அணுகு முறையை பயன் படுத்திக்கொண்டு எங்கள் குறைகளை தீர்த்துக்கொண்டு, அரசுக்கு ஒத்துழைப்போம் என்று Written Resolution ஒன்றை பாஸ் செய்திருக்கிறார்கள்.

[நண்பகல் 12—00]

பஞ்சாபிலிருந்து தெற்கே வரையில் சீ3 ஆர். பி., அது இது என்று ஸ்ட்ரைக் எல்லாம் நடந்திருக்கிறது. மேற்கு வங்காளத்தில் செகரட்ரல் சர்வீஸில் உள்ளவர்கள் ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள். ஆனால் ஸ்டேட் கவர்ன்மெண்ட் போலீஸ் ஸ்ட்ரைக் செய்ய வில்லை. கிளர்ச்சி நடக்கவில்லை. காரணம், இந்த 'அப்ரோச்' தான். ஆகவே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சுமூகமான முறையில் தீர்வுகாண இந்த ஒரு அணுகுமுறையைக் கையாள வேண்டும். இந்த ஸ்டேஜிலாவது ப்ரஸ்டீஜ் கொஸ்டின் பார்க்காமல் சர்க்கார் தலையிட்டு இந்த முறையில் தீர்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. அரசாங்கக் கொள்கையின் இன்னொரு அம்சம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்ல வரும்புவது தொழிலாளர்கள் கொள்கை சம்பந்தமாக. இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய உற்பத்தியைச் சீர்குலைப்பது அரசாங்கத்தின் தொழிலாளர்கள் விரோதக் கொள்கை. அது ஒரு அம்சம். அந்த அம்சம் என்னவென்று சொன்னால், சிறுபான்மையினர் செய்யும் ஒப்பந்தங்களை— முன்பு போலீஸ் விஷயத்தைப் பற்றிச் சொன்னேன்— பெரும்பான்மை தொழிலாளர்கள் மீது திணிப்பது என்ற அரசாங்க கொள்கையின் இந்த அம்சம் disruptive production in various units in the State. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு யூனிட்டுகளின் உற்பத்தி பாதித்துக்கொண்டிருக்கிறது. ந்யூஸ் ப்ரின்ட்டுக்கு இன்று அதிக கிராக்கி இருக்கிற நேரத்தில் அரசாங்கத்தின் கொள்கை, சிறுபான்மை தொழிலாளர்களின் கருத்திற்கேற்ப, அவர்களின் சங்கத்தின் கருத்திற்கேற்ப, முதலாளிகளின் கருத்திற்கேற்ப ஒப்பந்தங்கள் பெரும்பான்மைத் தொழிலாளர்களின் மீது திணிக்கப்படுகிறது என்ற இந்த அம்சத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சேஷசாயி பேப்பர் மில்ஸ் உற்பத்தி ஸ்தம்பிக்கப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களின் பதில் என்ன ? அவர்களை அணுகி பேசியபோது, நான் என்ன செய்ய முடியும், டெப்டி கமிஷனர் ஆப் லேபர் கையெழுத்து போட்டு விட்டார். சரியோ தப்போ, 12 (3) படி அந்த ஒப்பந்தத்தை மீறி பிரத்தியேகமாக நாங்கள் மறுபரிசிலனை செய்யவோ அல்லது ரீ-ஓப்பன் செய்யவோ எனக்கு அதிகாரம் இல்லை' என்று

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

அவர்கள் சொல்கிறார்கள். இதுதான் முதல்வர் அவர்களின் வாதம். போன மாதம் 29ஆம் தேதி முதல்வர் தலைமையில் அது சம்பந்தமாக இங்கே கோட்டையில் நடந்த கூட்டத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எல்லோரும் இருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒன்றிரண்டு உண்மைகள் முதல்வர் அவர்களின் முன்னாலேயே நிரூபிக்கப்பட்டன. அது நிரூபிக்கப்பட்டபோது கையெழுத்து போட்ட அந்த டெப்டி கமிஷனர் ஆப் லேபர் அவரும் இருந்திருக்கிறார். லேபர் டிப்பார்ட்மெண்ட் செக்ரட்டரியும் அங்கு இருந்திருக்கிறார். அந்த உண்மை என்ன? அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐ.என்.டி.யு.சி. ஆபீஸ் பேரரும் இருந்தார்கள். அவர் சொன்னார், 21-ம் தேதி கன்சீலியேஷன் நடந்தது, நானும் எச்.எம்.எப். பிரதிநிதியும் எழுத்து மூலம் டெப்டி கமிஷனர் ஆப் லேபரிடம் கொடுத்தோம், ரூ. 75-க்கு குறைவாக இந்த ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்து போடமாட்டோம் என்று சொல்லி கொடுத்து விட்டு நாங்கள் போனோம் என்று இதே டெப்டி கமிஷனர் ஆப் லேபர் இப்படி அவர் சொல்கிறபோது அப்படி நான் சொல்லவில்லை என்று அவர் மறுக்கவில்லை. He was present there. அடுத்து, ஜனதா சங்கப் பிரதிநிதி சொன்னார், முதல் அமைச்சர் அவர்கள் முன்னால் சொன்னார்கள், லேபர் ஆபீஸர் எங்களிடம் சொன்னது இன்று சமரசம் ஏற்படாது; நீங்கள் போகலாம், தேவைப்படுகிறபோது உங்களுக்கு தந்தி அடித்து வர வழைக்கிறேன் என்று சொல்லி அனுப்பி விட்டார் என்று அவரும் போய் விட்டார். பிறகு தந்தி வரவில்லை. ஆனால் மறுநாள் காலையில் நோட்டீஸ் போர்டில் ஒப்பந்தம்தான் வந்து நிற்கிறது. அப்படிச் சொன்ன டெப்டி லேபர் கமிஷனர் தந்தி அடிக்கவில்லை, ஆனால் ஒப்பந்தம் அடுத்த நாள் வந்து நிற்கிறது. இதே டெப்டி கமிஷனர் ஆப் லேபர் அதை மறுக்கவில்லை. அவர் முன்னாலேயே சொல்லப்பட்டது. நான் கேட்கிறேன், இது என்ன 12 (3) என்று. இப்படிச் சொன்னால் என்ன 12 (3) ?. 12 (3)-ன் புனிதத்தன்மையை பற்றி அடிக்கடி பேசக் கூடிய அரசாங்கத்திலிடம் நான் கேட்க விரும்புகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள புளியங்குடியில் பவர் லூம்ஸ் இருக்கின்றன. அங்கே டிஸ்ப்யூட் வந்து விட்டது. அங்கு ஒரே ஒரு யூனியன்தான், வேறு ட்ரேட் யூனியன்ஸ் கிடையாது. லேபர் ஆபீஸர் முன்னால் கன்சீலியேஷன் நடக்கிறது. அந்த யூனியன் டேர்ம்ஸை ஒத்துக் கொள்ளவில்லை. கையெழுத்து போட மறுத்து விட்டார்கள். ஆனால் லேபர் ஆபீசர் என்ன செய்தார்? பொலிட்டிக்கல் பார்ட்டீஸ் ரெப்ரஸென்டேடிவ்ஸிடம் 12 (3) ஸ்டேட்மென்டில் கையெழுத்து வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார். That is there on record. இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்படி பொலிடிக்கல் பார்ட்டீஸ்க்கு அங்கு என்ன லோக்கஸ் ஸ்டாண்ட்டி?

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

He may be member, or leader of a political party. But as a trade union representative ஆக இருப்பார். அங்கு இருப்பது ஒரே யூனியன், அது கையெழுத்து போடவில்லை. பொலிட்டிகல் பார்ட்டீஸ் ரெப்ரஸென்டேட்டிவ்ஸ் என்ற முறையில் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். அதுவும் 12 (3) படி.

ஆகவே, இதில் எல்லாம் கவர்மெண்டின் கொள்கை என்ன? நீங்கள் விரும்புகிற நேரத்தில் 12 (3) செட்டில்மெண்டை பிரீத்து விடுகிறீர்கள். தொழிலாளி நியாயத்தை விரும்புகிற நேரத்தில், மெஜாரிட்டி வொர்க்கர்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் 12 (3) செட்டில்மெண்ட் குறுக்கே நிற்கிறது. இப்படித்தான் அரசாங்கத்தினுடைய கொள்கை இருக்கிறது.

தற்போது 60 நாட்களுக்கு மேலாக பள்ளிப்பாளையத்தில் வேலை நிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உடனடியாக அங்கு தீர்வு காணவேண்டும். உற்பத்தியில்லை, ப்ரொடக்ஷன் இல்லை. ஆகவே உடனடியாக செட்டில்மெண்ட் காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். ஒருக்கால் சொல்லக்கூடும். அட்வகேட் ஜெனரல் சொல்லியிருப்பதாக ஒரு தகவலை லேபர் செக்ரட்டரி எங்களுக்கு தெரிவித்திருக்கிறார்: அட்வகேட் ஜெனரல் லீகல் ஒப்பினியன் கொடுத்திருக்கிறாராம். அதாவது 12 (3) இருக்கிறபோது, கன்லீலியேஷன் நடத்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறாராம். இதைச் சொல்வதற்கு அட்வகேட் ஜெனரல் ஒப்பினியன் தேவையே இல்லை: That is a legal question which any trade union knows. பாயின்ட் அதுவல்ல. 12(3) இருந்தாலும் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே செட்டில்மெண்ட் செய்ய வேண்டும் என்று அரசாங்கமே முன்வரலாம். நிம்கோ மீட்டர் விஷயத்தில் என்ன நடந்தது. அப்போது ஹைக்கோர்ட் டிவிஷன் கொடுத்திருக்கிறது. அப்போது அரசாங்கம் தலையிட்டு நிம்கோ மீட்டர் விஷயத்தில் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்றும் ஆகவே இதற்கு ஸ்டே தரவேண்டும் என்றும் ஐ.என்.டி.யு.சி.யைச் சேர்ந்தவர்கள் ஹைகோர்ட்டுக்கு போனபோது, அந்த பெட்டிஷனை ஹைக்கோர்ட்டு ஏற்றுக்கொண்டது. ஆனால் ஸ்டே கொடுக்க மறுத்து விட்டார்கள். எனை சொன்னார்கள், எழுத்து மூலமாக இருக்கக் கூடாது. 12(3) இருக்கும்போது, லீகலைஸ்டு கன்லீலியேஷன் ப்ரொஸீடிங்ஸ் என்று மட்டும் தான் போடக் கூடாது என்று சொல்லப்பட்டது. உற்பத்தி பாதிக்கப்படுகிறது. தொழில் சச்சரவு ஏற்பட்டிருக்கும், அப்படிப்பட்ட நேரத்தில் 'இன்டஸ்ட்ரியல் பீஸை ரெஸ்ட்டோர்' செய்வதற்காக அரசாங்கமே நினைத்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணலாம் என்றிருக்கிறது.....

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

There is a decision. Why do you require a Advocate - General ? The latest High Court decision இங்கேயிருக்கிறது, டிஸ்ப்யூட் இருக்கிறது, எப்படி பேச்சு வார்த்தை நடத்துவது என்று அதுவரைக்கும் சொன்ன முதல்வர் பதில் சொன்ன நேரத்தில், ஹைக்கோர்ட் ஸ்டே கொடுக்க மறுத்து விட்டது என்பதை திரு. கோவிந்தராஜன் அவர்கள் சுட்டிக் காட்டிய நேரத்தில், கன்ஸ்லியேஷன் என்ற அடிப்படையில் போடாமல் முதலமைச்சர் தலைமையில் எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடியிருந்து பேசி முடிவு எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அதை தொடர்ந்து ஐ.என்.டி.யு.சி.யும் தொழிற் சங்கத்தை மாற்றி அமைத்துக்கொண்டது. ஆகவே இந்த முறையில் அரசாங்கம் தலையிட்டு இந்த வேலை நிறுத்தத்தைத் தீர்க்கலாம். அதற்கு மாறாக வேலை நிறுத்தம் நீடித்துக்கொண்டு போகக்கூடிய அளவில் தற்போது அரசாங்கம் நடவடிக்கைகளை கையாண்டு கொண்டிருக்கிறது. தொழிலாளர்களை பாதுகாப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய வேலை நிறுத்தத்தை உடைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. வேலை நிறுத்தத்தை தீர்ப்பதற்கு முதலாளிகளும் தலையிட முன்வரவில்லை, அரசாங்கமும் தலையிட முன்வரவில்லை. அரசாங்கம் தலையிட வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காக நான்கு தொழிலாளர்கள் அங்கேயுள்ள கேட்டின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள், ஆனால் என்ன நடந்தது, அவர்கள் உண்ணாவரதம் இருக்கும் இடத்திற்கு எதிரில் 300 பேர் சேர்ந்து பந்தல் போட்டு கொண்டு, சாப்பிடாமல் இருக்கும் அந்த தொழிலாளர்களுக்கு எதிராக 300 பேர்களை சாப்பிட வைக்கிறது — உண்ணும் விரதம் — என்ற பெயரால் சாப்பிட வைப்பது என்பதை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் ....

I cannot understand, G vernment செய்வதற்கு கௌண்டர் செய்வது, கௌண்டருக்கு கௌண்டர் என்ற முறையில் பார்டிக்கு பார்டி என்ற அடிப்படையில், சாப்பிடாமல் இருக்கும் தொழிலாளிகளுக்கு எதிராக 300 பேர்களை உட்கார வைத்து உண்ணும் விரதம் என்ற பெயரில் சாப்பிடவைப்பது என்பது சரிதானா, எவ்வளவு முறைகேடான செயல் இது. highest provocati n which may lead to blood bath. இதற்கு மேலாக ஆத்திரம் ஊட்டக்கூடிய வகையில் என்ன நடக்கிறது என்றால், 300 பேர்களுடைய பேரிலும் நண்டனத்தை கேஸ் போடுவதற்குப் பதிலாக விக்டிமைஸ் செய்யக்கூடிய விதத்தில் அங்குள்ள தொழிலாளிகள் பேரில் நண்டனத்தை போட்டு — 107 பேர்கள் மீது கேஸ் போட்டு சேலம் மத்திய சிறையில் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10]

எனவே, இந்த நிலையை அரசாங்கம் கைவிட வேண்டும். இந்த முறையில் பிரச்சினையை செட்டில்மெண்ட் பண்ண

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

முடியாது. சிம்கோ மீட்டர்ஸ் உடன்பாட்டிற்குப் பிறகு, பிரச்சினையை 4½ மாதங்களுக்கு இழுத்துக்கொண்டு போகக் கூடாது. செட்டில்மெண்ட் பண்ணுவதற்கு வேறு வழி இருக்கிறது. ஆகவே, இதிலே அரசாங்கம் தலையிட்டு செட்டில்மெண்டு பண்ண வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

போன செஷனிலே, தொழிற் கொள்கைப்பற்றி விவாதம் வந்த போது, வேலை நிறுத்தத்தை உடைப்பதுபற்றி, இதிலே அரசாங்கத்தின் கொள்கை பற்றி எங்கள் கட்சியின் சார்பாக எடுத்துச் சொன்னோம். வேலை நிறுத்தத்தை உடைப்பது என்ற இந்தக் கொள்கையில் இரண்டு முறைகள் இருக்கின்றன. (1) பேசித் தீர்க்கலாம், அதன்மூலம் செட்டில்மெண்ட் பண்ணி வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்குவது. (2) உடைத்துத் தீர்ப்பது. ஆனால், கவர்ன்மெண்ட் உடைத்துத் தீர்ப்பதாகத் தான் இருக்கிறதே தவிர, பேசித் தீர்ப்பதாக இல்லை. ஆகவே, உடைத்துத் தீர்ப்பது என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை என்பது என் கருத்து.

ஸ்டிரைக் தடைச் சட்டத்தைப் பற்றி எனக்கு முன்னால் பலர் பேசினார்கள். இதிலே உள்ள சட்ட சம்பந்தமான பிரச்னைப் பற்றியும் பேசினார்கள். இதுபற்றி போன சட்ட சபையிலும் பேசப்பட்டது. போன சட்ட சபையிலே இந்த ஸ்டிரைக்கைத் தடுப்பதற்காக சட்டம் கொண்டு வர இருந்தது. ஆனால், அரசாங்கம் இந்த சட்டசபையிலே அந்தச் சட்டத்தைக்கொண்டு வராமல் லாப்ஸ் ஆகும்படி பண்ணிவிட்டார்கள். அப்படி லாப்ஸ் பண்ணிவிட்டதிலே ஒரு இப்ளிகேஷன், ஒரு பொருள் இருக்கிறது. அப்படிச் செய்வதன் மூலம், அரசாங்கம் தந்திருந்த வாக்குறுதியை, கோரிக்கையை சட்டமாக ஏற்றுக் கொண்டது என்றுதான் அர்த்தம். இந்த சட்ட சபையைப் பொறுத்தவரைக்கும் இந்த சட்டசபையிலுள்ள எல்லா எதிர்க் கட்சிகளுடைய அவாவும் ஸ்டிரைக்கை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்பதுதான். அரசாங்கம் இதை இப்படி லாப்ஸ் செய்ததின் அர்த்தம், அதை ஏற்றுக் கொண்டது என்பதாகும். இப்படி லாப்ஸ் பண்ணி, சட்டசபை முடிந்தவுடனே அடுத்த சட்டசபை கூடுவதற்கு முன்னால், மறுபடியும் அந்தச் சட்டத்தை கொண்டு வருவது என்றால் "வாட் டஸ் இட் மீன் ?" இது சீரியஸ் பிராப்ளம் இல்லையா ? சட்டசபையில் உறுதி கொடுத்ததற்குப் பிறகு, மறுபடியும் சட்ட சபை கூடுவதற்கு முன்னால், இந்த இன்டரிம் பீரியட்டில் again the same is being brought in the form of an ordinance என்று சொன்னால், அது இந்த அவையை அவமதிப்பதாகாதா என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த முறையிலே இந்தப் பிரச்னைகள் இருக்கின்றபோது, வேலை இல்லாத இளைஞர்களைப் பார்த்து, நீங்கள் தயாராக இருங்கள், முன்வர வேண்டும் என்று சமீபத்தில் முதல்வர் அவர்கள் அறைகூவல் விட்டதாகப் பத்திரிகையிலே படித்தேன். எதை

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

ஏற்க முன்வரவேண்டும் என்று அறைகூவல் விட்டிருக்கின்றார் / வேலை வழங்குவதையா, இல்லை, நிவாரணமா, இல்லை. பட்டம் வழங்குகிறேன், அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றா. என்ன பட்டம்? கருங்காலிப் பட்டம் வழங்குகிறார். நல்ல பட்டமாக இருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளலாம். கருங் காலிப் பட்டம் வழங்குவதற்கு அறைகூவல். வேலையில்லாத இளைஞர்களைப் பற்றி அரசாங்கத்தின் மதிப்பு என்ன என்ப தைப் புரிந்து கொள்ள வேண்டும். படித்தவர்கள், படிக்காதவர் கள், வேலை இல்லாதவர்கள் மானமுள்ள பிரஜைகளாக வாழ நிரந்தரமான வேலை கொடுப்பதற்கு லாயக்குள்ளவர்களாக இந்த அரசாங்கம் மதிப்பிடவில்லை. அவர்களை இந்த மாதிரி யான கருங்காலி வேலைக்கு லாயக்கு என்று கருதுகிறார்கள். சரி, அந்த வேலையையாவது கொடுத்தார்களா என்றால், அந்த வேலையையும் கொடுக்கவில்லை; நிவாரணமும் கொடுக்க — வில்லை. வெறும் அறைகூவல் மட்டும்தான். கருங்காலி வேலைக் குத் தான் லாயக்கானவர்கள் என்ற முறையிலேதான் அறைகூவல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

மூன்றாவதாக, இந்த ஸ்டிரைக்கை, வேலை நிறுத்தத்தைத் தடுப்பதற்கு வன்முறையைத் தூண்டுவது, என்பதுதான் கருத் தாக இருக்கிறது. இது ஒரு ''பாட்டர்ன்'' ஆகிவிட்டது. அரசாங்கத்தின் சார்பிலே இது ஒரு ''பாட்டர்ன்'' ஆகிவிட்டது. ஐ ஆம் சப்ஜக்ட் டு கரெக்ஷன். ''எக்ஸ்பிரஸ்'' ''தினமணி'' பத்திரிகைகளிலே, மதுரை, மற்றும் தென் மாவட்டங்களிலே போன போது முதல்வர் அவர்கள் பேசியதாக வந்திருக்கிறது. அதிலே அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்று சொன்னால், போலீஸ் ஸ்டிரைக்கை ரெபர் பண்ணிப் பேசுகின்றபோது, பாது காப்பு பணி செய்ய மறுத்தால், நாளைய தினமே உங்கள் உயி ருக்கும் உங்கள் குடும்பத்தினர் உயிருக்கும் ஆபத்து நேர்ந்தால் என்ன செய்வீர்கள்?

ரொம்ப இன்னோசென்ட் ஸ்டேட்மெண்ட்தான். அதை தான் ஒத்துக் கொள்கிறேன். அதனுடைய இம்ப்ளிகேஷனை அவர் பின்னால் இருக்கக்கூடிய ஊழியர்கள் எல்லாம் ஒரே லெவலில் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அதை வேறு மாதிரி புரிந்து கொள்பவர்கள் இருக்கிறார்கள். ஸ்டிரைக் பண்ணக்கூடிய போலீஸ்காரர்களுக்கு எதிரான வன்முறையை உபயோகப்படுத்த எங்களுடைய தலைவர் க்ரீன் சிக்னல் கொடுத்து விட்டார் என்று எண்ணுவார்கள், அதற்குப் பிறகுதான் வத்தலகுண்டு நடந்தது. அதற்குப் பிறகுதான் திருமங்கலம் நடந்தது. இந்த இன்ஸ்டன்சஸ் எதைக் காட்டுகிறது என்று சொன்னால் — Strike breaking is being institutionalised by this Government. வேலை நிறுத்த உடைப்பு என்பதற்கு ஒரு நிறுவன வடிவமே கொடுக்கப்பட்டு வருகிறது. என்பதை எங்களுடைய கருத்தாகச் சொல்ல விரும்புகிறோம்.

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

லேபர் இலாகா கொள்கைக் குறிப்பில் பட்ஜட் விவாதத்தின் போது கொடுத்தபோது, '' காண்டிராக்ட் முறையை ஒழிப்பதல்ல, அதை முறைப்படுத்துவதுதான் அரசின் கொள்கை '' என்று கொள்கைக் குறிப்பில் நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அப்போது அது எனக்குப் புரியவில்லை. எனக்கு வியப்பாக இருந்தது. '' காண்டிராக்ட் அபாலிஷன் அண்டு ரெகுலேஜன் ஆக்ட் ''-ல் 10-வது ஷரத்தில் தெளிவாக என்ன இருக்கிறது என்று சொன்னால் — நிரந்தர தன்மை வாய்ந்த வேலைகளில் ஒழிப்பு —

That is the work of a perennial nature. Contract is to be abolished. முறைப்படுத்துவது அல்ல. நிரந்தரத் தன்மை உள்ள வேலைகளில் காண்டிராக்ட் ஒழிப்பு மற்ற வேலைகளில் காண்டிராக்ட் முறைப்படுத்துவது — அப்படித்தான் அந்தச் சட்டத்தில் இருக்கிறது. ஆகவே, காண்டிராக்ட் ஒழிப்பு என்பது எங்களுடைய நோக்கமல்ல என்று சட்டத்திற்கு விரோதமாக அமைச்சர் எப்படிக் கூறினார் என்பது வியப்பாக இருந்தது. இப்போது சிறிய வெளிச்சம் ஏற்பட்டிருக்கிறது., அந்த பாயின்டில்,. இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த போர்டு இருவர் கொண்ட சப் கமிட்டியை நிறுவியது. முதலாளி பிரிதிநிதி திரு. ராஜாராம் — ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல — தொழிலாளர்கள் பிரிதிநியாக சேலம் இந்திரா காங்கிரஸ் எம்.பி. நண்பர் இராமமூர்த்தி அவர்கள். அவர்கள் இருவரும் மூன்று மாதம் பல்வேறு தொழிற்சாலைகளுக்குப் போய் தொழிற்சங்கப் பிரிதிநிதிகள், முதலாளிகள் பிரிதிநிதிகளைச் சந்தித்துப் பேசி அவர்களுடைய சிபாரிசுகளைக் கொடுத்தார்கள். சிமெண்ட் தொழிலிலும் பேப்பர் தொழிலிலும் எந்தெந்த இடத்தில் காண்டிராக்டை ஒழிக்கலாம் என்று அவர்கள் சிபாரிசு கொடுத்தார்கள். அதிலே பார்க்க வேண்டியது என்னவென்று சொன்னால் முதலாளி பிரிதிநியும் ஒத்துக் கொண்டு கொடுத்த சிபாரிசு அது. ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்தது அரசின் இந்த நிலையை எதிர்த்து இந்திரா காங்கிரஸ் எம்.பி. நண்பர் இராமமூர்த்தி அவர்கள் அந்த போர்டிலிருந்து இந்த ஆகஸ்டு மாதம் 13-ஆம் தேதியன்று ராஜினாமா செய்துவிட்டு போய்விட்டார்கள். காரணத்தைக் குறிப்பிட்டு முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதனுடைய நகல் என்னிடத்தில் இருக்கிறது. இரண்டு சார்ஜை அவர் லெவல் பண்ணுகிறார். அவர் முதலமைச்சரை வேண்டிக் கொள்கிறார்.

சேஷசாயி பேப்பர் மில் நிர்வாகம் இந்த இரண்டு பேரும் சேர்ந்து கொடுத்திருக்கக்கூடிய காண்டிராக்ட் ஒழிப்பு சிபாரிசுகளை வாபஸ் வாங்கவேண்டுமென்று சொல்லி இந்த இருவருக்கும் நிர்பந்தம் கொடுத்தார்கள். முதலாளி பிரிதிநியும், தொழிலாளி பிரிதிநியும் ''நாங்கள் அதற்கு மறுத்து விட்டோம்'' என்று சொல்லுகிறார்கள். இந்தக் கடிதத்தின் ஒரிஜினல் சீஃப் மினிஸ்டரிடம் இருக்கிறது. அதன் காப்பிதான் என்னிடம் இருக்

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

கிறது. அந்த ரெசிக்னேஷன் லெட்டரில் சீரியஸ் சார்ஜஸ் இரண்டு இருக்கிறது. அந்த லெட்டர் முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்ததா என்று விவரம் எனக்குத் தெரியாது.

[பிற்பகல் 12-20]

அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியாது. நான் அரசாங்கத்திடம் சொல்லவிரும்புவது ஒன்று தான், சேஷசாயி சம்பந்தமாக இந்த அரசாங்கம் ஒரு தனி அக்கறை, ஆதரவு கொடுக்கிறது என்ற இம்ப்ரஷன் ஏற்படுகிறது. திஸ் இஸ், தி தேர்ட் இன்ஸ்டன்ஸ். அதனால் தான் அக்கறை என்ற வார்த்தையை இங்கே ஒருவர் பிராம்ப்ட் பண்ணினாலும், நான் அது வேண்டாம் விவகாரம் என்ற முறையிலே, ஆதரவு என்று சொன்னேன். திஸ் இஸ் தி தேர்ட் இன்ஸ்டன்ஸ். பர்ஸ்ட் இன்ஸ்டன்ஸ் சிம்கோ மீட்டர் செக்கன்ட் இன்ஸ்டன்ஸ் பள்ளி பாளையம். இப்போது தேர்ட் இன்ஸ்டன்ஸ் காண்டிராக்ட் லேபர் விஷயம், திரு ராமமூர்த்தி சொல்லியிருக்கக் கூடிய அனுபவம். சிம்கோவிலே எங்கள் யூனியன் பலியாக்கப்பட்டது. பள்ளிபாளையத்திலே ஜனதா, எங்கள் யூனியன், ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி., பலியாக்கப்பட்டன. இப்போது காண்டிராக்ட் விஷயத்திலே காங்கிரஸ் (ஐ)-முன்னாள் எம்.பி. ராமமூர்த்தி சொல்லியபடி—பலியாக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் (ஐ) இப் போது தான் அந்தப் பக்கம் இருக்கிறது. ஆகவே இதிலே பாலிட்டிக்ஸ் பண்ணியிருக்க முடியாது. நான் பார்த்தேன், ஆகஸ்ட் 13ஆம் தேதி ராஜினாமா செய்திருக்கிறார் அவர். ஆகஸ்ட் 13ஆம் தேதியிலே எல்லாம் நண்பர்களாகத்தான் இருந்தார்கள். தஞ்சாவூரிலே எல்லாம் இணைப்பு இருந்தது. அந்த இணைப்பு இருந்தபோது அந்தச் கட்சியைச் சேர்ந்தவர் இந்தக் காரணத்தைக் கூறியிருக்கிறார். ரிசைன் பண்ணியிருக்கிறார். ஆகவே இது ஒரு சீரியஸான பிரச்சினை. இதிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாற்றுச் சங்கங்களைக் குறிவைத்துத் தாக்குவதில் போலீஸ் எவ்வளவு துணிந்து இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்பு கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே கடந்த 4, 5 மாதங் களிலே போலீஸ் விளையாடியிருக்கிறார்கள். இந்த ஒரு உதா ரணம் போதும், போலீஸ் நடவடிக்கையைக் கண்டித்து சி.ஐ.டி.யு. கூட்டும் போடுவது என்று முடிவு செய்தார்கள்.. போலீஸ் ஆக்டின்படி அந்தக் கூட்டத்திற்கு அனுமதி தேவை யில்லை, 144-ம் இல்லை, கூட்டத்திற்குத் தடையே இல்லை. ஆனால் மைக் லைசென்ஸுக்காக டி.எஸ்.பி.யைக் கேட்டால், அந்த டி.எஸ்.பி. ஏதோ மாஜிஸ்திரேட் புரசீடிங்ஸ் மாதிரி போட்டு, நீங்கள் பேசக் கூடிய கூட்டம் அதாவது போலீசைக் கண்டித்துப் போடக்கூடிய கூட்டம், மேல் அதிகாரிகளோடு பேசித் தீர்க்க வேண்டிய விஷயமாக இருப்பதால் பொதுக் கூட்டத்தில் பேச வேண்டிய அவசியம் இல்லை என்பதால் நீங்கள் பொதுக் கூட்டம் போடக் கூடாது என்று சொல்லியிருக்கிறார். இது ஏன்.

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

ஒரு கூட்டம் போடுவதா வேண்டாமா என்பது கட்சிகள் முடிவு செய்யவேண்டியது, பிரஜைகள் முடிவு செய்யவேண்டியது, ஸ்தாபனங்கள் முடிவு செய்யவேண்டியது, ஏன் டி.எஸ்.பி. முடிவு செய்ய வேண்டும்? 31-ம் கிடையாது, 144-ம் கிடையாது. ஆனால் மீட்டிங் போடக்கூடாது என்று அவர் சொல்லியிருக்கிறார். வேண்டுமானால் யு கேன் கால் பார் திரிக்கார்ட்ஸ். அந்த முறையிலே அவர் செய்துகொண்டிருக்கிறார். இந்த ஒரு உதாரணத்திலிருந்தே நீங்கள் முடிவுக்கு வரலாம். நம்முடைய மறைந்த உறுப்பினர் ஞானசிகாமணி அவர்களுடைய ஆபீஸில் நுழைந்து போலீஸ், ஏதோ குடித்தவரைப் பிடிப்பதற்காகப் போனார்களாம், போய் அங்கே குடித்தவரை வைத்து அடி அடி என்று அடித்திருக்கிறார்கள் பிடித்து விட்டால் கொண்டு போங்கள், ஏன் அங்கே வைத்து அடிக்கவேண்டும், இப்போது கேஸ் எங்கள் பேரிலே இருக்கிறது.

அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைக்கு மிகவும் பலியானது சேலம் மேன்னஸைட் தொழிலாளர்கள். லீஸ் புதுப்பிக்க வில்லையாம் அரசாங்கம். நல்லது. அங்கே மேட்டா என்பவர் கம்பெனி வைத்திருந்தார். அந்த லீஸ் லைசென்ஸை புதுப்பிக்க வில்லை. நல்லது. சர்க்கார் அந்தத் தொழிலைச் செய்கிறது. நல்லது. மேட்டாவின் இயந்திரங்களை வாங்கி அரசே நடத்த முடிவு செய்கிறபோது அந்தத் தொழிலாளர்களின் சர்வீஸ்க்கு பாதுகாப்புக் கொடுக்க வழி செய்யவேண்டும் அல்லவா, அது அரசாங்கத்தின் கடமையல்லவா. அதைச் செய்யவில்லை. 10, 15, 20 வருஷங்கள் சர்வீஸ் போட்ட தொழிலாளர்களின் சர்வீஸ் கட் செய்யப்படுகிறது. அவர்களை புரபேஷனர்களாக செய்திருக்கிறார்கள். 20 வருஷம் சர்வீஸ் ஆனவரை புரேபேஷனராக எதற்காக வைக்க வேண்டும். அதுவும் 6 மாதம் புரபேஷன் இல்லை. அவருடைய சர்வீஸை கட் பண்ணி வைத்திருக்கிறார்கள். பழைய சர்வீசுக்குப் பணம் எங்கே என்று கேட்டால் மேட்டாவிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். அவரிடம் சென்று கேட்டால், இதற்கு ஒன்றேகால் கோடி ரூபாய் ஆகுமே, நான் எங்கே போவது என்று சொல்கிறார். இதனால் தொழிலாளர்களின் நிலைமை என்ன வென்றால், பழைய சர்வீசையும் ரென்யூ செய்ய முடியவில்லை, இவரிடமிருந்து பணமும் கிடைக்கவில்லை. பணம் இல்லை என்று மேட்டா மறுக்கிறார். பழைய சர்வீஸ் வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டால் சர்க்கார் மறுக்கிறது. ஆகவே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்குத் தெருவில் நிற்கிறார்கள். லேபர் அட்வைசரி போர்டிலே பேசி, கடுமையான விவாதம் நடந்து, லேபர் நல அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஹை லெவல் ஆபீசர்ஸ், கவர்ன்மென்ட் ரெப்ரசன்டேட்டிவ்ஸ், லேபர் ரெப்ரசன்டேட்டிவ்ஸ் ஆகியோர் உட்கார்ந்து பேசித் தீர்க்கலாம் என்று உத்தரவாதம் கொடுத்தார். ஆனால் அந்த வாக்குறுதி இன்றைய வரையில் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அந்த முறையில் இது இருக்கிறது. (குறுக்கீடு) இவ்வாறு தொழிற் சங்கங்களின் பிரிதிநிதிகள் சொன்னார்கள். நீங்கள் சொன்ன

[திரு. ரா. உமாநாத்] [1979 அக்டோபர் 27

கமிட்டிக் கூட்டம் கூட்டப்படவில்லை, நடத்தப்படவில்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையிலும் சொன்னேன், நான் வேண்டுமானால் மேலும் வெளிப்படை செய்கிறேன்.

மீண்டும் இந்த 12(3) விஷயத்தில் இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். டி.வி.எஸ். நிறுவனத்தில் வருகிற பொழுது நாங்கள்தான் மெஜாரிட்டியாக இருந்தாலும்— லேபர் ஆபீசர், வெளிப்படை செய்து விட்டேன், ஐ.என்.டி.யு.சி. தான் மெஜாரிட்டி என்று ஸ்டெரய்ட்டாகச் சொல்லி விட்டார். நாங்கள் 'சேப்டர் ஆப் டிமான்ட்ஸ்' கொடுத்தும், நீங்கள் மெஜாரிட்டி இல்லை என்று நிராகரித்து விட்டார்கள்.

ஆனால் நெல்லிக்குப்பத்தில் ஒரேயொரு யூனியன்தான் அங்கே இருக்கிறது. ரெஜிஸ்டர்ட் யூனியன் என்று ஒரே யூனியன் இருக்கிறது. ஆனால் அங்கே கொஞ்சம்பேர் ஆக்ஷன் கமிட்டி என்ற பெயரால் ரெஜிஸ்டர்ட் யூனியனில் டிஸ்ப்யூட் காரணமாக லேபர் டிபார்ட்மெண்ட் இந்த விஷயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டார்கள். ஃபெய்லியர் ரிப்போர்ட்தான் கிடைக்கப் பெற்றது. லேபர் டிபார்ட்மெண்ட் செக்ரட்டரி ஆக்ஷன் கமிட்டிக்கு அனுப்புகிறார். ஏன் ஆக்ஷன் கமிட்டிக்கு அனுப்புகிறார்? ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட விஷயத்தைக் இந்தப் பாதையிலே போனால் நீங்கள் ஜெயிக்க முடியாது, கையிலே என்ன பலம் இருந்தாலும் ஜெயிக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சி.ஐ.டி.யு. என்றும், மற்ற யூனியன் என்றும் பார்த்து 12(3) செட்டில்மெண்டில் உங்கள் ஆளை ஸ்பான்சர் செய்ய வேண்டுமென்ற நிலையில் you do it so openly and defiantly. ஆகவே, இந்தக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறோம்; அதை மிக கவலையுடன் வற்புறுத்துகிறோம். ஏனென்றால் வரும் நாடாளுமன்றத் தேர்தல் பெரும் அரசியல் போராக நாடு பூராவும் நடக்கக்கூடிய தேர்தல். இதில் மத்தியிலே இந்திரா சர்க்கார் வருகின்ற நிலைமையைத் தடுக்க வேண்டுமென்று ஆளுங்கட்சி விரும்புகிறது என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். நீங்கள் விரும்புகிறீர்கள் அது வரக்கூடாது என்று. மீண்டும் தனி நபர் குடும்பம், அரசாங்கத்தில் தனி நபர் குடும்ப ஆதிக்கம் வரக் கூடாது என்று ஆளுங்கட்சி விரும்புகிறது. அது நல்லது. ஆனால் அந்த அரசியல் நோக்கத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்றால் தொழிற்சங்க இயக்கத்திற்கு விரோதமாகச் செல்வதன் மூலமாக சர்வாதிகாரச் சக்திகளைத் தேர்தலில் முறியடிக்க முடியுமா? தொழிற் சங்க இயக்கத்திற்கு விரோதமாக அரசாங்கம் செயல்பட்டால் நீங்கள் எப்படி இந்தக் குறிப்பிட்ட அரசியல் குறிக்கோளை அடைய முடியும்? ஆகில் நீங்கள் வெற்றி பெற முடியுமா? விவசாயத்

1979 அக்டோபர் 27] [திரு. ரா. உமாநாத்]

தொழிலாளர்களுக்குச் சட்டப்படி அரசாங்கம் வெளியிட்டிருக்கும் கூலியை நிறைவேற்றவேண்டுமென்று கிராம மக்கள் போராடுகிறார்கள். அந்த நேரத்தில் சட்டப்படியான கூலியைவிட குறைத்துக் கொடுப்பேன் என்று சொல்லும் நிலப்பிரபுக்களுக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுப்பது என்பதை பாலிசியாக வைத்துக் கொண்டால் சர்வாதிகாரத்தையும், எதேச்சாதிகாரத்தையும் எதிர்க்க முடியுமா ? அதில் நீங்கள் வெற்றி பெற முடியுமா?

அதுமட்டுமல்ல. உழைப்பாளி மக்களின் கொந்தளிப்பு என்று தமிழ்நாட்டில் ஒரு பகுதியிலே இருக்கும்போது, அந்த மக்களுக்கு 'சப்ஸ்டான்ஷியல் கன்செஷன்' கொடுத்து நிவராணம் கொடுக்காமல் அந்தப் போராட்டத்தில் வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறீர்களா ?

இப்படிப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் சர்வாதிகாரத்திற்கு எதிரான அரசியல் போரை அரசாங்கம் பலவீனப்படுத்துகிறது என்பது எங்கள் கருத்து. ஆகவே, இந்தக் கொள்கையைக் கைவிட்டு விட்டு இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்களை தங்கள் பக்கம் இழுக்கும் மாற்றுக் கொள்கைகளை அமல்படுத்தினால் இன்றைக்கு நீங்கள் வைத்திருக்கும் அரசியல் குறிக்கோளை நிறைவேற்ற முடியும். ஆகவே, அந்தப் பாதைக்கு நீங்கள் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்,

[பிற்பகல் 12-30]

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் முன்பு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கண்டனத் தீர்மானம் விவாதிக்கப்பட்டு எனக்கு முன் பேசிய பல கட்சித் தலைவர்களுடைய கருத்தையும் அவையில் கேட்டேன். இந்திய தேசிய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக நான் என்னுடைய கருத்துக்களைச் சுருக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜனநாயக மரபுபடி, எதிர்க்கட்சிகள் அரசினுடைய நடவடிக்கைகளைக் கண்டித்து நல்ல ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறுவது மரபு என்ற முறையினை நான் வரவேற்கிறேன். ஆனால், இன்று அவையின் முன்பு விவாதிக்கப்படுகிற கண்டனத் தீர்மானம் அவசியம்தானா ? அது அவசியம் இல்லையென்று நான் கூற ஆசைப்படுகிறேன். காரணம், அரசினுடைய நல்ல நடவடிக்கைகளை, நல்ல ஆக்கபூர்வமான திட்டங்களை ஆதரிப்பதும், செய்யத் தவறிய அல்லது செய்ய வேண்டாத காரியங்களைச் செய்திருந்தால் அவைகளை கண்டித்துப் பேசுவதும் தான் ஜனநாயக மரபு என்று நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் போது, சட்டமன்றம் கூடுகிற ஒவ்வொரு தடவையும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதும், அதற்கென 4 நாள், 5 நாள் ஒதுக்கி விவாதிப்பதும்

[திரு. கே. கந்தசாமி] [1979 அக்டோபர் 27

அதை விடுத்து இப்பொழுது கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து அதற்கு 2, 3, 4 நாள் ஒதுக்கி விவாதிப்பதும் அவசியம்தானா என்ற கேள்வியை எழுப்பும்போது என்னைப் பொறுத்த அளவில், எங்கள் கட்சியைப் பொறுத்த அளவில் அது தேவையல்ல என்று நான் கருதுகிறேன். காரணம், பல 'பில்'கள் இங்கே வருகின்றன. அவைகள் ஆய்வுக்கு வரும்போது, தங்கள் கொள்கைகளை, அரசு செய்யத்தவறியவைகளை, ஆலோசனைகளைக் கூறிட வாய்ப்பிருக்கிற காரணத்தால் அப்படிப்பட்ட கண்டனத் தீர்மானம் தேவையில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

அரசைப் பொறுத்த அளவிற்கு, ஏறக்குறைய 20, 25 குறிப்புகளை, காரணங்களைக் காட்டி, இந்த அரசு இன்ன இன்ன காரியங்களைச் செய்யத் தவறியிருக்கிற காரணத்தால் இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று பல கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே குறிப்பிட்டிருப்பதாக எதிர்க்கட்சித் துணைத்தலைவரும் மற்றவர்களும் சொன்னார்கள். ஏறக்குறைய அரசினுடைய எல்லா இலாகாக்களைப் பார்த்து மொத்தமாக இந்த அரசைக் கண்டிக்கிறோம் என்ற ஒரு சாராம்சம்தான் அதில் தெளிவாகிறதே தவிர வேறொன்றும் இல்லை. எதிர்க்கட்சிகள் அரசின்மீது கொண்டிருக்கிற ஒரு எண்ணத்தைப் பிரதிபலிக்கிற மொத்தக் கருத்தாக இருக்கிறதே தவிர, இன்னின்ன காரணத்தால், இன்னின்ன செய்யத் தவறி விட்டார்கள், இன்னின்ன செய்தால் நல்லதாக இருக்கும் என்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசியபோது சில கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தில் சிலவற்றை நான் வரவேற்கிறேன். ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறுவது நம்முடைய கடமைதான். ஆனால், ஏதோ தொழிலாளர்களைப் பொறுத்த அளவுக்கு, விவசாயிகளைப் பொறுத்த அளவுக்கு, இன்னும் மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், போலீஸ் ஆகிய அத்தனை துறையினரும் தங்கள் கோரிக்கைகளை எழுப்பி போராட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவது என்பது, மாமூல்—'ரொட்டீன் லைஃப்' போல ஆகி, அதற்கு அத்தனை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஆக்கமும், ஊக்கமும் காட்டுகிற நடைமுறை வருமானால் நாட்டிலே நிதி எங்கே இருக்கிறது—பொது மக்கள், வரி கட்டுகிற மக்கள், எதை வைத்து நிதி கொடுப்பார்கள். அப்படி கொடுக்கிற பணத்தை எல்லாம் வாரி வழங்கினால் கூட, அவர்கள் வேண்டுகிற அளவுக்கு, விரும்புகிற அளவுக்கு நிறைவேற்றப்படுமா என்பதில் ஐயப்பாடு ஏற்படுகிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

யார் என்ன கோரிக்கைகளை வைத்தாலும் அதிலே உள்ள நியாயபூர்வமான, ஆக்கப்பூர்வமான நிலைமைகளை எடுத்து, ஆராய்ந்து அவைகளை மாத்திரம் நாம் ஆதரித்து, மற்றவைகளைக் கண்டித்துப் பேசுவதற்குப் பதிலாக, சங்கங்கள் மூலமாக

1979 அக்டோபர் 27] [திரு. கே. கந்தசாமி]

எழுப்புகிற கோரிக்கைகள் அத்தனைக்கும் ஆதரவு காட்டுகிற முறை மிகவும் வேதனைப்படக்கூடிய முறையாக இருக்கிறது என்பதைக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உதாரணமாக ஒன்று. போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள், காவல் துறையினர் போராட்டம் நடத்தி வருகிறார்கள், கடந்த 1 வாரமாக, 10 நாட்களாக. சென்ற கூட்டத்திலே அவர்கள் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டுமா என்ற சர்ச்சை வந்தபொழுது, எங்கள் கட்சியைப் பொறுத்த அளவுக்கு உலகப் பேரறிஞராக இருந்த இராஜாஜி அவர்கள் முன்னால் முதலமைச்சராக இருந்தபொழுது, மற்ற மாநிலங்கள் பிரிக்கப்படாமல் கூட்டாக இருந்தபொழுது அவரிடம் எழுப்பப்பட்டிருந்த கோரிக்கைக்கு மிகக் கண்டிப்பாக அங்கீகாரம் வழங்கப்பட மாட்டாது என்று கூறினார்கள். அதையே முன்னுதாரணமாகக் காட்டி, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்கு சங்கம் வைத்துக்கொள்ள அங்கீகாரம் வழங்கக்கூடாது என்று நான் சொன்னேன்; அவர்கள் என்ன காரணத்தாலே திடீரென்று அங்கீகாரத்தை வழங்கினார்கள்.

மற்ற மாநிலங்களிலும் வழங்கியிருக்கிறார்கள், ஒரு சில இடங்களில் வழங்கி இருக்கிறார்கள், ஆகவே, நாமும் வழங்க வேண்டுமென்ற எண்ணத்தாலோ அல்லது அவர்களுக்கு வழங்குவது மற்ற சங்கங்களைப் போல நன்மை பயக்கும் என்ற காரணத்தாலோ வழங்கினார்கள். இந்த அலையில் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏதோ புராணத்தை நம்பாமல் பலர் இருந்தாலும், நம்பிக்கை இல்லாதவர்களே புராணத்திலிருந்து உதாரணங்கள் காட்டுவதால் நானும் ஒன்றைச் சொல்லுகிறேன்.

பத்மாசுரன் என்று ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் ஈசுவரனிடம் ஒரு வரம் கேட்டான். அவன் கேட்ட வரம் "யாருடைய தலையில் அவன் கை பட்டாலும் அவர்கள் தலை வெடித்துவிட வேண்டுமென்பது." ஈசுவரனும் அவனுக்கு கோரிய வரத்தை அளித்தான். உடனே பத்மாசுரனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ஈசுவரன் தலையிலேயே கை வைத்து அவனைக் கொன்று விட்டால் தானே மிக உயர்ந்தவனாகி விடலாம் என்று அவன் எண்ணி; அதன்படியே செயல்பட தலைப்பட்டான். அந்த அபாயத்திலிருந்து தப்பிக்க ஈசன் ஓடியதாகவும், அப்பொழுது அவனது மைத்துனன் என்று சொல்லப்படும் கண்ணன் மோகினி அவதாரமெடுத்து பத்மாசுரனை மயக்கிய தாயும் மோகினியிடம் மயங்கிய பத்மாசுரன் அவளைத் திருமணம் செய்துகொள்ள விழைவதாகக் கூறியபொழுது, மோகினி அவனைக் குளித்து விட்டு வரும்படி கூறியதாயும், குளிப்பதற்கு தண்ணீருக்காக எல்லா இடங்களிலும் அலைந்த பத்மாசுரன் எங்கும் தண்ணீர் கிடைக்காமல் ஒரே ஒரு இடத்தில் மட்டும், மாட்டுத்தடத்தில், மாட்டுக் குளம்பு மிதித்த தடத்தில் கொஞ்சம் இருப்பதாயும் என்ன செய்வது என்று மோகினியிடம் கேட்ட போது, குளிக்காவிட்டால் பரவாயில்லை, அந்தத் தண்ணீரை

[திரு. கே. கந்தசாமி] [1979 அக்டோபர் 27

கொஞ்சம் உச்சந் தலையில் வைத்துக் கொண்டால் முழுமையாக நீ குளித்ததற்கு ஒப்பாகும் என்று மோகினி கூறியதாகவும் அப்படிச் செய்கையில் பத்மாசுரன் தலை வெடித்து அவன் இறந்ததாகவும் அதன் மூலம் ஈசுவரன் காப்பாற்றப்பட்டதாகவும் புராணம் கூறுகிறது. அதே போல, அன்பு காரணமாகவோ, அல்லது வேறு என்ன காரணமாகவோ, சென்ற கூட்டத் தொடரிலே நடந்ததை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். திருப்பரங்குன்றத்திலே வக்கீல் நண்பர் ஒருவருக்கும், ஒரு போலீஸ் அதிகாரிக்கும் இடையிலே நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி நீதி விசாரணை வேண்டும், போலீஸ் அதிகாரிமீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அத்தனை எதிர்க்கட்சித் தலைவர்களும், தோழமைக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும் நான் உட்பட பேசியபோது போலீஸ் அதிகாரிகளுக்குப் பரிந்து பேசிய ஒரே நபர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான். சென்ற வாரம் நான் அவரைச் சந்தித்தபோது அவர்களுக்கு உதவி செய்யப் போய் இவ்வளவு சிக்கலில் மாட்டிக் கொண்டீர்களே என்று கேட்டேன். அதற்கு அவர்கள், எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்புக்கு, உரிமை கிடைப்பதற்கு சங்கம் வேண்டுமென்று கேட்டார்களே என்று கொடுத்தால் அவர்கள் என்னையே விரோதியைப்போல் மக்களிடம் சித்தரித்துக் காட்டுகிறார்கள். நல்லது செய்வதற்கு இந்த நாட்டில் ஒரு பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். ஈசுவரன் சிக்கிக் கொண்டது போல் நீங்கள் சிக்கிக் கொண்டீர்கள். உங்களுக்கு பாதுகாப்பிற்கு ஒரு கண்ணன்தான் வர வேண்டும், மக்கள்தான் உங்களைப் பாதுகாக்கும் கண்ணன் என்று சொன்னேன்.

(குறுக்கீடு.)

கந்தசாமி, கண்ணனாக முடியாது.

திரு. சி. ஆறுமுகம் : மோகினியாக ஆக வேண்டுமே.

திரு. கே. கந்தசாமி : கந்தசாமி, கண்ணன் ஆவது கஷ்டம். நல்லது செய்வதற்கு.....

திரு. அ. ராகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் ஒரு புராண உதாரணம் சொன்னார்கள். புராணத்தில் பத்மாசுரன் கேட்ட வரத்தை ஈசுவரன் கொடுத்ததாக இருக்கிறது. அவர் அந்த உதாரணத்தை போலீஸ்காரர்களுக்குச் சொன்னார். போலீசார் கேட்ட வரம் அவர்களுடைய சங்கத்திற்கு அங்கீகாரம். அந்த வரம் கொடுக்கப்பட வில்லை. ஆகவே உண்மைக்கும் உதாரணத்திற்கும் பொருத்தமாக இல்லை. ஆகவே, உதாரணத்தை அவர் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 அக்டோபர் 27]

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் நான் சொன்னதை முழுமையாகக் கேட்கவில்லை என்று கருதுகிறேன். வரம் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் அதிக வரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். இதுதான் இன்றைய நிலை.

[பிற்பகல் 12-40].

ஆக, அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது கூட சரியா என்று கேட்டால், என்னைப் பொறுத்த அளவிற்கு சரியல்ல என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்தாகும். அது ஒரு டிசிப்ளின்ட் போர்ஸ். மக்களின் உயிர், உடைமைகள் ஆகிய வற்றையும், நாட்டையும் பாதுகாக்கும் பொறுப்புடைய ஒரு துறை அது. அவர்களுக்கு சங்கம் நிறுவுவதற்கு வாய்ப்புக் கொடுத்தால், அவர்கள் ஒரு சங்கத்தில் சேர்ந்து கொண்டு, நாளைக்கு ஆயுதம் எடுத்துக் கொண்டு ஊர்வலம் வந்தால் என்ன வாகும் ? ராணுவம் போலீசைப் பார்த்து சுட்டது என்றால் நிலைமை என்னவாகும் ?

திரு. சி. ஆறுமுகம் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். போலீஸ் துறையைச் சார்ந்தவர்களுக்கு சங்கம் வைத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுத்ததை அவர் விரும்புகிறாரா இல்லையா என் பதைப் பற்றி விளக்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : அதைத்தான் நான் சொல்கிறேன். சங்கம் அமைக்க அனுமதி கொடுத்தது தவறு என்பது என்னுடைய திடமான கருத்து. நான் எதையும் மறைத்துப் பேசுபவன் அல்ல. நான் இன்னும் கூடச் சொல்வேன். சர்வாதிகார ஆட்சி கூட இந்த நாட்டிற்கு வந்து, யாராவது வந்து ஆண்டால் பரவாயில்லை. இந்த நாட்டில் சங்கம் அமைத்து வாழ்பவன்தான் வாழ முடியும் என்றால் இந்த அநியாயத்தை எத்தனை நாளைக்கு நாம் பொறுத்துக் கொண்டு இருக்க முடியும். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொல்வார்கள். ஒரு போராட் டத்தை ஆதரிக்கப் போனால் என்ன ஆகும் என்றால், அவன் 10 கேட்டால் நாம் 5 கொடுப்போம். அதற்கு மேல் என்ன செய்ய முடியும். அதில் பிறகு என்ன நடக்கும் என்றால், பாதி பேர் அந்த அறிவிப்புக்கு ஆதரவு தெரிவிப்பார்கள், பாதி பேர் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அடுத்து ஒரு வாரத்தில் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் போராட்டம் நடத்துவார்கள். இன்னும் 5 சேர்த்துக் கொடுப்போம் என்று. இப்படி அன்றாடம் போராட்டம் நடத்திக் கொண்டே இருந்தால் நாடு தாங்காது. ஆகவே, சங்கம் வைத்துள்ளவன்தான் வாழ முடியும் என்கிற நிலை உருவாக்கப்பட்டு விட்டால், விவசாயிகள் நிலை என்ன ?

[திரு. கே. கந்தசாமி] [1979 அக்டோபர் 27

விவசாயிகள் எந்த நிலைமைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். புள்ளிவிவரம் உயர்ந்தால் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் விலை உயர்ந்தால், உடனே, ஆலிரியர்கள், என்.ஜி.ஒ.க்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இதோ நேற்று அறிவிப்பு வந்துவிட்டது. சிலர் பாராட்டியிருக்கிறார்கள். இன்னும் சிலரிடமிருந்து பாராட்டு வரவில்லை. அந்தப் பாராட்டு கூட எத்தனை நாளைக்கு இருக்கப்போகிறது. அடுத்த அசெம்பிளி கூட்டத் தொடர் வருவதற்குள் இன்னொரு போராட்டம் நடத்துவார்கள். இந்த முறையில் போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டே இருந்தால், நாளைக்கு நமக்கு அலவன்சு கொடுப்பதற்குக் கூட அரசாங்க கஜானாவில் பணம் இல்லாமல் போய்விடும். இந்த நிலைமை எங்கே கொண்டு போய் விடும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலையில் விவசாயிகளுடைய கோரிக்கைகளையும் நாம் கவனிக்க வேண்டும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர். அவர் ஒரு வழக்கறிஞர். அதனால் கேட்கிறேன். பார் கவுன்சில் தேவையா? தேவை இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை, இளாரிபிகேஷன்.

திரு. கே. கந்தசாமி : நான் பொதுவாகச் சொல்லுகிறேன், எந்தச் சங்கத்தையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. சங்கம் வைத்துக் கொண்டு இருப்பவர்கள் மாத்திரம்தான் அரசாங்கத்தின் கவனத்தை, பொதுமக்களின் கவனத்தை ஈர்க்க முடியும் என்றால் நிலைமை என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாணவர்களுக்கு சங்கம் தேவையில்லை. இருந்தாலும், மாணவர்கள் கூட சில கட்சிகளின் உதவி பெற்று அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக சங்கம் அமைத்துக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு உந்தப்படுகிறார்கள். தள்ளப்படுகிறார்கள். இப்படி ஒவ்வொரு பகுதி மக்களும் சங்கம் அமைத்துக்கொண்டு ஆண்டாடம் போராட்டம் நடத்திக்கொண்டே இருந்தால்— இன்றைக்கு இந்த முதலமைச்சர் இருக்கலாம், நாளைக்கு வேறு ஒருவர் முதலமைச்சராக வரலாம்— யார் வந்தாலும், மக்களுக்குச் செய்யவேண்டிய நியாயமான காரியங்களைச் செய்ய முடியாது. வெல்பேர் ஸ்டேட் என்று பேப்பரில் எழுதிப் படிக்கலாமே தவிர உருப்படியாக எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. முன்பு 46 சதவிகிதம் வறுமைக் கோட்டின் எல்லை என்று இருந்தது, இன்றைக்கு 59 சதவிகிதம் என்கிற அளவிற்கு 13 சதவிகிதம் உயர்ந்து இருக்கிறது. இதுத் வளர்ச்சியைத்தான் நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

1979 அக்டோபர் 27] [திரு. கே. சுந்தசாமி]

We have increased only poverty, we have only increased un employment and we have made house owners houseless இந்த நாட்டில் சுதந்திரம் வந்து 32 ஆண்டுகளுக்குப் பின்னாலே நாம் கண்ட பலன் இந்த வறுமைக் கோட்டின் எல்லை 13 சத விகிதம் உயர்ந்ததுதான். வெள்ளையன் இந்த நாட்டின் செல்வத்தை கொள்ளைகொண்டு போகிறான், ஐயகோ என்று சொல்லி அங்கலாய்த்துக்கொண்டு இருந்தோம். இப் போது, நம்மை நாமே ஆண்டு கொண்டு இருக்கிறோம். அப்படியிருந்தும் இந்த நிலையைத்தான் நாம் உருவாக்கி யிருக்கிறோம். அன்றைக்கு ஒரு இராமநாதபுரம் ராஜா இருந்தார் என்றால், ஒரு சேது ஜமீந்தார் இருந்தார் என்றால் இன்றைக்கு எத்தனை கோடீஸ்வரர்களை, ஈஸ்வர ஐயர் போன்றவர்களை நாம் உருவாக்கியிருக்கிறோம். மால்கோ போன்று எத்தனை அதிபர்களை, 9½ கோடி ரூபாய் மின் கட்டண பாக்கி செலுத்தாதவர்களை, முதலாளிகளாக நாம் உருவாக்கியிருக்கிறோம். சோசலிஸ்டிக் பாட்டர்ன் ஆப் சொசைடி என்று நேரு சொன்னார். அது ஏட்டளவில்தான் இருக்கிறது. மின் கட்டண பாக்கி கட்டாதவன் தண்டிக்கப் படவேண்டும் என்று சட்டம் இருக்கிறது இந்த நாட்டில், ஆனால், 9½ கோடி ரூபாய் பாக்கி வைத்துள்ளவன் முதலாளி. 1 ரூபாய் கட்டவில்லையென்றால், என் வீட்டில் மின்சாரத்தை துண்டித்து விடுகிறான். ஆனால் ரூ9½ கோடி மின் கட்டணம் கட்டாதவன் பிளேனில் with all immunity under the protection of law, he is able to flly all over the country with all comforts and even for inter-national meetings பிளேனில் போக முடிகிறது. கௌரவமாகப் போக முடிகிறது. அவனைப் பார்த்து யாரும் வரி கட்டாத துரோகி என்று சொல்வது இல்லை. ஆனால், 1½ ரூபாய் மின் கட்டணம் கட்டாத ராமசாமி, சுந்தசாமியைப் பார்த்து—நான் கேட்கிறேன்—நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர், என்னால் கட்டமுடியவில்லை என்றால்—அயோக்கியன் என்று பேசுவதற்கு நாடு தயாராக இருக்கிறது. அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், 9½ கோடி ரூபாய் பாக்கி கட்டா தவன் பேரில் ஒரு நடவடிக்கையும் இல்லை. அந்த 9½ கோடி ரூபாய் வசூல் செய்தால் எத்தனை நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும், என்.ஜி.ஓ.க்களுக்கு உதவ முடியும், ஆனால், நாம் அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்கியிருக்கிறோமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவேதான் இப்படிப்பட்ட ஜனநாயகம் தேவையா என்ற கேள்விக்குறியைக் கேட்கக்கூட நியாயம் இருக்கிறது என்பதற்காகக் குறிப்பிட்டேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளைப் பொறுத்தவரையில் 40 கோடி ரூபாய்க்கு இன்று அரசாங்கம் சலுகை அறிவித்திருக்கிறது. இதை எதிர்க்கட்சிக்காரர்கள் பாராட்டு வார்கள் என்று எதிர்பார்த்தேன்; ஒருவரும் பாராட்ட வில்லை. 32 வருஷ காலத்தில் விவசாயிகளுக்கு 40 கோடி

[திரு. கே. கந்தசாமி] [1979 அக்டோபர் 27

ரூபாய் தள்ளுபடி யார் கொடுத்தார்? 40 கோடி என்பது சாதாரணமானதா? அது 4000 லட்சம் ரூபாய். வேண்டுமானால் அது ''சப்ஸ்டான்ஷியல் ரிலீப்'' இல்லை என்று சொல்லலாம்.

டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது விவசாயிகளைப்பற்றி அதிகமாகப் பேசியவன் நான்தான். எனக்கு இருக்கிற கட்சி ஒரு சின்ன கட்சி; பத்திரிகைப் பலம் இல்லாத கட்சி. அதனால் இன்றைக்கு வேறு யார், யாரோ நான்தான் விவசாயச் சங்கத் தலைவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்ன வேடிக்கை பார்த்தீர்களா? (சிரிப்பு). விவசாயிகளுக்கு இதுவரை இல்லாத அளவுக்கு 40 கோடி ரூபாய் தள்ளுபடி செய்ததை பாராட்ட வேண்டாமா? அதை பாராட்டிவிட்டு, அதற்குப் பின்னால் எதிர்க்கிறேன் என்று சொல்லியிருக்கலாம். 40 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

நானும் என்னுடைய மனைவியும் 4 மாதமாக கரன்ட் சார்ஜ் கட்டவில்லை. நாராயணசாமி சங்கத்தில் நாங்கள் உறுப்பினர்கள். நான் கட்டாததற்குக் காரணம், நான் கட்டிவிட்டால் அடுத்தநாள் என்னுடைய மோட்டாரை தீ வைத்து கொளுத்தி விடுவார்கள். நான் பணம் கட்டாமல் இருந்தபோதிலும் பம்ப் செட் கிணற்றுப் பக்கத்தில் யாரும் வரவில்லை. நான் நாராயண சாமி சங்கத்தில் உறுப்பினராக இருப்பதால் அவர் சொல்வதை எல்லாம் நானும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. கடனைக் கேட்டால் கையை வெட்டுங்கள், காலை வெட்டுங்கள் என்று அவர் சொன்னால் நான் அதை ஆதரிக்க முடியாது; ஏனென்றால் வரி இல்லாமல் அரசாங்கம் நடத்த முடியாது.

விவசாயிகளுக்கு நியாயமான கோரிக்கைகள் உண்டு. அக விலைப்படிஉயர்வுக்கு அதிகாரிகள் விலைவாசி உயர்வு புள்ளி விவரங்களைக் காட்டியதைப் போல விவசாயத்திற்கும் மற்ற பொருட்களுக்கும் விலை உயர்ந்திருக்கிறது; மருந்து விலை உயர்ந்திருக்கிறது; உரத்தின் விலை உயர்ந்திருக்கிறது; மற்ற மற்ற பொருட்களின் விலை உயர்ந்திருக்கின்றது; ஆனால் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்பதை புள்ளிவிவரங்கள் மூலம் சுட்டிக்காட்டி கேட்பது நியாயமானதாகும் என்தை நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்

மீட்டர் சார்ஜைப் பொறுத்தவரையில், 65 ரூபாய்தான் மீட்டர் விலை. அதற்கு வருடம் முழுவதும் மாதாமாதம் 5 ரூபாய் என்று வெள்ளைக்காரன் காலத்தில் போட்டதைப் போல போட்டு வசூல் செய்தால் என்ன நியாயம்? 65 ரூபாய் கட்டினால் போதும். அதற்குமேல் மாதாமாதம் கட்ட வேண்டும் என்பதை தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு கரும்புக்கும் நெல்லுக்கும் வட இந்தியாவில் கொடுப்பதைப்போல இங்கும் கொடுக்க வேண்டும்.

1979 அக்டோபர் 27 [திரு. கே. கந்தசாமி]

''பார்வர்டு கிளாஸை'' பொறுத்தவரையில் 9,000 ரூபாய் வரையில் உள்ளவர்கள்தான் என்று சொன்னார்கள். அது பின் தங்கிய மக்களை கடுமையாகப் பாதிக்கும் என்று வாதிட்டோம். திருச்சியிலே பேசும்போது அதை மறு பரிசீலனை செய்வோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மறு பரிசீலனை செய்யும்போது, அதை 10,000 ஆகவோ அல்லது 12,000 ஆகவோ உயர்த்துவது மட்டுமல்ல; எதிர்க்கட்சித் தலைவர்கள், பேராசிரியர் போன்றவர்கள் நடைமுறையில் ஏற்படுகிற சிக்கல் மக்களை எப்படிப் பாதிக்கும் என்ற கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களையும் ஏற்று, எப்படி சட்டத்தை மாற்றினால் பிற்பட்ட மக்களுக்கு நியாயமான பாதுகாப்பு கிடைக்கும் என்பதை சிந்தித்து செய்ய வேண்டும். பிற்பட்டோர் நிலையை பரிசீலனை செய்வதற்கு சட்டநாதன் கமிட்டி போன்ற ஒரு கமிட்டி 5 வருஷத்திற்கு ஒரு முறை கூடும் என்று இருக்கிறது. அந்தக் கமிட்டிக்கு அரசின் ஆலோசனைகளையும், உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லி, எப்படித் திருத்தினால் நடைமுறையில் பிற்பட்ட மக்களுக்கு நிரந்தர பலன் கிடைக்கச் செய்ய முடியும் என்பதை எல்லாம் ஆராய்ந்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே மதுவிலக்கைப் பொறுத்தமட்டில் ரொம்ப வருத்தம். ஏழைகளுக்கு நன்மை செய்கிறேன். என்று சொல்லி – முதன்முதலில் இதைக் கொண்டுவந்தபோது சொன்னேன். கடவுள்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும், மனிதன் காப்பாற்ற மாட்டான் என்று. கடவுள் இல்லை என்றால், கடவுளாக மதிக்கும் பெரியவர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். அண்ணாவை தெய்வ உள்ளம் படைத்தவர் என்று சொல்கிறீர்கள் இல்லையா. மக்கள் சேவையை தன்னுடைய சேவையாகக் கருதுகிறவர்களை தெய்வம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தெய்வம்தான் உங்களை காப்பாற்ற வேண்டும் என்று சொன்னேன்.

[பிற்பகல் 12-50]

இங்கே எந்த ஏழை எளியவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்படுத்தப்பட்ட மக்கள் குடித்து கெட்டு விடுகிறார்கள் என்று, அவர்களுக்கு நன்மை தரவேண்டும் என்று இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அதை அவர்களே எதிர்க்கிறார்கள். இதற்காக 150 கோடி ரூபாய் வருமான இழப்பு, இந்தச் சட்டத்தை கொண்டு வந்ததினால். என்ஃபோர்சிங் ஏஜன்சி என்று கோர்ட், போலீசார் உட்பட இதற்கென்று தனியாக ஒரு 50 கோடி செலவு, ஆக ஏறக்குறைய 200 கோடி ரூபாய் இந்தச் சட்டத்தினால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நான் தேவர் அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றுகிற தொண்டர்களில் ஒருவன் என்கிற முறையில் மது

[திரு. கே. கந்தசாமி] [1979 அக்டோபர் 27

விலக்குச் சட்டத்தை எதிர்ப்பது தவறு. அது நல்ல தொண்டு தான். ஆனால் நடைமுறை சரியில்லாதது. அதனால் நல்ல விளைவுகளைவிட தீய விளைவுகள்தான் அதிகமாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு சிவகாசி போகிறேன் என்றால், அங்குள்ளவர்கள் "என்ன இப்படி உங்கள் முதலமைச்சர் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டாரே, நீங்கள் சொல்லக்கூடாதா? நம்மவர்கள் எல்லாம் ஜெயிலுக்கு போகிறார்களே" என்று கேட்கிறார்கள். என்ன செய்வது? நான் ஒன்றும் மதுவிலக்குக் கொள்கையை எதிர்க்கவில்லை, நல்ல கொள்கைதான், ஆனால் ஜனங்கள் எதிர்க்கிறார்களே, 10 ரூபாய்க்கு ஒரு நாளைக்கு கைவண்டி இழுத்து சம்பாதித்தால், 5 ரூபாய் வீட்டுக்கு கொடுத்துவிட்டு, 5 ரூபாய்க்கு சாராயம் குடிப்பார்கள், என்ன செய்வது? பழக்கமாகிவிட்டது. அவர்களைப்போய் பாலை குடி, நீராகாரத்தை குடி என்றால் கேட்பார்களா? இதை மாற்ற முடியாது, அதுவும் சட்டம் போட்டு மாற்ற முடியாது. நாளைக்கு தேர்தல் வந்தால், ஓட்டு என்று வருகிறபோது எந்த ஏழை எளிய மக்களை வாழ்விக்க வேண்டும் என்று இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்களோ அதை அவர்களே எதிர்ப்பார்கள், ஓட்டு போடமாட்டார்கள் போல் இருக்கிறது. எனக்கே கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்வது, ஆகவே அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளச் சாராயத்தை குடிப்பதைவிட, கெட்டுப்போன எதையோ குடித்துத் தொலைப்பதை விட, இந்த மதுவிலக்குச் சட்டத்தை அவிழ்த்து தொலைத்து விட்டால் நல்ல சாராயமாவது, நல்ல கள்ளையாவது குடிக்கட்டுமே, அரசாங்கத்திற்கும் வருமானம் வரும்.

ஏசுநாதர் உண்மை பேசினார். அன்பாக நடந்து கொண்டார். மக்களுக்காகப் பாடுபட்டார் என்பதெல்லாம் இப்போது தானே தெரிகிறது. அவரை அப்போது சிலுவையில் வைத்துத் தானே அறைந்தார்கள். ஆயிரம் வருஷங்கள் கழித்துத் தானே அவரை தெய்வமாக்கி அவருடைய பெருமையைப் பேசுகிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தை மேற்கொண்டு மறுபரிசீலனை செய்து, நல்ல சாராயமாகவே நல்ல கள்ளாகவே அவர்களை குடிக்க விடுங்கள். அரசாங்கத்திற்கும் 200 கோடி ரூபாய் வருமானம் வரும், அதை வைத்துக் கொண்டு நல்ல பள்ளிக் கூடங்கள் கட்டுங்கள், அவர்களின் குழந்தைகளை இலவசமாக படிக்க வையுங்கள், இரண்டு ஹாஸ்பிடல் கட்டுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஹாஸ்டலில் கூட இரண்டு முட்டைகள், டபிள் பால் என்று கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இப்படிப்பட்ட கண்டனத் தீர்மானங்கள் தேவையில்லை என்று என்னுடைய கருத்தை இந்திய தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொண்டு, மேற்கொண்டு

1979 அக்டோபர் 27] [திரு. கே. கந்தசாமி]

திரு. மார்க்கபந்து, லத்தீப் போன்றவர்கள், நான் பிற்பட்டவர் களைப்பற்றி 9,000 ரூபாய் என்று சொன்னேனே அதைத் தவிர மற்றதைப் பேசுவார்கள் என்று சொல்லி (சிரிப்பு) என்னை பேச அனுமதித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஊ) முதல் துணை நிதி அறிக்கை 1979–80—வெட்டுத் தீர்மானங் கள் கொடுப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1979–80 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதலாவது துணை நிதி நிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர் கள், அவைகளை 29—10—1979 ஆம் தேதி திங்கட் கிழமை மாலை 3 மணிக்குள்ளாக அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(5) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர் மானம்—விவாதம் (தொடர்ச்சி).

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர் களே, எங்கள் கட்சி சார்பாக பல்வேறு அம்சங்களில் கண்டனத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம் என்பதை அறிவீர்கள். கண் டனத் தீர்மானம் கொடுக்கிறபோது பல அன்பர்கள் எங்களிடத் தில் கேட்டார்கள், ஏன் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இந்த நேரத்திலே கண்டனத் தீர்மானம் கொடுக்கிறீர்கள் என்று. அரசாங்கம் தவறு செய்கிறபோது, பொது மக்களின் பிரச்சினை களில் அரசாங்கத்தின் கொள்கை தவறுகிறபோது அதைக் கண்டிப்பது எதிர்க்கட்சியின் கடமை என்பதை அவர்களுக்கு நாள் சுட்டிக்காட்டினேன். அரசாங்கம் தவறு செய்கிறபோது கண்டிக் காமல் இருப்பது எதிர்க்கட்சியின் கடமையாக இருக்கமுடியாது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், மதுரை தேர்தலில் ஆளுங்கட்சியோடு கூட்டு வைத்திருக்கிறபோது சென்னையில் வேலை நிறுத்தம் செய்தோம், பொது ஹர்த்தால் செய்தோம் என்பதை அவர்களுக்கு நினைவூட்டிக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் கட்சியின் மதிப்பிற்குரிய தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் அறிக்கையைப் படித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நாங்கள் இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு துணை போக மாட்டோம், ஆனால் மக்கள் பிரச்சினையில் இந்த

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 அக்டோபர் 27

ஆட்சியை எதிர்த்து கடுமையாகப் போராடுவோம், எல்லோரும் சேர்ந்து போராடுவோம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். மக்கள் பிரச்சினையில் இன்று சூடு பிடித்திருக்கிற இரண்டு பிரச்சினைகள் பற்றிச் சொல்லி வேறு பல பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டி இடித்து காட்டுவதும் என் கடமை. காவல் துறை ஊழியர்களின் பிரச்சினை தமிழ்நாட்டில் இன்று சூடு பிடித்திருக்கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுந்தசாமி அவர்கள் சொன்னதுபோல் ஆரம்பத்திலேயே திருப்பரங்குன்றம் வழக்கறிஞருக்கும் போலீஸுக்கும் இடையே தகராறு வருகிறபோது போலீஸார் சங்கம் வைத்தால் என்னவாகும் என்று பயமுறுத்துவதுபோல் முதல் அமைச்சர் அவர்கள் இங்கே பேசியது அவர்களுக்கு நினைவிருக்கும், அவைக்கும் நினைவிருக்கும் என்று கருதுகிறேன். அப்போது எங்கள் தரப்பில் இருந்து, போலீஸார் சங்கம் வைக்க வேண்டுமென்று வற்புறுத்தியவர்கள் நாங்கள். இப்போது சங்கம் வைத்துக் கொள்ள அனுமதி தந்துவிட்டு, போலீஸ் சங்கம் என்று வந்தால் ஒரு சங்கம் வைத்துக் கொள்ள அனுமதிப்பதில் என்ன தவறு இருக்கிறது, பேச்சு வார்த்தைகள்மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள அரசுக்கு என்ன சங்கடம் இருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை. நான் பேசிப் பார்த்த இன்ஸ்பெக்டர்களும், சப் இன்ஸ்பெக்டர்களும் அத்தனை பேர்களுக்கும் ஒரே சங்கம் இருக்க வேண்டும், நாங்களும் அதில் இருக்கிறோம் என்று கருத்து தெரிவிக்கிறபோது நாம் ஏன் இந்த விவகாரத்தில் ஈடுபட வேண்டும்? பெருவாரியான சப் இன்ஸ்பெக்டர்கள் அதை விரும்புகிறார்கள் அவர்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பதை வோட்டு எடுத்து வேண்டுமானாலும் பாருங்கள். வோட்டு எடுக்க தேவை இல்லை. வேலை நிறுத்தத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பல சப் இன்ஸ்பெக்டர்கள் இந்தச் சங்கத்தில் போக முடியவில்லையே என்ற நினைப்பில் இருக்கிறார்கள். ஒரு சங்கத்தை மட்டும் அங்கீகரிப்பதில் தீர்மானமாக இருப்பது ஏன்? காவல் துறையின் தவறான கொள்கையின் விளைவாகத்தான் வேலை நிறுத்தம், கடுமையான ஒடுக்குமுறை இவை எல்லாம் நடந்திருக்கின்றன என்று எச்சரிக்க விரும்புகிறேன். நேற்று மதுரையில் ரிசர்வ் போலீஸ், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் மீது கண்ணீர் குண்டுகள் எறியவும் இவர்களுக்கு இடையே கடுமையான தகராறு உருவாகியிருக்கிறது என்று செய்தி வந்திருக்கிறது. காவல் துறை ஊழியர்களின் வீடுகளுக்குச் சென்று தாக்குகிற நிகழ்ச்சிகள் தமிழகம் பூராவும் குறிப்பாக மதுரை, கோவை, நெல்லை போன்ற இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன, போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சாரும். இது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிற சமாச்சாரம் அல்ல. அமைதியாக இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. ஒரு சங்கத்தை அங்கீகரிக்கிறபோது, தமிழ் நாட்டில் ஏற்கனவே நடந்ததாக எனக்கு ஞாபகம். மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருக்கிறபோது ஒரு தடவை போலீஸ் வேலை நிறுத்தம் நடந்தது. அவர்கள் அன்று—

1979 அக்டோபர் 27] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

ஏற்கனவே வெள்ளைக்காரன் ஆண்டுக் கொண்டிருக்கிறான்—காவல் துறையினர் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லும் உரிமை கூட வேண்டாமென்று ஆக்கினதாக ஞாபகம். ஞாபகத்தில் சொல்கிறேன். இப்போது வலுவாக இந்தியா பூராவும் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில் அரசியல் கட்சிக்காரர்கள் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்வது ஒரு நபர் தூண்டி நடந்துவிடாது, சில தலைமை தூண்டி விடுவதால் நடந்து விடாது. இந்தியா பூராவும் பலயிடங்களில் காவல் துறையினர் வேலை நிறுத்தம் செய்தபோது அங்கே கல்யாணசுந்தரம் செல்லவில்லை அல்லது மதிப்பிற்குரிய கருணாநிதி செல்லவில்லை. இங்கு நடக்கிற வேலை நிறுத்தம் சில தலைவர்களின் தூண்டுதலால் நடக்கவில்லை. அவர்களுக்கு சங்கம் வைக்கிற உரிமை வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். சில பெரிய போலீஸ் அதிகாரிகள் அவர்கள் வீடுகளில் இரண்டு இன்ஸ்பெக்டர்கள் உதவி இருந்தால்தான் பாதுகாப்பு என்று நினைக்கிறார்கள். சில பெரிய போலீஸ் அதிகாரிகளின் வீடுகளில் பத்து கான்ஸ்டபிள்கள், ஆர்டர்லிகள் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. இன்றும் கூட இருக்கிறது. காய்கறி வாங்க ஆர்டர்லி இருக்கிறார். ஒரு பெரிய போலீஸ் அதிகாரியின் மகள் வீட்டிற்கு—பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை—இரண்டு ஆர்டர்லிகள் செல்ல அனுமதித்திருக்கிறார்கள் என்ற அப்படிப்பட்ட தகவல் வருகிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் இருந்தால்தான் தங்களுக்கு பாதுகாப்பு இருக்கும் என்ற உணர்வு இருப்பதைப் பார்க்கிறோம். அதைப் புரிந்து கொள்ள வேண்டும். பெரிய போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் கோரிக்கைகள் வேறுவிதமாக இருக்கலாம். எஸ். பி., டி. எஸ். பீ.-க்கள் இவர்களுக்கு என்று தனியாக சங்கம் இருப்பதுபற்றி ஆட்சேபணையில்லை. கீழேயுள்ளவர்களுக்கு இன்ஸ்பெக்டர்களிலிருந்து, ஒரே சங்கம் என்ற நிலை உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1—00]

இதில் நிச்சயமாக அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜெயிலில் போய் கையெழுத்து வாங்குகிறார்கள் என்ற நிலைமை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. விவசாயப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில் நாராயணசாமி நாயுடு அவர்களிடம் ஜெயிலில் போய் கையெழுத்து வாங்கப்பட்டது. அது போன்று வேலூரில் ஜெயில் சூப்பிரன்டண் மூலமாக இப்போது அறிக்கையை வெளியிடுகிறார்கள். அது உண்மையோ, பொய்யோ தெரியாது. இப்போது வெளியிட்டிருப்பதையெல்லாம் தமிழக மக்கள் நம்ப மாட்டார்கள். ஜெயிலிலேயே இருந்து கையெழுத்து வாங்கி அறிக்கை விடுகின்ற முறையை தவிர்த்திருக்க வேண்டும். இதையெல்லாம் நிச்சயமாக தமிழக மக்கள் நம்ப மாட்டார்கள். இந்த முறையை அரசாங்கம் தவிர்த்திருக்கவேண்டும். வேண்டுமென்றால்

[திரு. கூத்தகுடி. க. சண்முகம்] [1979 அக்டோபர் 27

அவரை வெளியே விட்டு, ஊர் ஊராக கார்மூலம் போய் அவர், சொல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம், பெயில் கொடுக்க முடியாத அளவுக்கு எவ்வளவோ கடுமையான செக்ஷன்களின்மீது எல்லாம் கேஸ் போடப்பட்டவர்களை எல்லாம் எத்தனையோ தடவைகளில் வெளியே விட்டிருக்கிறோம். ஆகவே, தமிழக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் தவறான எண்ணத்தை மாற்றுகின்ற வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும். இதைப் பற்றி அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லக்கூடிய கடமை எதிர்க் கட்சிகளுக்கு இருக்கிறது. அந்த வேலையை செய்வதற்குத்தான் நாங்கள் எல்லோரும் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்றோம், அரசாங்கத்தை ஆதரித்தாலும் கூட குறையைச் சொல்லித்தான், அதை எடுத்துக் காட்டித்தான் ஆதரிக்கவேண்டும். நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. சர்க்கில் கூட சொன்னதாக நினைவு. பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை ஆதரிக்கின்ற கட்சி எதிர்க்கட்சியில் இருந்தாலும் அரசாங்கத்தை ஒரு குத்து குத்திவிட்டு, ஆதரியுங்கள் என்று சொன்னதாக சொல்வார்கள். அந்த முறையில் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அரசாங்கத்தை ஒரு குத்து குத்திவிட்டுத்தான் ஆதரிக்கவேண்டும். குத்துவது என்றால் ஆளுக்கு ஆள் அல்ல, கொள்கையில் குத்திக் கொள்வதுதான், கையினால் குத்துவது அல்ல, அந்த முறையில்தான் எதிர்க் கட்சிகள் செயல்பட வேண்டும் என்பதை நான் அதிகமாக சொல்ல வேண்டியதில்லை.

போலீஸ் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நமது காவல்துறையைப் பொறுத்த அளவில், நமது நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து பாராட்டியிருக்கிறார்கள், அப்படிப்பட்ட காவல் துறையோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கு முதலைமச்சர் அவர்கள் முன் வர வேண்டும். அதிகாரிகளின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்தாமல் இருப்பது சரியல்ல. அந்த முறையில் பேச்சு வார்த்தை நடத்தி காவல்துறையினரது கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியமானது என்பதை நான் வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு வேலை நிறுத்தங்கள் எல்லாம், எப்போது எங்கே யிருக்கும் என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறது. இளங்கோ போராட்டத்தைப்பற்றி பொதுக் கூட்டத்திலேயே பேசுகிறார். எங்கே போய் நிற்கப் போகிறதோ தெரியவில்லை. வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். இவற்றையெல்லாம் அரசாங்கம் கொள்கை அளவில் பேச்சு வார்த்தை நடத்த— இது போன்று எல்லாப்பிரச்னைகளிலும் பேசுகின்றஒருபோக்கு இருக்கவேண்டும். நேரு காலத்தில், எதிர்க் கட்சிகளில், கட்சி ரீதியாக வேறுபாடு இருந்தாலும்கூட, அப்போதைய ஆளும் கட்சி கொடி கட்டி ஆண்டு கொண்டிருந்த நேரத்தில், சாதாரண விஷயங்களில் கூட

1979 அக்டோபர் 27] [திரு. கூத்தநாடி ச. சண்முகம்]

எதிர்க் கட்சிக்காரர்களை கூட்டி வைத்து பேசி முடிவு காண்கின்ற ஒரு பண்பாட்டை நேரு அவர்கள் அப்போது பாராளுமன்றத்தில் ஏற்படுத்தி வந்ததை எல்லாக் கட்சித் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். அதே முறையை இங்கும் நாம் பின்பற்ற வேண்டும். தங்கள் கட்சியால் முடியாதா என்று பார்க்காமல்— தங்கள் கட்சியால் ஆகாதா என்று பார்க்காமல், மற்ற கட்சிக் காரர்களையும் கூப்பிட்டு வைத்து பேசி, பொது கருத்தை உருவாக்கி பொது அமைதியை தமிழ்நாட்டில் கொண்டு வருவதற்கு, இடைச்சுருள அரசின் அணுகுமுறை இருக்க வேண்டும். இப்போது அதில் ஊனமிருக்கிறது. தவறு இருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஆசிரியர்கள் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை கூப்பிட்டு பேச வேண்டும். நேரே உட்கார்ந்திருந்து பேசுகின்ற நேரத்தில் ஒரு வேளை மனம் மாறுவார்கள். ஆசிரியர்கள் எல்லாம் நல்ல படித்தவர்கள், விவரம் புரிந்தவர்கள். வேண்டுமென்றே தண்டி விடக் கூடியவர்கள் மிகவும் குறைவு. அதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்கு கண்டனத் தீர்மானங்கள் பல வந்திருக்கின்றன என்றாலும், மொத்தமாக இதிலுள்ள கருத்துக்களைத் தான் கவனிக்க வேண்டும். ஆசிரியர்களுடைய போராடுகிறார்கள் என்றால் அவர்களுடைய கோரிக்கைகள் சரியோ இல்லையோ, பெருவாரியான ஆசிரியர்கள் அதை கோருகிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களை கூப்பிட்டு பேசுவது தான் சிறந்த முறையாக இருக்கும். அரசியல் கட்சிகளுடைய தொடர்பு இல்லாமலேயே கல்வி அமைச்சர் அவர்கள் கல்லூரி ஆசிரியர்கள் விஷயத்தில் நல்ல முடிவுக்கு கொண்டு வந்தார்கள். அதற்காக நமது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம். அதே போன்று இதிலும் அரசியல் கட்சிகளின் தலையீடு இல்லாமலேயே ஆசிரியர்களுடைய பிரச்னையிலும் ஒரு முடிவுக்கு வருவது வரவேற்கத் தக்கது. அந்த முறையில் ஆசிரியர்களுடைய போராட்டமாக இருந்தாலும் சரி, போலீஸ் போராட்டமாக இருந்தாலும் சரி, யாரையும் பழி வாங்காமல் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காகத்தான் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்தத் தொழிலாளர் பிரச்னையில் உண்மையிலேயே ஒரு அம்சத்தை ஏற்கனவே உமாநாத் அவர்கள் எடுத்துக் காட்டி, அவசரச் சட்டத்தை கொண்டு வந்து விட்டு, பின்னால் காலாவதியாக்கி விட்ட ஒரு நல்ல அம்சத்தைப் பற்றி பாராட்டினார்கள். ஆனால், மீண்டும் அதை ஏன் கொண்டு வர வேண்டும்? அது அவசியம் தானா? நடைமுறையிலே உள்ள பிரச்னைகளைக் கவனிக்க வேண்டும். இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது நல்லது தானா என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். எல்லாப் பகுதிகளிலும் வேல் ஏந்தி பாதுகாப்பு கொடுக்கக் கூடிய

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 அக்டோபர் 27

போலீஸ்காரர்களே இன்றைக்கு வேலை நிறுத்தம் செய்கின்றார்கள். அப்படி வேலை நிறுத்தம் செய்கின்ற காலம் வந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் இந்த சட்டத்தை தமிழகத்தில் கொண்டு வருவது சரிதானா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். தயவு செய்து சற்று சிந்தித்துப் பாருங்கள். உடனடியாக மக்களுடைய உணர்வுகளை கணக்கிட்டு, இந்தச் சட்டத்தை இந்த சட்ட மன்றத்தில் வாபஸ் வாங்க வேண்டும், வாபஸ் வாங்குவீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேசுகின்றபோது, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். இராமநாதபுரம் சீலை யிலே தொழிலுக்குப் போட்டிருக்கக்கூடிய அரசாங்கத்தின் மூல தனம் எவ்வளவு தெரியுமா? இங்கே அந்த புள்ளிவிவரத்தை சொல்கிறேன். செலவுலையிலே 295 கோடி. இந்தக் கணக்கு தவறாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் அந்த புள்ளி விவரத் தில் தந்திருக்கிறார்கள். அதுமாதிரி கோயமுத்தூருக்கு 142 கோடி தந்திருக்கிறார்கள். ஆனால், இராமநாதபுரம் கிழக்கிற்கு இரண்டே முக்கால் கோடி. எங்கோ அசந்துபோய் நிற்கிறார்கள். அப்போர்ப்பட்ட இடத்திலே புதிதாக 30 இலட்சம் செலவிலே அரசு ஒரு புதிய தொழிலை ஆரம்பித்திருக்கிறார்கள்; அதை வரவேற்கிறோம். ஆனால் நிலைமை என்ன? கடந்த ஒன்றரை மாதங்களாக அந்த என்பீல்ட் தொழிற் சாலையில் ஸ்டிரைக் நடக்கின்றது. யாரும் கேட்பார் இல்லை. வேலை நிறுத்தம் நடக்கிறது. அதைப்பற்றி கேட்பதற்கு இதுவரை யாரும் வர வில்லை. அது வேறு இடமாக இருந்தால், அரசே சென்னை யாக இருந்தால், நிச்சயமாக முயற்சி செய்திருப்பார்கள். ஆனால், அங்கே இருப்பவர்கள் அரசாங்கத்தை அணுகியிருக்கின்றார்கள். பலன் இல்லை. அந்த தொழிலாளர்களின் சார்பாக ஆயிரக் கணக்கான விவசாயிகள் போராடத் தயாராக இருக்கின்றார்கள். அப்படி ஒரு போராட்டத்தை கொண்டு வந்தால்தான், அரசாங் கத்தின் தலையீடு இருக்கும் என்று சொன்னால், அதைச் செய் வது மிகச் சுலபம். ரொம்ப நேரம் ஆகாது. எனவே, அரசாங் கம் இதிலே உடனடியாகத் தலையிட வேண்டும். தலையிட்டு அந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட பகுதியின் சட்டம் ஒழுங்குப் பிரச்னை என்று மட்டும் பார்க்கா மல், கடமை உணர்ச்சியோடு இந்தப் பிரச்னையிலே தீர்வு காண வேண்டும்.

நான் அனுபவத்திலிருந்து சொல்கிறேன். எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள்கூட சொன்னார்கள். மதுவிலக்கு சட்டம் வேண் டாம் என்று சொன்னோம். முதல் அமைச்சர் அவர்கள் குடிக் காமல் இருக்கலாம். குடிக்கக்கூடாது என்ற அவரது முடிவு நல் லதுதான். ஆனால், நடந்தது என்ன? மதுவிலக்கு கொடுமையை அவரே உணர்ந்து, இப்போது கடுமையான தண்டனை வேண்டாம் என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்

1979 அக்டோபர் 27] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

கிறது. அன்றைக்கு இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப் படுவார்கள் என்றும், இந்தக் கடுமையான சட்டம் வேண்டாம் என்றும் அன்றைக்கு நாங்கள் எடுத்துச் சொன்னோம். எங்களைக் கேட்கவில்லை. ஆனால், இன்றைக்கு அனுபவம் அதை எடுத்துக் காட்டுகிறது. அந்த அனுபவத்தின் அடிப்படையில் இன்றைக்கு முதல் அமைச்சர் அவர்கள், அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறவேண்டும் என்று அறிவிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக் கின்றது.

ஆகவே, இம்மாதிரி விஷயங்களில் முதல் அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சியிலுள்ள எல்லோரையும் கூப்பிட்டுப் பேசி, பிரச்னை களைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும். இதனால் சில பிரச்னைகள் தீராமல் இருக்கலாம். ஆனால், பெரும்பாலான பிரச்னைகள் தீரும். அந்த அணுகு முறையைத் தான் எடுக்க வில்லை என்பதைக் குற்றச்சாட்டாக இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

அது மாத்திரமல்ல. விவசாயப் பிரச்னை. மாண்புமிகு விவ சாயத்துறை அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் இராமநாதபுரம் வந்தபோது, உண்மையிலேயே விவசாயிகளுடைய பிரச்னையைப் பார்க்கும் போது, மிகவும் பரிதாபமாக இருந்தது என்று சொன்ன தாகப் பத்திரிகையிலே படித்தேன். ஆகவே, விவசாயிகளுடைய வசூலை ஒத்திவைக்கிறேன் என்று சொன்னார்கள். தள்ளிவிடு கிறேன் என்று சொல்லவில்லை. ஆனால் என்ன நடந்தது? அவர் சொன்ன மறுநாளே, திருவாடானையில் வரி வசூலுக்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. கூட்டுறவுத் துறையினர் பூட்டை உடைத்திருக்கின்றனர். இதுபற்றி போலீசில் எஃப். ஐ. ஆர். கேஸ்கூட கூட்டுறவுத் துறை அதிகாரி மூலமாக ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1—10)

அவர் அறிவித்து விட்டுப் போய்விட்டார். ஆனால் நடப்பது வேறு. அந்த மந்திரி சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனால் எங்களுக்கு உத்தரவு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். மறுநாள் திருவாடானை தாலூகாவில் பூட்டை உடைத்து ஆள் இல்லாத நேரத்தில் ஜப்தி நடக்கிறது, எஃப். ஐ. ஆர். கேஸ், இப்போது கேசை வாபஸ் வாங்க முயற்சி. ஜப்பசி மாதம் விதைக்கு நெல் வாங்க காசு இல்லாமல் விவசாயி கஷ்டப்படும் போது இப்படிப்பட்ட முறைகளைக் கையாள்வது விவசாயிகள் மத்தியில் என்ன நிலையை உருவாக்கும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆயிரக்கணக்கான அளவில் ஜப்தி என்ற பொய்யான நிலைமையைச் சொல்ல விரும்பவில்லை. உங்கள் கொள்கை சரியாக இருந்தால் ஏன் அப்படி நடக்கிறது என்ற கேள்வியைக் கேட்கிறேன்.

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 அக்டோபர் 27

விவசாயத் தொழிலாளிக்குச் சம்பள விகிதத்தை இதுவரை இல்லாத அளவுக்கு இந்த அரசு அறிவித்திருக்கிறது என்று கூறுகிறார்கள். அந்த விகிதத்தைப் பார்த்தால் ஒரு வருஷத்தில் இரண்டு விதமான கூலியை நிர்ணயித்திருக்கிறார்கள். பழைய நான்கு ரூபாயைக் காட்டிலும் அதிகம் என்று சொல்லலாம். ஆனால் இரண்டு விகிதாச்சாரம்— ஜூன் மாதத்தில் வாங்குகிற கூலியை விட அக்டோபர் மாதத்தில் வாங்குகிற கூலி குறைவாக இருந்தால் அது நடைமுறைக்கு ஒவ்வாதது அல்லவா? அது காரிய சாத்தியமானதா? இது விவசாயிக்கும், விவசாயத் தொழிலாளிக்கும் இடையே நெருக்கடியை உண்டு பண்ணாதா? இப்படிப்பட்ட அணுகு முறை சரியல்ல. ஆண்டு முழுவதும் நிரந்தரமான ஒரே கூலி இருக்கவேண்டும். இதுபற்றி அரசாங்க அறிவிப்பை நான் படித்துக் காட்டுகிறேன். ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையில் ஆண்களுக்குக் கூலி ரூ. 7.20. பெண்களுக்குக் கூலி ரூ. 5.60. அக்டோபர் மாதத்திலிருந்து ஆண்களுக்கு கூலி ரூ. 6.60, பெண்களுக்கு ரூ. 5.00 அப்படி என்ன அவசியம்? செப்டம்பர் மாதம் வாங்குகின்ற கூலியை விட அக்டோபர் மாதத்தில் குறைத்து வாங்கிக் கொள்ளுன்று சொன்னால் விவகாரம் வருமா? வராதா? இதிலே லாஜிக் வேண்டாம். இப்படி ஒரு அறிவிப்பு சரிதானா? சட்டமே சரிதானா? அதைப் பற்றிப் பரிசீலிக்காமல் சட்டத்திற்கு நியாயம் கற்பித்தால் விளைவுகள் என்ன? பழைய கூலி வேண்டுமென்று போராடுவான். இந்த முறை கூடாது.

பி. டபிள்யூ. டிப்பார்ட்மென்டுக்கு சர்க்காரைக் காட்டிலும் சுப்ரீம் பாடி என்ற நினைப்பு. எஜுகேஷன் டிப்பார்ட்மென்டில் ஒன்பது அம்சக் கோரிக்கையில் உண்ணாவிரதம் இருந்தேன். அரசாங்கம் பள்ளிக்கூடத்திற்குப் பணம் ஒதுக்கியிருக்கிறது. எட்டு மாதத்திற்கு முன்னால் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் பள்ளிக் கூடம் கட்டவில்லை. ஏன் என்றால் பி. டபிள்யூ.டி. அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களாம். பணம் ஒதுக்கி எட்டு மாதமாகிவிட்டது. அதற்காக நான் உண்ணாவிரதம் இருக்கிறேன். நான் உண்ணாவிரதம் இருக்கிறேனே என்பதற்காக அதை நிறுத்துவதற்காக ஒரு வாணத்தை வெடிக்கிறார்கள். அது மூன்று மாதமாக அப்படியே இருக்கிறது. ஏதோ ரிவைஸ்டு எஸ்டிமேட் போட்டு அனுப்புகிறார்களாம். மக்கள் மத்தியிலே என்ன உணர்வு வரும்? நான் ஒரு துறையைக் குறை சொல்லவில்லை. அந்த இலாகாவிலே அரசாங்க இயந்திரத்தினுடைய பிடிப்பு எந்த அளவிற்கு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அந்தத் தவறைப் போக்குவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால் என்ன நிலைமை? அவர்கள் அனுப்புகிற ரிப்போர்ட்டை அரசாங்கம் நம்புகிறது. நான் உண்ணாவிரதம் இருந்தேன். ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. தமிழ் நாட்டிலே இந்த அரசு அமைந்ததற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்களும் இந்த அரசும் என்ன சொன்னார்கள் என்றால் தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலேயும் குடிநீர் பிரச்சினை

1979 அக்டோபர் 27] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

தீர்க்கப்படும் என்றும், குடிக்கத் தண்ணீர் இல்லாத கிராமங்களில் எல்லாம் குடிநீர் கிடைக்கச் செய்வோம் என்றும் சொன்னார்கள். குடிதண்ணீருக்காக அடி பைப் போடவேண்டுமென்ற கோரிக்கை தான் அது. வேறு ஒன்றும் இல்லை. குடிக்கத் தண்ணீர் வேண்டும். அதுதான் கோரிக்கை. சாலை வேண்டும் என்ற மனு, பஸ் விடவேண்டுமென்ற மனு, இந்த மனு தான் வரும். வேறு எந்த மனுவைக் கொடுக்கப் போகிறார்கள்? சோஷலிசம் அமையவேண்டும் என்பதற்காக மனுக் கொடுக்கப்போவதில்லை. எல்லாம் குடிநீர் வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள்தான். இந்த மனுவின் மீதே ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசாங்கத்திற்கு அதிகாரி ஒருவர் ரிப்போர்ட் அனுப்புகிறார் என்றால்—திருப்பத்தூர் தொகுதியில் குடிதண்ணீர் பற்றாக்குறையே இல்லை—என்று ரிப்போர்ட் அனுப்புகிறார். அரசாங்கம் எனக்கு பதில் அனுப்புகிறது அப்படியே. அது உண்மையான நிலைமை அல்ல. இப்படிப்பட்ட முறையிலே ஒரு அதிகாரி ரிப்போர்ட் அனுப்புகிறார் என்றால் நான் அதை நான்கு பொதுக் கூட்டத்திலே சொன்னேன் என்றால் அப்படிச் சொன்ன அதிகாரி யார், அவர் இந்த ஊருக்குள்ளேயே வரக் கூடாது என்று சொல்வார்கள். பதில் அனுப்புகிற அதிகாரி, திருப்பத்தூரில் குடி தண்ணீர்ப் பிரச்சினை கூடிய விரைவில் தீர்ந்துவிடும் என்று அறிக்கை அனுப்பலாம், பரவாயில்லை. ஆனால் குடிதண்ணீர்ப் பிரச்சினையே அங்கே இல்லை என்று அறிக்கை அனுப்புகிறார் என்றால் நான் அந்த அதிகாரியைக் குற்றம் சாட்டவில்லை. இந்த அரசாங்கம் தான் அதற்கு முழுமையான பொறுப்பை ஏற்கவேண்டும். அரசாங்கத்தின் தவறான நிலைமை தான் காரணம். அதிகாரி அப்படி ரிப்போர்ட் அனுப்புகிறார் என்றால் ஏன் அவர்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தெரியவில்லை. அது அரசாங்கத்தின் பொறுப்பு இல்லையா? அதை விட்டுவிட்டு, அவர் கொடுத்தார், நாங்கள் அனுப்பினோம், என்று சொல்வது சரியல்ல.

அந்தந்தக் கட்சிகளுக்குள்ளே அவரவர்கள் மனம் திறந்து பேசுகிறார்கள், பேசலாம். சட்டமன்றத்திலேயும் பேசலாம். அதனாலே ஒன்றும் இல்லை. மக்களிடத்திலே நான் போனால் என்ன கேட்கிறார்கள் என்றால் தொகுதிக்காக ஒன்றும் செய்யவில்லையே, தொகுதிக்காக என்ன செய்து கிழித்துவிட்டாய்? அலவன்ஸ் கூடியிருக்கிறதாமே, அலவன்ஸை கூட்டிவிட்டீர்களா என்று தான் கேட்கிறார்கள். திட்டவட்டமாக ஒவ்வொரு தொகுதியினுடைய பிரச்சினையும் என்ன என்று எடுத்துக்கொண்டு, அதிலே என்ன காரியங்கள், குறைபாடுகள் என்று பார்த்து இந்த அரசாங்கம் ஒரு கொள்கையை உருவாக்கி அதன் மூலம் அவைகளை நிவர்த்தித்து, பரவலாக மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து செயலாற்றக்கூடிய போக்கு இல்லை. எல்லா தொகுதிகளைப்பற்றியும்தான் சொல்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் தொகுதிகளையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். அந்தத் தொகுதியிலே செய்துவிட்டார்கள்,

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 அக்டோபர் 27

என்னுடைய தொகுதியிலே செய்யவில்லை என்று சொல்லவில்லை. இதற்குப் பதில் அந்த சலுகை என்ற முறையிலே நான் பேச வில்லை. எல்லா தொகுதிகளுக்கும் சேர்த்துத்தான் நான் சொல்கி றேன்.

சென்னையிலும், மதுரையிலும் பார்த்தால் ஏதோ கொஞ்சம் வேகமாக இருக்கிறது. சாலைகளிலே சல்லி கொஞ்சம் அதிக மாகி இருக்கிறது. சல்லியின் கனம் அதிகமாகியிருக்கிறது, முன்பை விட கொஞ்சம் உயர்ந்திருக்கிறது. ஆனால் பெருவாரி யான இடங்களிலே இன்னும் பல்லாங்குழியாகத்தான் இருக்கிறது. பல்லாங்குழி என்று நான் சொல்வது புரியும் என்று நினைக்கி றேன். பல்லாங்குழி விளையாடுவதற்கு கட்டை தேவையில்லை. சாலைகளிலேயே உட்கார்ந்து பல்லாங்குழி விளையாடலாம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு தார் சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகளிலே போகிற அமைச்சர்களுக்கு தெரியும். அமைச் சர்களுடைய செயலாளர்களுக்குத் தெரியும், ஏராளமான சாலை களின் நிலைமை அதுதான். அப்படியானால் ஒதுக்கப்பட்ட பணம் எப்படி செலவழிக்கப்பட்டிருக்கிறது, என்ன குறை என்று அறிய வேண்டாமா? அதற்காக ஒரு கூட்டு நடவடிக்கை தேவை யில்லையா? அந்தச் சாலைகளிலே இப்படிப்பட்ட நிலைமைகள் வரக் காரணம் என்ன? கிங்கரர் போன்ற கான்ட்ராக்டர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையே பேச்சு நடக்கிறது. அரசாங்கம் பணம் அனுமதித்துவிட்டதா என்று கேட்டால் அரசாங்கம் பணமே கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். காரியமே நடக்காத நிலைமை இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல் கிறேன், பொதுவாக நான் பேசக்கூடாது, திருப்பத்தூர்-கன்ட்ரா மாணிக்கம் சாலை காரைக்குடி தொகுதி, திருப்பத்தூர் தொகுதி இரண்டையும் சேர்ந்தது. அந்த சாலை வேலைக்காக 80 ஆயிரம் ஒதுக்கப்பட்டு ஒன்றரை வருடம் ஆகிறது. ஏன் என்று கேட்டால் இரண்டு முறைகள் டெண்டர் விட்டும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் கமிஷன் பிரச்சினை நடந்து கொண்டிருக்கிறது. என்ன நடந்திருக்கிறது, பரிகாரம் என்ன, வேலையில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதா, ஏன் நடக்க வில்லை என்ற பரிசீலனை உண்டா? அந்தக் காரணத்தைக் கண்டு பிடித்து அதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முயற்சி உண்டா ?

[பிற்பகல் 1-20]

எத்தனை தடவை சொல்வது ? சொல்லிச் சொல்லி அலுத்துப் போகிறது? திருப்பித் திருப்பிச் சொல்வதால் அலுத்து போகிறது? அதனால்தான் இந்த நிலைமை உண்டாகிறது. எனவே அதற்குப் பதிலாக ஊருக்குள் இருக்கும் மக்களைத் திரட்டுவது என்ற நிலைமை உண்டாகின்றது. யாரும் எம்.எல்.ஏ. வாக நின்று ஜெயிக்க வேண்டுமென்றால், அமைச்சரிடத்தில் சொல்ல வேண் டாம், சட்ட சபையில் சொல்ல வேண்டாம், ஊருக்குள் இருக்கின்ற ஆட்களைத் திரட்டி எதையாவது செய்து கொண்டிருப்போம், அப்பொழுதுதான் எம்.ஏல்.ஏ., எதையாவது செய்வார் என்று

1979 அக்டோபர் 27] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

மக்கள் நம்புவார்கள். இப்படி அரசாங்கத்தின் அணுகுமுறையின் காரணமாக, அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள் செயல்படக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப்பற்றி இரகசியமாகச் சொல்கிறேன் என்ற உணர்வு அவர்களுக்கு வரக்கூடாது, மக்களைப் பார்த்து நீங்களே டோய்க் கேளுங்கள், சொல்லுங்கள் என்று சொல்லும் நேரத்தில் சில நிலைமைகள் ஏற்படுகின்றன. அதுதான் கிளர்ச்சிக்குச் காரணம், அதுதான் போராட்டத்திற்குக் காரணம். மக்களுக்காக ஒதுக்கப்படுகின்ற பணத்தை முறையாகச் செலவு செய்து அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளைக் கொண்டு போகாவிட்டால் நிச்சயமாகப் போராட்டங்கள், கிளர்ச்சிகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதிலும் தேர்தல் நெருங்க நெருங்க அது இன்னும் கூடும் என்பது உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். எனவே, அதில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்பு ஒன்று வருகிறது, அதாவது புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து இருப்பவர்கள் உடனே வெளியேற்றப்படுவார்கள் என்ற அறிவிப்பு வருகிறது. அப்பொழுது நான் ஒரு நோட்டீஸ் போட்டேன். காங்கிரஸ் ஆட்சியிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் வெளியேற்றாதவர்களை ஏன் வெளியேற்ற வேண்டும்? 20 வருஷங்களாக உழுது கொண்டிருப்பவர்களை ஏன் வெளியேற்ற வேண்டும். 20 வருஷமாக ஏன் அவன் உழுது கொண்டிருந்தான் என்பதைக் கவனிக்க வேண்டும். அதற்காக தாசில்தார், எம்.எல்.ஏ., போன்ற ஐந்து பேர்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு பரிசீலனை செய்ய வேண்டும். அப்படியில்லாமல் ரெவின்யூ அதிகாரியாகப் பார்த்து இவ்வாறு செய்வது அரசுக்கு நல்லது அல்ல. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயும் வெளியேற்றவில்லை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலேயும் வெளியேற்ற வில்லை, ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் வெளியேற்றுகிறார்கள் என்று நினைக்கும் பொழுது அவனுக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது, உணர்ச்சி ஏற்படுகிறது. பிறகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நியாயமாகப் பரிசீலனை செய்வோம் என்று ரேடியோவில் சொன்னார்கள். எனவே, இப்படிப்பட்ட பொதுவான விஷயங்களைப்பற்றி பொது ஞானத்தோடு பரிசீலனை செய்ய வேண்டும். நம்முடைய நிலையிலே இருந்து பார்க்காமல் சமுதாய நலனோடு ஒப்பிட்டுப் பார்த்துச் செய்ய வேண்டும்.

மற்றொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். திருப்பத்தூரில் மரமேறி நாடார் உறவினர் எர்ப்பவர்கள் சங்கம் வைத்துக்கொள்வதற்காக ஒரு இடத்தை விலைக்கு வாங்கினார்கள். அது ஒரு டிரம்போக்கு நிலம். பிறகு அங்கே பட்டா வாங்கி விட்டார்கள். ஆனால் பிறகு அந்தப் பட்டாவை ரத்து

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1979 அக்டோபர் 27

செய்து ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அங்கே வீடு கட்டுகிறார். நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே சுமார் இரண்டாயிரம், மூன்றாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரே யொரு ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்காக அங்கே வீடு ஏன் கட்ட வேண்டும். எனவே இப்படி நடக்கிறது என்று மனுக்கள் வருகின்றன, ரெப்ரசன்டேஷன்கள் வருகின்றன. கோர்ட்டிலே ஸ்டே வாங்குகிறார்கள், ஹைகோர்ட்டிலே ஸ்டே வாங்குகிறார்கள். கட்டக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மீண்டும் கட்டுகிறார்கள். அப்படியானால் அரசாங்கத்தைப்பற்றி மக்களுக்கு என்ன உணர்வு வரும் என்பதைச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு திருப்பத்தூரில் நடக்கிறது. அங்கே அந்தச் சமுதாய மக்கள் மூவாயிரம் பேர் பாதிக்கப்படும்பொழுது அரசாங்கம் ஏன் தலையிடவில்லை? அதிகாரிகள் என்றால், ஆயிரக்கணக்கான ஜனங்கள் அரசாங்கத்திற்கு விரோதமாகத் திரும்புகின்ற வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்களா? ஆனால் அப்படிச் சொல்லவில்லை. அரசாங்கத்திற்குத் தகவல் கொடுத்தோம், தந்தி கொடுத்தோம். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படிப்பட்ட உங்களின் கொள்கையின் காரணமாக மக்கள் உங்களுக்கு எதிரிகளாக்கப்படுகிறார்கள். இம்மாதிரி நூற்றுக்கணக்கான பிரச்னைகள் பற்றி உதாரணங்களை ஆதாரபூர்வமாகச் சொல்ல முடியும்.

ஆகவே, அரசாங்க யந்திரம் விவசாயிகள் கொள்கையாக இருந்தாலும், தொழிலாளர் கொள்கையாக இருந்தாலும் பெருவாரியான மக்களுக்காக நாம் என்ன கொள்கைகளை அனுசரிக்கிறோம் என்று பார்க்க வேண்டும். நாங்கள் தூய்மையானவர்கள், நாங்கள் நல்லவர்கள் என்று சொன்னால் மட்டும் போதாது, பெருவாரியான மக்களுக்குக் காரியங்களைச் செய்து அவர்களது அன்பைப் பெறுகிறோம் என்ற வகையில் அமைய வேண்டும். செய்யக் கூடிய காரியங்களைப்பற்றிக் குற்றங்கள் சொல்லலாம். இருந்தாலும் கூட்டு ஞானத்தோடு செயல்பட வேண்டும். இதுபற்றியெல்லாம் பெரிய விவகாரம் இருக்கிறது, நான் அவைகளை இந்தக் கூட்டத்தில் சொல்ல வில்லை, இன்னொரு கூட்டத்தில் பேசுகிறேன். நான் இதையெல்லாம் எடுத்துக்காட்டுகின்றபொழுது, கண்டனத் தீர்மானமாக ஒரு குறிப்பிட்ட பிரச்னை வரும்பொழுது கட்டாயம் இந்த அரசாங்கத்தின் தவறைக் கண்டிக்க எதிர்க்கட்சிகளுக்கு உரிமை உண்டு. இன்றைக்குத் தேர்தல் வரலாம், ஒப்பந்தம் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம், ஆனால் அரசாங்கத்தின் தவறைக் கண்டிப்பதைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறோம், இப்பொழுதும் செய்வோம் என்று கூற விரும்புகிறோம். இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது, 29 – 10 – 1979 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.